IATA
SKY WINGS
TRAVEL & TOURS
"WHERE THE SUN NEVER SETS"
Cheapest Worldwide Fares with the Best Service
We are the authorised main agents for
Sri Lankan, Jet Airways, Qatar, Kuwait, Oman & many more
Reservation Please call: 02086729111
Head Office:
119 Tooting High street
London, SW17 0SY
Mob: 07850876921

BILINGUAL FORTNIGHTLY
# ஒரு பேப்பர்
ORU PAPER
FREE
PAPER - 08 ◆ ISSUE - 169 ◆ FRIDAY 04 MAY 2012

LONDON ACCIDENT CLAIMS LIMITED
வாகன விபத்தா? உங்கள் தவறில்லையா?
Driver / Passenger – within last 3 years
* (Neck, Back & Shoulder Pain)
NO WIN NO FEE
(Terms & Conditions Apply)
Mini cab ஓட்டுனர்களுக்கு "PCO" உடன் வாகனம் வழங்கப்படும்
Call Free:0800 032 6798 | Tel: 020 8665 7667
Web: www.lacl.co.uk | Mail: info@lacl.co.uk

உங்கள் வாழ்க்கைத் துணையை இணையத்தில் தேடுங்கள் WWW.ORUMANAM.COM




புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன
Keyboard
அனுபவம் மிக்க ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகிறது
OEBL Syllabus, Trinity college
Syllabus க்கு ஏற்ப கற்பிக்கப்படுகிறது.
New malden, Morden, Sutton
Contact : 07917 128 581

உங்கள் தேவைகளை எம்மிடம் தமிழிலே உரையாடி உங்கள் பயணத்தை மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்
மேலதிக தகவல்களுக்கு எமது CROYDON அல்லது HAYES கிளைகளை நாடுங்கள்
BRITISH AIRWAYS
Flyplaces
Worldwide Travel & Tours
info@flyplaces.co.uk - www.flyplaces.co.uk
COLOMBO from £169 | CHENNAI from £189 | TORONTO from £199
விசேட விமான சலுகைகளுக்கும் மேலதிக தகவல்களுக்கும் இன்றே எமது வாடிக்கையாளர் சேவைக்கு தொலைபேசியில் அழையுங்கள்
020 8866 3311
BOOK WITH CONFIDENCE
PRICE MATCH GUARANTEED
*Note: All fares mention above are low season, excluding taxes & terms.

WANTED
Join with one of the UK's leading Newspapers.
We require persons with good Communication skills in Tamil and English.
Interested candidates Email your CV to
info@orupaper.com

SHOP FOR SALE
Well established Indian Textile shop for sale in
TOLWORTH
மேலதிக விபரங்களுக்கு
Call: 07440551481

குழந்தைப் பாக்கியம் கிடைக்காதோர் வாழ்க்கைக்கு ஒளியூட்டுங்கள்!
நீங்கள் 35 வயதுக்குள் இருந்தால் கருமுட்டை தானம் செய்து அதற்கீடாக '£750' ஐ அன்பளிப்பாகப் பெற்றுக் கொள்ளுங்கள்
HARLEY STREET FERTILITY CLINIC
HSFC
Director: Dr Geetha Venkat MD, FRCOG
43 Devonshire Street, London, W1G 7AL
Phone: +44 (0)20 7436 6838

PAWNBROKERS
தங்கம், நகைகள், கைக்கடிகாரம், கார்கள் மற்றும் பெறுமதியான பொருட்களுக்கு ஈடாகக் கடன் வழங்கப்படும்.
* தாராளமான கடன் தொகை
* தனிப்பட்ட ரீதியான சேவை
* மிகச் சிறந்த விதம்!
* இந்த விளம்பரத்தைக் கையளிப்போருக்கு 10%கழிவு
Est. 1976
www.maxcroft.co.uk
Maxcroft Tel 020 8518 1828
632 Eastern Ave, Ilford, Essex
IG2 6PG (Near Gants Hill Tube)

அனைத்து செய்திகளும் உடனுக்குடன்
Special Offer
Mail: lankafastnews@gmail.com
Skype: lankafast1
http://www.lankafast.com/
(0044) 07572870473

ஓசியாய் வாசிக்க ஒரு பேப்பர்

## Prime Training College முதன்மை குடியுரிமை பெறும் பரீட்சைகள்

**Our services:**

- ESOL with citizenship
- Point Base Test
- Spouse Visa Test
- Multilingual Staff

You Pay Only Once, We Train You until You Pass, Certificate with 20 Days

பிரித்தானியா பற்றிய விடயங்களை ESOL பயிற்சி மூலமும் குடியுரிமை வகுப்புக்கள் மூலமும் அதியுச்ச பயிற்சி வழங்குகின்றோம்.

சனி மற்றும் ஞாயிறுகளிலும் வகுப்புக்கள் உண்டு.

நீங்கள் சித்தியடையும் வரை உங்களைப் பயிற்றுவோம்- மேலதிக கட்டணம் இல்லை

Tel: **020 8150 9953** | Mob: **075 3893 3261**

**Head Office**
14 Lombard Business Park, 2 Purley Way,
Croydon CRO 3JP.
www.primetrainingcollege.co.uk

உங்கள் பரீட்சைக்கு தயார் படுத்தும் வகுப்புகளுக்கு
£ 190 .00 மட்டுமே
(பரீட்சைக் கட்டணம் உட்பட)
இங்கே சனி 10.00 மணிக்கு
ESOL வகுப்புக்கள் உண்டு



## இயேசு அழைக்கிறார்

பாவக்கட்டா? சாப தோஷமா?
கவலையா? கண்ணீரா? வியாதியா?

உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும் – யோவான் 16:20
தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை – லூக்கா 1:37

இதோ! சீக்கிரமாய் வரப்போகின்ற இறைவன் இயேசுவை ஆராதிக்க வாருங்கள்.

துதி ஆராதனை ஞாயிறு காலை **10:00** | தொடர்ந்து சிறுவர் பாடசாலையும் நடைபெறும்

இடம்: GLORY CHURCH OF GOD - U.K.
1,George Lane, Lewisham, London SE13 6HQ.
(Near Lewisham Hospital and Behind the Ealam Shop)

**Bus:** 47, 54, 75, 136, 185, 208
**Station:** Catford, Lewisham,
**DLR:** Lewisham

Contact: **Pr.Robert Bhaskharan**
Tel:**020 8695 1510 | 077 3761 2352**
Email: glorychurchofgod@yahoo.co.uk, robert_bhaskharan@yahoo.co.uk



பிரியமானவர்களே...
**"உங்கள் துக்கம் சந்தோசமாய் மாறும்"**

இந்த தேசத்தில் உன் உள்ளம் எதை குறித்து கலங்குகிறது?

- கணவனின் குடி பழக்கத்தினால் நோகடிக்கப்படுகிறாயா?
- குழந்தையின் உடல் உள நிலையை குறித்து கலங்குகிறாயா?
- மரணத்திற்கேதுவான நோயா?
- கடன் தொல்லையா?
- பில்லி சூனியமா?
- பிள்ளைகளை குறித்து பாரமா?
- மன அழுத்தமா?
- கணவன் மனைவிக்கிடையில் பிரச்சனையா?
- திருமணமாகி குழந்தைகள் இல்லை என்று கலங்குகிறாயா?

*அருள்நாதர் இயேசு சொல்கிறார்*
*"வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே என்னிடத்தில் [இயேசு] எல்லோரும் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்."*
*வாருங்கள் ஜெபிப்போம் இயேசுவின் நாமத்தில் ஜெயம் பெறுவோம்.*

**ஞாயிறு ஆராதனை நடைபெறும் இடம்:**
19-21 Bellingham Estate, Bellingham,
Catford, Lewisham. SE6 3BX
**நேரம் 2. 30 pm**
[Near **Bellingham station**]
[Bus Stop **Catford Bus Garage** ]
[**Bus route no**: 47,54,136, 171 ,199, 208, 320]

தொடர்புகளுக்கு: **நல்ல சமாரியன் தேவ சபை**
**Bro. Edmond**
**Mob: 07877 977 086 Tel: 020 8691 2705**



## KALVIKOODAM TUITION CENTRE

லண்டன் வாழ் இலங்கைத் தமிழருக்கு ஓர் இனியசெய்தி.....!!!

FREE BASIC TAMIL LESSONS

TAMIL LESSONS
BEGINNERS
INTERMEDIATE
ADVANCED
£5/hr

MATHS
ENGLISH
SCIENCE
£10/hr per subject

தமிழ்மொழியை கற்க ஓர் சிறந்த இடத்தினை தேடிக்கொண்டிருக்கும் உங்களுக்காக ஓர் **கல்விக்கூடம்**"

தமிழ்மொழி மட்டுமின்றி கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் போன்ற இன்னும் பல பாடங்களை ஒரே கூரையில் கற்க நாடவேண்டிய ஒரே இடம்.

**'கல்விக்கூடம்'**

edexcel
advancing learning, changing lives

IGCSE

பிரதி ஞாயிறு தோறும்
10.00 மணிமுதல் – மாலை 08.00 மணிவரை நடைபெறும்

– தொடர்புகளுக்கு –
**020 8090 3366**
**07738 056 950**
www.kalvikoodam.co.uk

Harrow Branch
167, Imperial Drive
Harrow, HA2 7HD

Wembley Branch
24-28, London Road,
Wembley, HA9 7EX

Edgware Branch
2, Turner Road,
Edgware HA8 6BJ



## UK COOL AND SHOP FITTING

168, Manor farm Road, Wembley, Middlesex, HA0 1DD, UK
MOB: 07788289281,07951854057(KUMAR) TEL: 02033710046 EMAIL: ukcool247@yahoo.co.uk

UK COOL & SHOP FITTING LTD

**REFRIGERATION**
Air Condition
Fridge
Freezer
Cold Room (New & Used)
Repairing & Installation

**SHOP FITTING**
Shelving
Flooring
Ceiling
Lighting & Wiring
Counter
CCTV Cameras
Shop Front & Shutter

**BUILDING WORK**
Roofing
Extension

**MOVING & DEVILERY**

7 Days 24 HRS services & Repair

URGENT REPAIR?
CALL:07951854057

1 YEAR PARTS & LABOUR WARRANTY



## RASIKAPRIYA

proudly presents
A Sensational Veena Concert by
RAJHESH VAIDYA

Main Sponsor
CONSTANTINE Associates

In Aid Of
Little Aid
Charity No :1129895
Making a big difference in Sri Lanka




Venue: Watermeet Theatre
High Street
Rickmansworth
WD3 1EH

Date: 20th May 2012
Doors Open: 04.00pm
Programme start: 04.30pm

Tickets £50, £25 and £15
Family Ticket (Admit 4) £40

Ticket Sales
07958042719 - Mano
07919444994 - Tarin
07958136517 - Somu Designs
07563068978 - Theeran
07787127140 - Cyril Alfred

Tickets Also Available From



## தள்ளாத வயதில் கொள்ளாத ஆசை......

இளம் வயதில் தன் மனைவிக்கு காதுகளில் சொருகி அழகுபார்த்த சிமிக்கியை, வயதான காலத்தில் மீண்டும் சொருகவைத்து அநியாயமாக ஒரு அன்புத் தம்பதியினரை இழக்க வைத்த பழி சாத்திரியாரையே சாரும். சும்மா சொல்லக்கூடாது, என்னை அறியாமலேயே இரு சொட்டுக் கண்ணீரை வரவழைத்த சாத்திரியின் ஆக்கம், கற்பனையின் சிகரம்

*உமா மகாலிங்கம்*

## நீங்கள் எழுதலாம்... நாங்கள் எழுதக்கூடாதோ கடிதம்?..

முத்தமிழ் அறிஞன், செம் மொழிச் செம்மல், கலைஞர் அவர்களே ! தேர்தலுக்கு இன்னும் காலம் இருக்கிறது. பிறகு இப்போது எதுக்கையா 'தமிழீழக் கோசம்'. காங்கிரசை அழித்த சீமான் உங்களையும் அழித்துவிடுவார் என்ற பயமா? அந்திமகாலத்தில் ஏதாவது நல்லது செய்துவிட்டுப் போவோமென்று நீங்கள் சொல்வதாக நம்ம கந்தசாமி சொல்லுறான். நம்ப முடியேல்ல ஐயா....

*-ராஜா*

## கொடி பிடிச்ச சம்பந்தன்

கூட்டமைப்பு சம்பந்தன் சிங்கக் கொடியை தூக்கி ஆட்டியதைப்பற்றி பலரும் அலட்டிக்கொள்கிறார்கள். டெல்லிக்காரன் கேட்டால் கட்டியிருக்கிற வேட்டியை தூக்கிபிடிக்கக் கூடிய அடியாள் அவர் என்பதை ஏனோ மறந்துவிடுகிறார்கள். வேட்டியை தூக்கினால் நின்று பார்க்க முடியாது என்பது வேறு விடயம்.

*கயல்விழி*

## இதுக்கேன் போர்த்தேங்காய்?

பிரித்தானியத்தமிழர் பேரவையிலிருந்து வெளியேற்றப்பட்ட சுகந்தனும், சண்ணும் திரும்பவும் பதவியைப்பிடிக்க பகீரதப்பிரயத்தனங்கள் மேற்கொள்ளுகிறார்கள். ஊரைக் கூட்டி தங்களை கொமிற்றிக்கிள்ளை போடுறதுக்கு ஒரு கூட்டத்தை கூட்டினார்கள். கொமிற்றியை தெரிவு செய்வதற்கு கொங்கொங் குகன் என்பவரை கொண்டு வந்தார்கள். ஒரு அமைப்புக்கு நிர்வாகக்குழுவை தெரிவு செய்வதானால் அதற்கு ஒரு ஒழுங்கு முறை இருக்கிறது என்பதனை விளங்கிக்கொள்ளாத கொங்கொங் தன்னுடைய வேலை கொமிற்றியை தெரிவு செய்யிறதுதான் என நாண்டு கொண்டு நின்றார். நல்ல வேளை அங்கு வந்த மக்களால் இந்த முயற்சி முறியடிக்கப்பட்டது.

*ஆறுமுகம்*

## அரசியல் வாழ்க்கையின் அஸ்தமனம்

தமிழர்கள் மீது பாரிய இனப்படுகொலையை அரங்கேற்றி வரும் சிங்களபேரினவாதிகளோடுஐக்கிய இலங்கைக்குள் தமிழர்கள் சுதந்திரமாக கவுரவமாக வாழமுடியாது என்பதே வரலாற்று உண்மை. சம்பந்தர் தனது அரசியல் வாழ்க்கையின் அஸ்தமனத்துக்கு தானே அடிக்கல் நாட்டிவிட்டார் என்றுதான் கூற வேண்டும்.

*வேலவன்*

## பாவம் மாவீரர்கள்....

BTFஐ, மூத்த குடியா அல்லது இளைய குடியா வழிநடத்த வேணுமென்று நீங்கள் உங்களுக்குள் சண்டை பிடியுங்கோ. அங்க TNC , ANC , GNC எல்லாம் புற்றீசல் மாதிரி கிளம்புது. தலைவர் இளையோரிடம் போராட்டத்தை ஒப்படைத்துவிட்டார் என்று சொல்லிப் போட்டு, இப்ப ஏன் பழசுகள் எல்லாம் கதிரைக்கு அடிபடுதுகள்?.. பாவம் அந்த மாவீரர்கள்...

*-தினேஷ்*

## நீயுமா?

ஜூலியர் சீசர் தான் முதுகில் குத்தப்பட்ட போது புரூட்டஸ் நீயுமா என்றாராம். இன்று ஈழத்தமிழினம் முழுவதுமே சம்பந்தர் நீயுமா என்று கேட்டல்லவோ திகிலடைகிறது. ஐயா சம்பந்தரே ! இதய சுத்திக்கும் உமக்கும் சம்பந்தமே இல்லையென்று தோன்றுகிறதே. உமது ஆற்றல் எமக்குத் தேவை

துரோகி என்ற பெயருடன் இறக்க வேண்டாம்.

*கனகர்*

## கூடாங்குளமா நீங்களா கூழாம்பாணி?

வெள்ளை உடைக்கும் காவி உடைக்கும் ஏன் முடிச்சுப் போடுகிறீர்கள்? அணு உலைக்கும் அதுக்கும் என்ன சம்பந்தம். பொதுவுடைமையையும் திராவிடத்தையும் வேறு இழுத்துள்ளீர்கள். ஒருபேப்பர் காரன் காரிகளே, இப்படி கூழாம்பாணிக் கட்டுரைகளைப் போட்டு உங்கள் தரத்தை நீங்களே ஏன் குறைக்கிறீர்கள். தரமான எழுத்தாளர் பற்றாக்குறையா?

*கயிலைநாதன்*

## தமிழினத்தின் சுவடு

நிதார்த்தம் தவறாது எழுதும் மட்டக்கிளப்பான் இம்முறை சற்றுபயந்துவிட்டாரா? தமிழகத்தின் பங்களிப்பு இன்றியமையாததுதான் அதற்காக அவர்கள் கைவிட்டால் நாங்கள் அழிந்துவிடுவோம் என்பதை ஏற்க முடியாது. அழுதும்பிள்ளை அவளே தான் பெறவேண்டும் இல்லையா...?

*அங்கயற்கண்ணி*

## சிமிக்கி!

சிமிக்கி சிறு கதை முடிவு சிறிது மனதைத் தொட்டாலும் யதார்த்தம் கதையின் பெரும்பகுதியில் எங்கோ சென்றுவிட்டது. தொலை தொடர்பு இலாகாவில் பணியாற்றியவனுக்கு அனுபவமே இல்லையா? ஒரு சில பிள்ளைகள் தாய்தந்தையரைக் கொடுமைப் படுத்துவது ஏதோ உண்மைதான்.

ஆதற்காக நாதனின் பிள்ளைகளை மனச்சாட்சி அற்ற பிள்ளைகளாகச் சித்தரிப்பது அழகல்ல.

*சர்வசித்தன்*

## மகிந்தரே பரவாயில்லை....

மாவீரர் தினத்தில் தலைவரின் கட்டமைப்பை உடைத்தாச்சு. இப்ப முள்ளிவாய்க்கால் தினம் பி.ரி.எப் ஐ உடைக்கப்போகுது. உங்கட சண்டையைப் பார்த்தால் மகிந்தனே பரவாயில்லை எண்டு சனம் சொல்லப்போகுது.

*-மணிவண்ணன்*

## காட்டு காட்டு என்று காட்டியிருப்பார்கள்

வேல் தர்மா அவர்களின் எழுத்து நடையே தனி. கடந்த பேப்பரில் சுஸ்மா சுவராஜின் சிறிலங்கா பயணம் பற்றி எழுதிய அவர் 'இலங்கை நிலைமையைப் பற்றி இந்திய உளவுத் துறைக்குத் தெரியாததை சுஸ்மிதா சுவராஜ் கண்டறியப் போகிறாரா? இதிலும் பார்க்க நடிகை சுஷ்மிதா சென்னை அனுப்பி இருக்கலாம். அவருக்கு இலங்கை ஆட்சியாளர்கள் காட்டு காட்டு என்று காட்டியிருப்பார்கள்' என எழுதியிருக்கிறார். எள்ளலுடனான விளக்கம் பட்டென்று உறைக்கிறது.

*சுரேஸ்*

ஒரு பேப்பர் தொடர்பான உங்கள் கருத்துக்களுக்கு....
Tel : 020 7043 4314
www.facebook.com/orupaper
Email: editorial@orupaper.com

# பத்தொன்பதாம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவு நிகழ்வு

– பிரித்தானிய தமிழர் பேரவை

தமிழின அழிப்பின் உச்சகட்டமான முள்ளிவாய்க்கால் படுகொலைகளின் மூன்றாம் ஆண்டினை நினைவுகூருமுகமாக மத்திய லண்டனில் உள்ள ரபல்கர் முற்றத்தில் (Trafalgar Square) எழுச்சி நிகழ்வினை பிரித்தானிய தமிழர்பேரவை ஏற்பாடு செய்துள்ளது. மே 19ம் திகதி மாலை 5மணிக்கு ஆரம்பமாகும் இந்த நிகழ்ச்சியில் தமிழ் மக்களை பெருமளவில் வந்து கலந்துகொள்ளுமாறு அவ்வமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.

புலம்பெயர் நாடுகளில் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவுநாள் கடந்த இரண்டு வருடங்களாக மே 18ம் திகதியே நினைவு கூரப்பட்டு வந்தது. இம்முறை ஏன் அதனை மே 19 நாளுக்கு மாற்றியுள்ளீர்கள் என பிரித்தானிய தமிழர் பேரவையின் ஊடகப்பேச்சாளர் சுதாவிடம் வினவினோம். இம்முறையும் தாம் மே 18ம் திகதியே நிகழ்ச்சியினை நடாத்த ஏற்பாடுகளைச் செய்ததாகவும், ஆனால் அதற்கான அனுமதியை பெற்றுக் கொள்ள முடியாமல் போய்விட்டது என அவர் வருத்தம் தெரிவித்தார்.

அவ்வாறாயின் இதுபோன்ற நிகழ்வுகளை நடாத்துவதற்கு நீங்கள் முன்கூட்டியே திட்டமிடப்படுவதில்லையா எனக் கேட்டோம். 2011ம் ஆண்டு நொவெம்பர் மாதத்திலேயே அனுமதிகோரி விண்ணப்பித்ததாகவும் ஆனால் இடையில் ஏற்பட்ட குழப்பத்தினால் உரிய திகதியில் அனுமதி பெறமுடியவில்லை எனத் தெரிவித்த அவர், அந்தக்குழப்பம் என்ன என்பதனையும் விபரித்தார்.

முன்னர் இதுபோன்ற நிகழ்வுகளை பிரித்தானிய தமிழர் பேரவை நடாத்தும் போது, அனுமதிகோரும் விண்ணப்பங்களை அனுப்பும் பணியில் ஈடுபட்டு வந்த திரு. விஜயநேசன் ஜெயந்தன் என்பவர், இம்முறை பிரித்தானிய தமிழர் பேரவைக்குபோட்டியாக தானும் ஒரு விண்ணப்பத்தை அனுப்பியிருந்தார். இவ் விண்ணப்பத்தை ஆதரிப்பதாக, பிரித்தானிய தமிழர் பேரவையின் முன்னைய தலைவர் திரு. நல்லைநாதன் சுகந்தகுமார் அவர்களும் முன்னைய செயலாளர் திரு. நவரத்தினம் சண்முகநாதன் அவர்களும் ஒரு கடித்தை லண்டன் பெரும்பாக அதிகாரசபைக்கு அனுப்பியிருந்தனர். இதனால் ஏற்பட்ட குழப்பங்களினால் மே 18ம் திகதிக்கான அனுமதியைப் பெற முடியவில்லை என விளக்கினார்.

குறித்த ஒரு இடத்திலதான் இந்த நிகழ்வை நடாத்த வேண்டியதன் அவசியம் என நாம் கேட்டபோது, மத்திய லண்டனில் அதிகம் மக்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் இந்த நிகழ்வை நடாத்தினால்தான், எமது வேதனையை மற்றவர்களும் அறிந்து கொள்ள முடியும் என்பதாலேயே தாம் ரபல்கர் முற்றத்தில் இதனை நடாத்த வேண்டும் என்பதில் உறுதியாக இருப்பதாக அவர் தெரிவித்தார்.

யூத இனத்தவர்கள் holocaust என நினைவு கொள்ளப்படுவது போல், ஆர்மேனிய மக்களுக்கு துருக்கியில் நடைபெற்ற இனப்படுகொலை நினைவு கொள்ளப்படுவதுபோல் ஈழத்தமிழ் மக்களின் மீது நடாத்தப்பட்ட இனப்படுகொலை 'முள்ளிவாய்க்கால்' நினைவுநாளாக உலக மக்களால் நினைவுகூரப்பட வேண்டும். அத்தகைய நிலையை நாம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். வெறுமனே எங்களுடைய மக்களைக் கூட்டி நிகழ்ச்சிகளை நடாத்துவதனால் இதனை சாத்தியப்படுத்த முடியாது என பிரித்தானிய தமிழர் பேரவையினைச் சேர்ந்த திரு. இராஜ்குமார் எம்மிடம் தெரிவித்தார்.

திரு. இராஜ்குமார் குறிப்பிட்டதுபோல், ஈழத்தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்டுவரும் அநீதிகளை உலகறியச்செய்வதன் மூலமே தமிழ்மக்களின் போராட்டத்தின் நியாயப்பாடுகளை வெளிப்படுத்த முடியும். முள்ளிவாய்க்கால் நினைவு நாளில் அப்பணியினை செய்ய வேண்டியது புலம்பெயர் தமிழ் மக்களின் கடமையாகிறது.

முள்ளிவாய்க்கால் நினைவு வாரத்தில் சர்வதேச விசாரணையை வேண்டி பிரித்தானிய அரசைக்கோரும் மனுவில் அதிகளவிலானவர்களை ஒப்பிடமிட வைக்கும் முயற்சியில் ஈடுபடப்போவதாக பிரித்தானிய தமிழர் பேரவை தெரிவித்துள்ளது.

சர்வதேச விசாரணையை வேண்டி பிரித்தானிய அரசைக்கோரும் மனுவில் கையெழுத்து இடுங்கள்....
http://epetitions.direct.gov.uk/petitions/14586

TrainingConnect
www.trainingconnect.co.uk
E-mail: courseinfo@trainingconnect.co.uk Tel:+44(0)207 099 2400

Head Office: 9th Floor, Vista Centre, 50 Salisbury Road, Hounslow TW4 6JQ
0207 099 2400

➡ESOL with Citizenship
• British Passport/ Naturalisation
• Indefinite Leave to Remain
➡International ESOL Diploma
• Student Visa / Extension Test
• Spouse Visa / Extension Test
• Work Permit / Extension Test



• Courses from £200
• Successfully trained over 35,000 students
• Certificates within 20 days
• Multilingual staff
• City & Guilds approved centre

National Centres

BIRMINGHAM
7 Washington Street
Birmingham
B1 1JR
01216339919

SHEFFIELD
Sorby House
42 Spital Hill, Sheffield
S4 7LG
01143034303

LEICESTER
Imperial House
St Nicholas Circle, Leicester
LE1 4LF
01163260248

LUTON
169 A, Dunstable Road
Luton.
Beds – LU1 1BW
01582723123

SLOUGH
18-24 Stoke Road
Slough, Berkshire
SL2 5AG
01753722056

NEWCASTLE
51-52 Victoria Avenue
Whitley Bay, Tyne & Wear
Newcastle Upon Tyne – NE26 2BA
01912525265

FREE INITIAL ASSESMENT

London Centres: Hounslow, Wembley, Kenton, Whitechapel, Camden, Holloway.

ஒரு பேப்பர்
ORU PAPER

FRIDAY, MAY 04, 2012, ISSUE 169

## காலனித்துவ நிலைப்பாடு தலையெடுக்கிறது ?

ஈழத்தமிழ் மக்கள் தமது அரசியல் அபிலாசைகளை வலியுறுத்துவதைக் கைவிட்டு விட்டு மேற்குலம் விரும்புகிற வகையில் நடந்துகொள்ள வேண்டும் என்று கருத்து தாயகத்திலும், அலைந்துழல்வு சமூகத்திலும், சில அமைப்புகள், அரசியற் செயற்பட்டாளர்கள் மத்தியில் இருந்து வருகிறது. ஐ.நா. மனிதவுரிமைச்சபையில் அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்திற்கு பின்னர் இந்நிலைப்பாடு மேலும் வலு வடைந்து வருவதனை அவதானிக்க முடிகிறது. இவ்வாறான கருத்தினைக் கொண் டவர்கள் ஈழத்தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை அமெரிக்காவே பெற்றுத் தரும் என நம்புகிறார்கள்.

மறுபுறத்தில், சர்வதேச நெருக்கடிக்களுக்கான குழு (International Crisis Group) போன்றவை தமது அறிக்கைகளில், இலங்கைத் தீவு விடயத்தில் மேற்குலகத்தின் எதிர்பார்ப்புகள் என்ன என்பதை கோடிட்டு காட்டி வருகின்றன. தமிழ்த் தேசிய இனத்தினை சிறுபான்மை இனக்குழுமமாக வகைப்படுத்தும் இவ்வமைப்பு சிறு பான்மையினரின் உரிமைகளை நிலைநாட்டுதல் என்ற வகையில் அதனை பார்க் கிறது. இங்கு மிகவும் முக்கியத்துவம் கொடுத்துப் பேசப்படும் விடயம் இலங்கைத் தீவில் இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தை ஏற்படுத்துதலும், நல்லாட்சியை நிலை நிறுத்துவதாகும்.

இராணுவ, பொருளாதார விடயங்களில் அசுரபலம் கொண்ட அமெரிக்கா தலைமையிலான மேற்குலக நாடுகள் தமது நலன்களுக்கு ஏற்ப நாடுகள் விடயத் தில் தலையிடுகின்றன. ஆதனை தடுத்து நிறுத்தக்கூடிய பலம் வேறு நாடுகளுக்கு இல்லை. இந்நிலயில் சிறிய தேசிய இனமாகிய ஈழத்தமிழர்கள் மேற்குலகின் விருப்பு களுக்கு எதிராகச் செயற்பட முடியாது என்பதனை மறுப்பதற்கில்லை. இருப்பினும் எமது நியாயூர்வமானதும், சர்வதேச நியமங்களுடன் முரண்படாததுமான அரசியல் கோரிக்கைகளை முன்வைக்கும் உரிமையயை நாம் விட்டுக் கொடுக்க வேண்டிய அவசியமில்லை.

இங்கு இன்னொரு விளக்கமும் அளிக்கப்படுகிறது. எல்லாவித விட்டுக் கொடுப்பு களுக்கும் நாம் தயாராக இருப்பதனை நாம் வெளிக்காட்டினாலும், எதுவித உரிமைக ளையும் தருவதற்கு சிங்கள பேரினவாதம் இடம்கொடாது. இவ்வுண்மை வெளிப் படும்போது, அமெரிக்கா தலையிட்டு ஈழத்தமிழர்களின் உரிமையை பெற்றுத் தரும் என்பதே அந்த வாதம். இந்த வாதத்தில் உள்ள குறைபாடுகளை உணர்ந்து கொள்ள அதிகம் சிந்திக்கவேண்டியதில்லை. தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக்கும், ஐக்கியதேசியக்கட்சிக்கும் இடையில் ஏற்படும் நெருக்கம் அதனை தெளிவு படுத்துகிறது.

## ஒரு பேப்பர்

*வணக்கம்!*

*இப்ப இரண்டு மூண்டு பேப்பரிலை சொல்லி வந்த ஒரு விசயம் சம்பந்தமாய் சிலர் பிரச்சனையை கிளப்பியிருக்கினம். அது என்னண்டு "தமிழியம்" வெளியிடுகிற புத்தகத்திற்கு **ஒரு பேப்பர்** விழா நடத்தலாம்? "தமிழியம்" ஆட்களுக்கும் "காலச்சுவடு" காரருக்கும் தொடர்பிருக்கிறது உங்களுக்கு தெரியாதோ? நீங்கள் விழாவிலை வைக்கிற புத்தகங்கள் போராட்டத்தை கொச்சைப்படுத்தாது எண்டு உத்தரவாதம் தருவியளோ எண்டெல்லாம் எங்கட மூஞ்சி புத்தகத்திலை (அதானப்பா facebook) கேட்டிருக்கிறார்கள்.*

*உண்மையிலை இப்பிடி கேட்கிறாக்களை மெச்சோணும். கண்ணுக்கிள்ளை எண்ணை விட்டுக்கொண்டு விழிப்போடை இருக்கிறாக்கள் எங்கடை சனத்துக்கிள்ளை தேவை. ஆன படியாலை இப்பிடி கேட்கிறாக்களை குழப்படியள் எண்டு ஒதுக்கக்கூடாது. இருந்தாலும் **ஒரு பேப்பர்** பற்றிய சில விசயங்களை பிழையாய் விளங்கியிருக்கினம்போல் தெரிகிறது. நாங்கள் அடிக்கடி சொல்லுறமாதிரி, இது பரப்புரை செய்கிற பேப்பர் இல்லை. சமூகத்திலை இருக்கிற எல்லாரின்ரை அபிப்பிராயங்களை வெளியிடுவதற்கு ஒரு களத்தை **ஒரு பேப்பர்** அமைத்து கொடுக்கிறது. வெறுமனை ஊடகவியலாளர்கள் எழுத்தாளர்கள் கல்விமான்கள்தான் **ஒரு பேப்பர்** ல எழுதோணும் எண்டில்லை, எல்லாரும் எழுதலாம். இன்னும் சொல்லப்போனால் வழமையாய் எழுதிக்குவிக்கிற ஆட்களை விட்டுட்டு மற்றாக்களும் தங்கடை கருத்துகளை சொல்லோணும் எண்டு ஆரம்பிக்கப்பட்டதுதான் **ஒரு பேப்பர்** . அந்த நோக்கத்திலையிருந்து நாங்கள் இன்னமும் விலகேல்லை எண்டுதான் நினைக்கிறோம்.*

***ஒரு பேப்பர்** ஐ பற்றி வருகிற ஒவ்வொரு விமர்சனத்தையும் நாங்கள் வரவேற்கிறம். நாங்கள் தவறுகள் செய்யாத சுத்தமான சூசைப்பிள்ளைகள் என்று ஒருநாளும் சொல்லவில்லை. இருந்தாலும் கண்டபாட்டுக்கு "காசு பாக்கிறதுக்குதான்" **ஒரு பேப்பர்** இந்த வேலைகளைச் செய்கிறது எண்டு விசமத்தனமாக எழுதிறதெல்லாம் எங்களை காயப்படுத்துகிறது. எதிரிகள் எங்களை தாக்குகின்றபோது நாங்கள் வலிமை பெறுகிறோம் எண்டது உண்மைதான். ஆனால் **ஒரு பேப்பர்** ன் அபிமானிகள் தாக்கும்போது வேதனைப்படுகிறம். இதுதொடர்பாக உங்களுடன் கதைக்கிறதுக்கு நாங்கள் தயாராகவே இருக்கிறம். ஆனால் நீங்களே எங்களுக்கு எண்டு எல்லைகளைக் கீறிக்கொண்டு, அதைத் தாண்டாமல் பாத்துக் கொள்ளுறதில் என்ன நியாயம் இருக்குது எண்டு எங்களுக்கு தெரியேல்லை.*

*மே 12ம் திகதி நடக்கிற "உரையாடல் அரங்கு" நிகழ்ச்சிக்கு வாருங்கோ, உங்கடை கருத்துகளை சொல்லுங்கோ. இது முதுகு சொறிவதற்கு நடாத்தப்படும் விழாவில்லை. எல்லாக் கருத்தும் ஏற்றுக்கொள்ளப்படும்.*

*சரி இந்த விழாவைப்பற்றி கூடுதலாய் எழுதிப்போட்டமோ? அடுத்த **ஒரு பேப்பர்** முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் நினைவு சுமந்த சிறப்பிதழாக வெளயிட தீர்மானித்திருக்கிறம் உங்கள் ஆக்கங்களை உரிய நேரத்துக்கு அனுப்பி வையுங்கள்.*

*அப்ப பன்னிரண்டாம் திகதி சந்திப்பம்....*

***ஒரு பேப்பர்** காரன்கள் + காரிகள்*

# War crimes court is flawed, but it is beginning to deliver



**By PETER APPS**

Former Liberian president Charles Taylor's war crimes conviction may be seen in some quarters as a victory for global justice, but a backlash against costly, lengthy international tribunals is also under way.

it stood as a warning to others that while the wheels of justice might take a long time to turn, the age of impunity for national leaders was over.

Found guilty of aiding and abetting a host of crimes including murder, rape and torture, as well as arming brutal Sierra Leonean rebels, Taylor became the first head of state to be convicted by an international tribunal since the Nuremberg Trials after the Second World War.

Human rights groups and western governments in particular welcomed the Taylor verdict, saying it stood as a warning to others that while the wheels of justice might take a long time to turn, the age of impunity for national leaders was over.

But with the United Nations-backed "hybrid" court trial – including both international and Sierra Leonean members – taking a decade and costing an estimated $50 million (about £30m), some see that as simplistic. Some put the cost of the entire Sierra Leone tribunal process at more like $200m. At the very least, some wonder whether the money could have been better spent in impoverished West Africa.

While Taylor's prosecution was handled by a tribunal only looking at one conflict – Sierra Leone, not the Liberian civil war, during which he is also accused of being involved in mass atrocities -- most more recent war crimes cases are in the hands of the International Criminal Court.

That has issued indictments for crimes committed in six countries – Democratic Republic of Congo, Uganda, Sudan, Central African Republic, Libya and Kenya – and found itself coming under growing criticism.

"No-one's in favour of impunity," says Jennifer Cooke, head of the Africa programme at the Centre for Strategic and International Studies in Washington DC. "But there are growing questions about the way in which international justice is being carried out in cases like this.

"There's the cost, there is the time and with the ICC there are complaints that they are only targeting Africans."

Others say that while the system remains deeply imperfect, and does almost invariably find itself targeting less powerful countries and their leaders, it is improving.

The fact that some of the first recent war crimes trials were for abuses in the former Yugoslavia, they say, suggest African complaints of victimisation may be wide of the mark. And the fact that prosecution remains a distant dream in many conflicts does not make the basic process a bad thing.

Other voices, however, worry that on occasion war crimes charges themselves may be making it harder, not easier to bring peace.

Less punitive systems, such as South Africa's Truth and Reconciliation Commission, where abusers were granted amnesty if they told the truth, are held up as alternative models. But other recent attempts, such as Sri Lanka's recent inquiry after its civil war, have been widely criticised as whitewashing government acts.

The failure to hold other heads of state accountable, experts say, reveals some more of the struggles international justice faces. Slobodan Milosevic, the Yugoslav leader accused of orchestrating multiple atrocities during the Bosnia and Kosovo wars, died in 2006 with his trial unconcluded. Critics said he had been simply allowed to prolong his trial too long, effectively denying justice to his victims.

Sudan's president Omar Al Bashir, indicted for war crimes and crimes against humanity in 2009 and for genocide the following year, remains not just at large but still in power.

The charges hanging over his head do not appear to have significantly weakened him domestically or perhaps even within Africa.

When Muammar al-Gaddafi was killed by a mob last year in the dying days of Libya's civil war, some western states and local leaders, many sometime allies or co-conspirators, while condemning the act may have drawn a sigh of relief he would not appear in court.

Other voices, however, worry that on occasion war crimes charges themselves may be making it harder, not easier to bring peace.

Gaddafi might have jumped at the chance to extend his time in court as long as possible and seek to compromise Western governments with accusations of co-operation.

And its not just the West that has such complicity, or a desire for selective justice – Syria's president Bashar al-Assad will probably avoid his own ICC indictment as long as Russia and China protect him from a UN Security Council ruling referring him to the court.

*Courtesy: scotsman.com*

# சர்வதேச சக்திகளிடையேயான மோதல்கள் எமக்கான வாய்ப்புகளை திறந்துவிட்டுள்ளது

## -தமிழ் தேசிய மக்கள் முன்னணி

*தமிழ் தேசிய மக்கள் முன்னணி மற்றும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்த மேதினக் கூட்டம் வடமராட்சி, கரவெட்டி சாமியன் அரசடி ஞானவைரவர் ஆலய முன்றலில் இடம்பெற்றது. மற்றொரு தமிழ்க் கட்சிகளின் இணைப்பான தமிழ் தேசியக்கூட்டமைப்பு ஐக்கிய தேசியக்கட்சியுடன் இணைந்து நடாத்திய மே தினக்கூட்டத்தில் ஐக்கிய இலங்கைக்குள் தமிழர்களும் மற்றய இனங்களுடன் இணைந்து வாழ்வதற்கான உரிமையை வலியுறுத்தியது.*

*மே தினம் தொடர்பாக தமிழ் தேசிய மக்கள் முன்னணி விடுத்துள்ள செய்தியினையும், அங்கு மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களையும் இங்கு தருகிறோம்.*

### மேதினச் செய்தி

பாரிய இனப்படுகொலை முள்ளிவாய்க்காலில் நடைபெற்ற 3வது வருட முடிவில் இம் மேதினத்தை கொண்டாடுகின்றோம். யுத்தம் முடிந்து விட்டாக இலங்கை அரசு கூறினாலும் தமிழ்த் தேசத்திற்கு எதிரான இன அழிப்பை சிறீலங்கா அரசு முன்னரிலும் பார்க்க தீவிரப்படுத்தியே வருகின்றது. தமிழ் தேசத்தின் இருப்பை பாதுகாப்பதிலும், தமிழ் தேசிய உணர்வை உயிர்ப்புடன் வைத்திருப்பதிலும் எமது தேசம் பலத்த சவால்களை சந்தித்து நிற்கின்றது. அந்த சவால்கள் சிங்கள தேசத்திலிருந்தும் எமக்குள்ளிருந்தும் வந்து கொண்டிருக்கின்றன. சிங்கள தேசத்தின் சவால்களை அடையாளம் காணுகின்ற நாம் எமக்குள்ளிருந்து வரும் சவால்களை அடையாளம் காண திணறுகின்றோம்.

சிங்கள பௌத்த பேரினவாதம் முன்னரை விடவும் அதன் உச்சியில் நிற்கும் இந்நிலையில் தமிழ் தேசிய உணர்வை இல்லாதொழிக்கும் நோக்கில், தமிழ் தேசிய அரசியலை பேரினவாத அரசியலுக்குள் கரையச் செய்யும் நடவடிக்கையை எமது இனத்திற்குள் இருக்கும் சிலரே இந்த மேதினத்தில் அரங்கேற்றியுள்ளனர். சிங்கள தேசத்தின் இன அழிப்புக்கு முகம் கொடுக்கவே நாம் திணறும் போது எம்மவர்களின் இந்த துரோகத்தனங்கள் எமக்கு இரட்டிப்பு வலியைக் கொடுத்துள்ளது.

மாபெரும் இன அழிப்பு நடைபெற்றாலும் தமிழ் மக்களின் விவகாரம் சர்வதேச மட்டத்தில் பேசு பொருளாகியுள்ளது. இலங்கைத் தீவினை மையமாக வைத்து சர்வதேச சக்திகளிடையேயான நலன் சார் ஆதிக்க மோதல்கள் வலுப்பெறத் தொடங்கியுள்ளன. அம்மோதலுக்கு தமிழர்களையே கருவியாக பயன்படுத்துகின்றனர்.

இங்கு தான் எமக்கான வாய்ப்புக்கள் திறந்து விடப்பட்டுள்ளது. தமிழ் மக்களிடமிருந்த ஆயுதபலம் இழக்கப்பட்டுள்ள நிலையில், இந்த வாய்ப்புக்களை நாம் சரியாகப் பயன்படுத்தினால் அது பன்மடங்கு பலத்தை அரசியல் ரீதியாக எமக்கு வழங்கும். பிறசக்திகளால் தமிழர்களால் வெறுமனே கருவியாகப் பயன்படுத்தப்படுவதனைத் தவிர்த்து எமது தேச நலன்களும் அடைப்படும் நிலையை உருவாக்க முடியும். இதற்கு தமிழ் மக்கள் அரசியல் ரீதியாக பலமாக இருக்க வேண்டும். தாயக மக்களும் புலம் பெயர் மக்களும், தமிழக மக்களும் ஒருங்கிணைந்த வேலைத்திட்டத்தின் கீழ் வந்து செயற்படும்போது எம்மால் பலமான நிலையை அடைய முடியும்.

### தீர்மானங்கள்

- அரசியல் தீர்வு முயற்சிகள் இரு தேசங்கள் ஒரு நாடு என்ற வகையில் அமைதல் வேண்டும்
- தமிழர் தாயகத்தில் இடம்பெறும் திட்டமிட்ட ஆக்கிரமிப்புகளை எதிர்த்து போராடுவோம்.
- போரினால் பாதிப்படைந்த எமது உறவுகளுக்கு கை கொடுப்போம்.
- தமிழ் அரசியல் கைதிகள், தடுப்பிலுள்ள முன்னாள் போராளிகளது விடுதலை செய்யப்படுவதற்கு சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்க வேண்டுமெனக் கோருவோம்
- இனப்படுகொலைக்கு சர்வதேச விசாரணை தேவை என்பதை உலகிற்கு கொண்டு செல்வோம்.
- நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையினை நிராகரிப்போம்.
- இனப்பிரச்சினைக்கு தீர்வாக 13வது அரசியலமைப்புத் திருத்தத்தில் முன்வைக்கப்பட்டுள்ள மாகாண சபைகளை நிராகரிப்போம்.
- தமிழ் தேசத்திற்கான சுயாதீன பொருளாதாரத்தை நாமே கட்டி எழுப்புவோம்.
- சிங்கள தேசத்தின் அதிகாரத்தை எம்மீது திணிக்க முயலும் படையினரை அகற்றக் கோருவோம்.
- இடம்பெயர்ந்து வாழும் எமது மக்கள் சொந்த ஊருக்குத் திரும்ப குரல்கொடுப்போம்.
- சாதி, மத, பிரதேச, பால் பேதமற்ற தேசத்தை கட்டி எழுப்புவோம்.

# Colombo now Dealing with Delhi from a 'position of strength'!

**By: Nadarajah Balasubramaniam (PFLT-UK)**

A historical perusal or review of the long plight of Eelam Tamils would show that a subtle cold war between India and the USA, played over the national question in the island. Their competition to have the dominant nation of Sinhalese, the majority on their side, denied justice to the nation of Eelam Tamils at every stage.

After keeping the world in suspense, Delhi voted for the USA's historic March 2012 UNHRC resolution. At the same time Delhi also caused comparable damage imposing an iconic condition that accountability proceedings against Sri Lanka required its consent. In normal circumstances action on an UNHRC resolution follows automatically to hold accountability proceedings against those responsible.

> The US is the primary architect of the counter-insurgency war and the subsequent military solution in the island.

Delhi's stance on the March 2012 UNHRC resolution apparently is purely to please the Tamil voters in Tamil Nadu. In May 2009, the same Delhi did push through a resolution congratulating Sri Lanka government for the massacres to deny UNHRC justice to the victims, ignoring pleas for an international war crimes investigation, even after watching the gruesome Sri Lanka government's crimes using life satellite pictures.

India and the UK specially worked very closely to support Sri Lanka during the final stages and they knew the human cost as it happened. The US is the primary architect of the counterinsurgency war and the subsequent military solution in the island. Dirty Sonia Congress government of India did underwrite the annihilation of LTTE leadership, obviously an act of revenge.

To say that,"Foreign policy of nations are driven by placing self interest of the nation uppermost", may be true as far as the economy is concerned. But the enthusiasm and the years of long planning of India to annihilate the LTTE especially its top leaders, ended in real doom for India when the Sri Lanka forces completed the genocide. The historical subjugation and oppression amounting to genocide is still going on regardless, by other means.

. "One of the main purposes of the LLRC is to deflect international pressure and buy time for the Rajapaksas who are trying to create a new ground reality in the North and in parts of the East. A new ground reality consisting of military camps and cantonments amidst Tamil villages, which, the Rajapaksas hope, will render devolution un-viable and a Tamil resurgence impossible", wrote Tisaranee Gunasekara , on 17 December 2011, with the title, "LLRC report is verbose fig leaf to cover Rajapaksa wrongdoing in conduct of war"

Further, on 7 April 2012, Tisaranee Gunasekara, wrote, "The Rajapaksas fought and won the Fourth Eelam War premised on this Sinhala supremacist vision. The peace resulting from that victory too is informed by Sinhala supremacist and maintained by force. It is a peace without politico-psychological reconciliation, a take-it-or-leave-it peace offered by the victor to the vanquished. In this peace there is no room for justice or equality; the vanquished cannot even mourn its dead or talk about its suffering – because anything but total acceptance of the status qua is seen as treachery.". Tisaranee Gunasekara, one of the respected Sinhalese journalists who always treats Tamils as equals wrote the above with the quotation;"They must be convinced that we are the victors" - Hitler (Nuremberg documents – PS 739)

The Rajapaksas believe that they can uproot Tamil nationalism by changing the demographic soil which nurtured it, and by using terror. They do not believe in the existence of an ethnic problem and is allergic to devolution because of its democratising potential.

Delhi continues to downplay the Tamil tragedy to save the Rajapakses and their accomplices (including the Narayanan trio, and Pranab Mukergee) from facing the UNHRC and the anticipated international independent inqury.

In the first place, Delhi and the Rajpakses that share deep anti-Tamil prejudice, demonetized the Eelam insurgency as 'terrorism' to be defeated at any cost. .

Delhi by these sinful acts encouraged the Rajapakses to continue Sri Lanka's barbaric genocide with impunity to ethnic cleanse Tamils out of the Island, the soonest possible. This is proceeding fast and decisively. Delhi's extra-ordinary friendship towards Sri Lanka is not driven by altruism or unselfish regard, even devotion to the welfare of others, but the threat of Sri Lanka unravelling the extent of the South Block's 'in the loop' complicity in Sri Lanka's crime of Genocide of Tamils.

Delhi's conduct of Indo-Sri Lanka's relations since May 2009 gives grounds to suspect that Delhi dreaded Rajapakses' 'in the loop' weapon most to take extra-ordinary pains to please the Rajapakses even avoiding the use of terms like Eelam, the massacres and Sri Lanka genocide, the Rajapakses dislike. Hence Colombo is now dealing with Delhi from a position of strength and confidance.

Delhi are seriously involved in delaying the implementation of the UNHRC resolution to allow Rajapakses time to complete the elimination of the Tamils in Sri Lanka ending the Eelam problems for good.

LLRC is after all a win-win for both US and Sri Lanka. The US will emerge as the "good guy" and Sri Lanka will walk away with more time, both patting each other on the shoulder.

ஒரு பேப்பர் உங்கள் கைகளில் தவழுவதற்கு உறுதுணையாய் நிற்பவர்கள் . . .

BBK Partnership
Croydon.................. 020 8150 9950

Meera Arnold & Co
Southgate................ 020 8882 2333

Aananthi Acca [Rayners Park]
Dr. Ratneswaran [Bromley]
R. Ganeshalingam [Purley]
Subramaniam [Eastham]
Sinnakutty [Walthamstow]
Babu [Thornton Heath]
Sriskanthan [Kensal Rise]
Vithuran [Croydon]
Bobby [Sutton]
P. Pathmanathan [Wembley]
Peter Jesudasan [Rayners Park]

இந்த வெற்றிடத்தை நிரப்புவது உங்கள் கைகளில்தான் உள்ளது.

ஒரு பேப்பர் தொடர்ந்து வெளிவர உங்கள் தயவை நாடி நிற்கிறது. உங்களால் முடிந்த சிறிய பங்களிப்பை தந்துதவுமாறு அன்புடன் கேட்கின்றோம்.
நன்றி.

Name: **ORU PAPER**
Bank: **HSBC**
A/C: **61429035**
S/C: **40-33-09**

ஒரு பேப்பர்
ORU PAPER

எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி!

ஆசிரியர் குழு:
பிரித்தானியா
அ. இரவி - மணி - அகிலன் மாதவன்
கனடா
தயா - அரவிந்தன் - சிந்து
பிரான்ஸ்
சிறி
ஜேர்மனி
சபேசன்
சுவிஸ்
சயந்தன்
பொறுப்பாசிரியர்
- கோபி -
மக்கள் தொடர்பு
சுகன்யா
விளம்பரம்
சோபனா - அஜந்தா
அச்சு
தர்சினி (கனடா) - சுகன்யா
வடிவமைப்பு
மயூரன் - யுகன்
முகப்பு வடிவமைப்பு
seven zero graphics
விளம்பர வடிவமைப்பு
ரஜீவன் - மாயா
தமிழ் எழுத்துரு உதவி
சுரதா யாழ்வாணன்
நிதி – நிர்வாகம்
சோபனா
வழங்கல்
உதயகுமார்-ரூபன்-பிரகாஸ்

உங்கள் தொடர்புகட்கு:
தொலைபேசி (Tel)
லண்டன் 020 7043 4310
கனடா 416 613 2850
தொலைநகல் (Fax)
லண்டன் 020 7043 4312
கனடா 416 438 7855
ஆக்கங்கள் மற்றும் அஞ்சல்வழித்தொடர்புகட்கு:
பணிமனை முகவரி
ORU PAPER
G11 LOMBARD HOUSE
2 PURLEY WAY
CROYDON, CR0 3JP
மின்னஞ்சல்:
info@orupaper.com
இணையம்:
www.orupaper.com

'Oru Paper' is a bi-lingual paper published from London by Jasmine Studio Ltd. on the 1st and 3rd Fridays of each month The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.



# பொன்.அம்பலத்தார்

பொன்னம்பலத்தாரோட கதைக்க - facebook.com/orupaper கண்காணிக்க @orupaper

## கூட்டத்திற்குப் போகலையோ.... கூடிக்குழப்பலையோ...

2009 மே 18க்கு பிறகு நடந்த கூட்டங்களை கூட்டிக் கழித்துப்பார்த்தால், பல அமைப்புக்கள் செய்த வேலையை விட வைத்த கூட்டங்கள்தான் அதிகம். இக்கட்டமான காலப்பகுதியில் நிலைமைகளை மக்களுக்கு விளக்குவதற்கு கூட்டங்கள் அவசியமானதொன்றாக இருந்தாலும், தற்போது நடக்கும் கூட்டங்கள் விளக்கத்தை விட மேலும் குழப்பத்தையும், அப்படிக்குழப்புபவர்களின் அறிவுக்குறைவையும் பார்த்து, இவர்களின் பங்களிப்பு எம்மை எங்கு கொண்டுபோய் விடப்போகிறது என்ற அச்சம் தான் ஏற்படுகிறது.

உதாரணத்திற்கு கடந்த 29ம்திகதி ஒரு கூட்டம் வைக்கப்போவதாக சகல தமிழ் அமைப்புக்களுடனும் இணைத்து பணியாற்றுவதற்காக அழைப்பு என்று 28ம் திகதி, அதற்கு ஒரு நாள் முன்னதாக, பிரித்தானியத் தமிழர் பேரவை என்ற பெயரில் குறிப்பிட்ட பகுதியினருக்கு மட்டும் அழைப்பு அனுப்பப்பட்டது. சகல தமிழ் பாடசாலைக்கும், தமிழ் அமைப்புக்களுக்குமான அழைப்பு என்று குறிப்பிடப்பட்டிருந்த போது, அப்பிடியான அழைப்பு எதுவும் அவ்வமைப்புக்களுக்கு போனதாக இல்லை. அக்கூட்டத்திற்கு போனபிற்பாடு தான், விளங்க முடிந்தது தற்போது 2009 க்கு பிறகு மும்மரமாக இயங்கிவரும் பிரித்தானியத் தமிழர் பேரவையால் இது ஒழுங்கு செய்யப்படவில்லை என்பதுவும், மாவீரர் நாள் குழப்பங்களில் ஈடுபட்ட குழுவும் அவர்களுடன் சேர்ந்தியங்கும், அமைப்பில் தனிப்பட்ட (Founder members) விருப்பமோதல்களால் பிரிந்து செல்லப்பட்டவர்களாலும், விடப்பட்டவர்களாலும் மட்டுமே ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இதற்குள் பிரித்தானியத் தமிழர் பேரவையின் ஆரம்பநாள் கூட்டத்தில் பங்குபற்றியவர்களும் வந்திருந்தார்கள். அவர்கள் தங்களை ஆரம்ப நிர்வாகிகள் என அழைத்துக் கொண்டார்கள். அவர்கள் மொத்தம் 11 பேர்.

நடந்து கொண்டிருந்த கூட்டத்தில் சமூகமளித்திருந்த பேரவையின் நீண்டகால உறுப்பினரும், அதற்காக வேலை செய்பவருமான பெண்மணி ஒருவர், தனக்கு ஆங்கில அறிவு குறைவானதால் தமிழில் பேசும்படி வேண்டுகோள் விடுத்தார். அவரின் வேண்டுகோளை அந்த 11 ஆரம்ப நிர்வாகிகளின் ஒரு பெண் உறுப்பினர் முற்றாக மறுக்க, அடுத்த பெண் உறுப்பினர் அதற்கு ஆதரவளித்தார். பிரித்தானிய தேசத்தில் இருந்து கொண்டு ஆங்கில அறிவு குறைவு என்று சொல்ல முடியாது, ஆகவே கூட்டத்தில் தமிழில் கதைக்கவேண்டியதில்லை என அவர் உறுதியாக, ஆங்கிலத்தில் சரளமாகச்சொன்னார். அதைக்கேட்டு அங்கு வந்திருந்த பொது மகன் ஒருவர் மிகவும் உணர்ச்சியுடன் இது பிரித்தானிய தமிழர் பேரவை தானே, ஆங்கிலப்பேரவை அல்லவே என்று பொருமினர். இதில் ஆச்சரியம் என்னவென்றால் ஆரம்பநிர்வாகிகள் என்று தம்மைத்தாமே பெருமையுடன் அழைத்துக்கொள்ளும் இப்பெண்களுக்கு, தமிழ் ஈழப்பகுதியில் ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதோ, அங்கிருந்து இங்கு அகதியாக வரும் பெரும்பகுதி தமிழர்கள் சரியான வதிவிடஉரிமை கிடைக்கும் மட்டும் ஆங்கிலம் படிக்கமுடியாது என்பதோ, அப்படி வதிவிடஉரிமை கிடைத்தாலும் இலவச ஆங்கிலக்கல்விக்கு பிரித்தானிய அரசு பலகட்டுபாடுகளை விதித்துள்ளதோ தெரியாத அளவிற்கு, அவர்களுக்கு அடிமட்ட தமிழ்மக்களின் பிரச்சனைகள் விளங்காமல் இருந்ததும், இவர்கள்தான் அம்மக்களை ஒன்றிணைத்து அவர்களுக்கும் அரசியல் வாதிகளுக்கும் இடையே எமது இலக்கை பரப்புரை செய்யும் பேரவையின் ஆரம்ப உறுப்பினர்கள் (Founder members) என்பதும் வேதனைக்குரியதாக இருந்தாலும், அப்படியான ஒரு கழக (club) மனோபாவத்தில் இருந்து பேரவை விடுபட்டு, மக்கள் மயப்படுத்தப்பட்டு விட்டது என்பது நிம்மதியைத்தருகின்றது. பொது மக்களுக்கான கூட்டம் என்று அறித்து விட்டு, புரிந்த மொழியில் பேசக்கேட்பதை நகைப்பது என்ன அறிவீனம், அகம்பாவம்.

இவ் ஆரம்பகால உறுப்பினர்கள் அமோகமாக நடத்திக்கொண்டிருந்த பேரவையை, 2009 இல் இருந்து நடாத்திக்கொண்டிருப்பவர்கள் தட்டி பறித்து விட்டதாகவும், தாம் முன் கதவாலும், அவர்கள் பின் கதவாலும் வந்தாக பலர் எழுந்து மாறி மாறி ஒரே குற்றத்தையே சொல்லிக் கொண்டிருந்தார்கள். இறுதியாக தற்போதைய பேரவையின் உறுப்பினர் ஒருவர் அப்போது இதில் சம்பந்தபட்ட ஆரம்பகால உறுப்பினரான வைத்தியர் ஒருவரை உண்மை நிலையை விளம்புமாறு கேட்டுக்கொண்டதற்கு இணைக்க அவர், பேரவை 2009 க்கு முதல் மக்கள் ஆதரவு இன்றி மிக்கக் குறைவான செயல்பாட்டுடன் இயங்கிக்கொண்டிருக்கும் நேரத்தில், மக்கள் ஆதரவை திரட்டுவதற்கு முடியாமல், தற்போது பொறுப்பாக இருப்பவர்களால்தான் முடியும் என்று, நாம் வலிந்து போய், இதை ஏற்று நடாத்தி, மக்கள் ஆதரவை திரட்டித்தருமாறு வேண்டிக்கொண்டதாகவும், அதற்கு அவர்கள், தமக்கு மேல் உள்ளவர்களின் அனுமதி பெற்று வருவதாகச் சொல்லி, அவ்வனுமதியுடன் பேரவையை பொறுப்பேற்று, 2009 இல் நடந்த பேரணிக்கு மக்களை எழுச்சி கொண்டு இயங்க வைத்ததாகவும் சொன்னார். இதை அக் கூட்டத்தில் இருந்த ஒருவரும் மறுக்கவில்லை. இதே காரணத்தை அந் நிறுவனத்தில் இருந்து (conflict of interest) விருப்பமோதலால், அவரின் தொடர்பு அறுத்துள்ளதாக (Disassociate) அறிவிக்கப்பட்டிருக்கும் முன்னைய தலைவர், சொல்லும்போது அவர்கள் வேலையின்றி வீட்டில் சும்மா இருந்ததால் பொறுப்பை கொடுத்ததாகச் சொல்லி, ஆரம்பகால உறுப்பினர் என அழைக்கப்படும் அவரின் சிற்றறிவையும், ஒரு தலைமையை அவர் எப்படி தெரிவு செய்கின்றார் என்ற மடமையையும் சபைக்கு பறைசாற்றி, மற்றவர் முகத்தில் சேறு பூசுவதாக நினைத்துக்கொண்டு தனக்கு தானே சேறு பூசிக்கொண்டார்.

தனக்கும் இப்போதைய பேரவைக்கும் எதுவித சம்பந்தமும் இருக்கவில்லை என்று சொன்ன அவரிடம், அப்பிடி இருந்தால் இவ்வளவுநாளும், இந்த வருடம் கூட, எல்லா காசோலைகளிலும் நீங்கள் தானே கையெழுத்திடுகிறீர்கள். எது, எவ்வளவு செலவு செய்கின்றோம் என்பது எல்லாம் தெரிந்து, கையெழுத்திடும் உங்களுக்கு, நிறுவனத்தில் நடப்பது எதுவும் தெரியவில்லை என்று எப்படி கூறமுடிகின்றது, என்று தற்போதைய உறுப்பினர் கேட்ட கேள்விக்கு அவர் பதில் சொல்லவில்லை.

தீடீரென அவைத்தலைவர் தமது நிகழ்ச்சி நிரலில் ஐந்தாவது அம்சம், புதிய செயற்குழு உறுப்பினர்களைத் தெரிவு செய்வது என்று அறிவித்து, ஏறக்குறைய ஒரு மணிநேரப் பொழுதை வாக்குவாதத்திற்கு செலவிட்டு, அந்த 11 படித்த உறுப்பினர்களுக்கும், அவர்களின் அமைப்பின் சட்ட திட்டங்களை, பொதுமக்கள் தெளிவு படுத்தியபின் அதைக் கைவிட்டார்கள்.

ஏற்கனவே நன்றாக நடந்து கொண்டிருக்கும் மாவீரர் நாளையும், முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தையும் குழப்புவதைத்தவிர, வேறு ஏதாவது உருப்படியான, மக்களுக்கு உதவும், திட்டமும், மனமும் இவர்களுக்கு வரும்வரை, தமிழனை தாம் கூட்டம் வைத்துக்குழப்பவும், மற்றவர்கள் வைக்கும் கூட்டத்தைக்குழப்பவும் இவர்கள் இருந்து கொண்டே இருப்பார்கள். இனியாவது, மக்களுக்கு உண்மையாக உழைக்க நினைக்கும் அமைப்புக்கள், இப்படியானவர்களை அடையாளம் கண்டு, அவர்களின் தனிப்பட்ட நோக்கங்களுக்காகவும், பிரச்சனைகளுக்காக பொதுநேரத்தை அநியாயமாக செலவழிப்பதற்கு அனுமதிக்க கூடாது. ஏனெனில் நாம் விடுதலை பெற்ற மக்கள் அல்ல. விடுதலையை வேண்டி நிற்கும் மக்கள், எமது நேரங்கள் மக்களுக்கானவை.

# வாழ்ந்து படிக்கும் பாடங்கள்!

## இந்தக் கணம் மட்டுமே உங்களுடையது!

நம்முடைய வாழ்க்கை எத்தனை நீண்டதாகவும் இருக்கலாம். ஆனால் நம் கட்டுப்பாட்டில் இருக்கும் காலம் நிகழ்காலம் மட்டுமே. கடந்து போன காலத்தை இனி மாற்ற முடியாது. நல்லதோ, கெட்டதோ முடிந்ததெல்லாம் வாழ்க்கையின் வரலாறு ஆகி விட்டது. கடந்த காலத்தில் பயணித்து நடந்து முடிந்த நிகழ்ச்சிகளை நம் விருப்பப்படி மாற்றி விட முடியாது. எதிர்காலம் என்றுமே ஒரு கேள்விக்குறி தான். இனி மிஞ்சி இருக்கும் காலம் எத்தனை, அதில் நடக்க இருப்பதெல்லாம் என்னென்ன என்பதை நாம் அறிய மாட்டோம். எதிர்கால நிகழ்ச்சிகளை நாம் எட்டிப்பார்க்க முடியாது.

இப்படி இருக்கையில் நம் கட்டுப்பாட்டில் இல்லாத கடந்த கால நினைவுகளிலும், எதிர்காலக் கனவுகளிலும், நம் கட்டுப்பாட்டில் இருக்கக் கூடிய நிகழ்காலத்தை நாம் வீணடிப்பது தான் வேடிக்கையிலும் வேடிக்கை. இந்தக் கணம் மட்டுமே நம்முடையது. நாம் நினைத்தபடி நடந்து கொள்ள இந்தக் கணத்தில் மட்டுமே முடியும். நம்மால் செயலாற்ற முடிந்த இந்த ஒரு கணத்தை நாம் எப்படி பயன்படுத்துகிறோம் என்பதை வைத்தே நாம் நம் வாழ்க்கையை நிர்ணயம் செய்து கொள்கிறோம். நவீன மருத்துவத்தின் தந்தை என்றழைக்கப்படும் சர் வில்லியம் ஓஸ்லர் (Sir William Osler) தன் மேசையில் நம் மகாகவி காளிதாசரின் ஒரு கவிதையின் ஆங்கில மொழிபெயர்ப்பை எப்போதும் வைத்திருந்ததாக சொல்லப்படுகிறது.

நாம் அதிகமாகக் கோட்டை விடுவது நிகழ்காலத்தைத் தான். நேற்றைய வருத்தங்களும், நாளைய கவலைகளும் தான் அதிகமாக நம் நிகழ்காலத்தைத் திருடிக் கொள்கின்றன. கடந்த காலத்தில் அப்படியாகி விட்டதே, இப்படியாகி விட்டதே என்று வருத்தப்பட்டும், நாளை என்ன ஆகுமோ என்று கவலைப்பட்டும் என்ன பயன்? வருத்தப்படுவதால் கடந்தகாலம் மாறி விடுமா? கவலைப்படுவதால் எதிர்காலம் தானாக சிறந்து விடுமா?

காளிதாசரின் இன்றைய தினம் கூட சற்று அகலமான காலம் என்று சொல்லலாம். இன்றில் கூட இன்றைக்குட்பட்ட கடந்த காலம், எதிர்காலம் என்பதும் அடங்கி விடுகிறது. உண்மையில் வாழ்க்கையில் எல்லா வெற்றிகளுக்கும், மேன்மைகளுக்கும் சூட்சுமம் இந்தக் கணத்தில் தான் உள்ளது. இந்தக் கணத்தில் தான் நாம் ஏதாவது செய்ய முடியும்

தாமஸ் கார்லைல் மிக அழகாகக் கூறுவார். 'நம்முடைய முக்கிய வேலை தூரத்தில் மங்கலாகத் தெரிவது என்ன என்பதைத் தெரிந்து கொள்வதல்ல, நம் முன்னால் இருப்பது என்ன என்று தெரிந்து அதை சிறப்பாகச் செய்வது தான்?. அப்படித்தான் இந்தக் கணத்தை நாம் சிறப்பாக உபயோகித்தால், அப்படியே ஒவ்வொரு கணம் நம் வாழ்க்கையில் வரும் போதும் சிறப்பாக பயன்படுத்தினால், எதிர்காலம் தானாக சிறப்பாய் உருவாகி விடும் என்பதில் சந்தேகமில்லை.

நேற்றைய நிகழ்வுகளில் இந்தக் கணத்தில் ஏதாவது பாடம் உணர்வோமானால் அது நம்மை பக்குவப் படுத்தும். நாளைய நாளின் சிறப்புக்காக திட்டமிட்டு இந்தக் கணத்தில் ஏதாவது செய்வோமானால் அது நம்மை முன்னேற்றும். ஆக இந்த நாளில் இந்தக் கணத்தில் நாம் செய்வதை வைத்துத் தான் நேற்றைய அனுபவத்திற்கும், நாளைய நடப்பிற்கும் நாம் சிறப்பை ஏற்படுத்த முடியுமே தவிர அவற்றைக் குறித்த வருத்தங்களாலும் கவலைகளாலும் அல்ல. அப்படி செயல்படுவதை விட்டு விட்டு வருத்தங்களாலும், கவலைகளாலும் கழிக்கப்படும் காலங்கள் வீணடிக்கப்படுபவையே. கடைசி வரை உங்களால் செயல்பட முடிந்த காலம் நிகழ்காலம் மட்டுமே. எனவே நிகழ்காலத்தில் மிகுந்த கவனம் வையுங்கள். நிகழ்காலத்தில் சூழ்நிலைகள் எவ்வளவு மோசமாக இருந்தாலும் புலம்பலிலேயே கழித்து விடாதீர்கள். புலம்பலிலும், வருத்தங்களிலும் நிலைமை மேலும் மோசமாகுமே தவிர எதுவும் மாறி விடாது, தீர்வும் கிடைக்காது.

நமக்கு முழுக்கட்டுப்பாடு இருப்பது இந்தக் கணத்தில் தான் என்பதால் வாழ்க்கையின் வெற்றியின் சூட்சுமம் முழுவதும் இந்தக் கணத்தில் தான் இருக்கிறது. நதி நீரோட்டத்தில் ஒரு முறை காலை நனைத்த நீரில் இன்னொரு முறை காலை நனைக்க முடியாது என்று சொல்வார்கள். ஒவ்வொரு முறையும் நீர் புதிதாகவே இருக்கிறது. கால ஓட்டத்திலும் ஒவ்வொரு கணங்களும் புதியவையே. நாம் இந்தக் கணத்தில் வாழும் முறையைப் பொறுத்தே இது நமக்கு அனுகூலமாவதும், பயனற்றுப் போவதும் தீர்மானமாகிறது. காளிதாசர் சொன்னது போல நம் விடியலுக்கான தீர்வு இந்தக் கணத்தில் தான் உள்ளது. மாற ஆசைப்படுகிறீர்களா? அதற்கான முதல் அடியை இந்தக் கணத்தில் வையுங்கள். ஏதாவது சாதிக்க ஆசைப்படுகிறீர்களா? அதற்கான பிள்ளையார் சுழியை இந்தக் கணத்தில் போடுங்கள். நாளை .செய்யலாம் என்று விட்டு வைப்பவைகளை நாம் என்றுமே செய்வதில்லை.

ஏனென்றால் நாளை என்பது நம்மிடம் வருவதேயில்லை. நம்மிடம் இருப்பதெல்லாம் இந்தக் கணம் மட்டுமே. இருப்பதை சரியாகப்பயன்படுத்தினால் மட்டுமே வருவதெல்லாம் சரியாகும்.

- என்.கணேசன்

# முற்றுகைக்குள் தமிழ்த்தேசியம்



கோபி
ஒரு பேப்பர்

முள்ளிவாய்க்கால் அவலங்கள் நடந்தேறிய காலத்தின் மூன்றாவது ஆண்டு நிறைவில் நிற்கிறோம். நடைமுறை அரசினை நிர்வகித்து வந்த விடுதலைப்புலிகள் மூன்றாண்டுகளுக்கு முன்னர் நந்திக் கடலையொட்டிய குறுகிய நிலப்பரப்பில் முடக்கப்பட்டு, தினந்தோறும் அவர்களது கட்டுப்பாட்டிலிருந்த நிலப்பரப்பு குறுகிக்கொண்டு சென்றது. இன்று அந்த நிலையுடன் ஒப்பிடக்கூடிய நிலைக்கு தமிழ்த்தேசியம் தள்ளப்பட்டு இருக்கிறது. ஆயுதப்போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் தமிழ் அரசியல்தரப்புகள் கையிலெடுத்த இராசதந்திர நகர்வுகள் தோல்வியின் விளிம்பில் நிற்கிறது. இங்கு ஒரு வேறுபாடு உள்ளது முள்ளிவாய்க்கால் அழிவுகள் அனைவருக்கும் கண்கூடாகத் தெரிந்தன. ஆனால் இராசதந்திர முனையில் ஏற்படும் தோல்வியை அந்த நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களே ஏற்றுக் கொள்ள மறுக்கிறார்கள். மாறாக அதன் வளைவுகளுக்கு ஏற்ப தங்களை வளைத்து நெளித்துக் கொள்கிறார்கள்.

இவ்வாறு கூறுவதற்குரிய காரணங்களை வெளிப்படையாக நடைபெறும் சம்பவங்களின் பின்னணியை விளங்கிக்கொள்வதிலிருந்து அறிந்து கொள்ளலாம். மே முதலாம் நாள் யாழ்ப்பாணத்தில் நடந்தேறிய ஐக்கிய தேசியக்கட்சி தலைமையிலான மேதின வைபவம் நல்ல உதாரணமாக அமைந்துள்ளது.

இலங்கைத் தீவு பிரித்தானிய காலனித்துவத்திலிருந்து விடுபட்ட அறுபத்து நான்கு ஆண்டு காலத்தில் முதல்தடவையாக ஐக்கிய தேசியக்கட்சி யாழ்பாணத்தில் ஒரு மேதின விழாவை நடாத்தியதன் மூலம் சில முக்கியமான அரசியல் செய்திகளை வெளிப்படுத்தியுள்ளது. யாழ்ப்பாணத்தில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மனோ கணேசனின் சனநாயக மக்கள் முன்னணி, நவசமசமாஜக் கட்சி, சிறிதுங்க ஜயசூரியவின் சோசலிசக்கட்சி போன்றவர்களுடன் இணைந்து மேதின வைபவத்தை நடாத்தினார்கள். பாட்டாளிகளின் தினத்தில் முதலாளித்துவ கட்சியான ஐ.தே.கவுடன் விக்கிரமபாகு, சிறிதுங்க போன்ற தீவிர இடசாரிகளும் இணைந்திருந்தமை ஆச்சரியமானதுதான். இருப்பினும் ஒன்றுபட்ட இலங்கை என்றவிடயத்தில் இவர்களுக்குரிய ஆர்வம் இவர்களை இணைய வைத்தது. தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமையை கொள்கையளவில் ஆதரிப்பதாகக் கூறும் விக்கரமபாகு போன்றவர்கள் சிங்கள பௌத்த பேரினவாதத்துடன் கரங்கோர்த்துக் கொள்வதில் தயக்கம் காட்டவில்லை.

ஐக்கிய இலங்கைக்குள் சனநாயகத்தை நிலை நாட்டுவதற்காகவும், மகிந்த இராஜபக்சவின் ஆட்சியை (MARA regime) அகற்றுவதற்காகவும் தாங்கள் இவ்விதம் இணைந்து கொண்டுள்ளதாக இக்கூட்டில் இடம்பெற்ற நவசமசமாஜக் கட்சியின் லண்டன் அமைப்பாளர் இக்கட்டுரையாளரிடம் தெரிவித்தார். இதே விடயத்தில் ஒத்திசைவான கருத்துடைய இன்னொரு தரப்பினரும் உடனடியாக எமக்கு ஞாபகத்திற்கு வரலாம். அது வேறு யாருமல்ல, அமெரிக்கா தலைமையிலான மேற்குலகம். அடிப்படைக் கொள்கையில் வேறுபடுபவர்கள் தமக்கிடையே பொதுவான ஒருவிடயத்தில் சந்தித்துக்கொள்வதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை, ஆனால் இவ்விதமான இணைவு இயற்கையானதாக அமையாமல் பின்னாலிருந்து இயக்கப்படுவதில்தான் சிக்கலை ஏற்படுத்துகிறது.




ஐக்கிய தேசியக் கட்சியும், விடுதலைப்புலிகளின் முன்னணி அமைப்பு என முன்னர் அழைக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இணைந்து மேதினத்தை யாழ்ப்பாணத்தில் நடாத்த முற்பட்டமையின் பின்னணியில் அமெரிக்காவும், இந்தியாவும் இருந்தன. அமெரிக்க இராஜங்க திணைக்களத்தின் ஆலோசனையின் பேரில் இவ்விதமான முன்னெடுப்பில் இரு கட்சிகளும் ஈடுபட்டிருந்தன. சில வாரங்களுக்கு முன்னர் அமெரிக்காவிற்கு பயணம் செய்திருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர் ரவி கருணாநாயக்க இராஜங்க திணைக்கள அதிகாரிகளைச் சந்தித்துப் பேசியதாக அறியக் கிடைக்கிறது. இந்த முயற்சிக்கு இந்தியாவின் ஆசீர்வாதமும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கலாம் எனக் கருத இடமுண்டு.

சிறிலங்கா அரசாங்கத்திற்கும், வெளியுலகிற்கும் சில செய்திகளைச் சொல்வதற்காக நன்கு நெறிப்படுத்தப்பட்டு நடாத்தப்பட்ட நாடகமே யாழ்ப்பாண மேதின நிகழ்வுகள். உழைப்பாளர் தினமான மேதின நிகழ்ச்சிகளில் அவர்களுக்கு எதுவித தொடர்பும் இருக்கவில்லை. ஐக்கிய இலங்கைக்குள் சிங்களவர்களையும், தமிழர்களையும் இணைக்கக் கூடிய தலைவராக தன்னை வெளிப்படுத்துவதில் ரணில் விக்கிரமசிங்கவும், சிறிலங்காவின் குடிகள் என்ற பெருமையுடன் ஒரே நாட்டுக்குள் பிரிவினையின்றி வேறெந்த எதிர்பார்ப்புகளும் இன்றி இணங்கிப் போவதற்கு தயாராக உள்ளதாக சம்பந்தனும் தமது பாத்திரத்தையுணர்ந்து திறம்பட நடித்துள்ளார்கள். சிங்கக்கொடியை உயர்த்தி தனது நடிப்பின் உச்சத்தை சம்பந்தன் தொட்டத்தில் வியப்பதற்கு ஒன்றுமில்லை. ஏனெனில் அதுவே அவரது உண்மையான முகமாகவும் உள்ளது. இந்த அரங்க நிகழ்வுக்கு பின்னணி இசை வழங்கியவர்கள் பாராட்டுக்குரியவர்கள். ரணில் - சம்பந்தன் இருவரும் கைகோர்த்து சிங்கக் கொடியை அசைக்கையில், மோகன்தாஸ் காந்திக்கு பிடித்தமான இந்திய தேசிய ஆன்மீகப் பாடலான 'இரகுபதி இராகவ இராஜராம்' பாடலை ஒலிபரப்பி தமது அயல் நாட்டையும் திருப்திப்படுத்தியுள்ளார்கள். "Oh, say, can you see, by the dawn's early light…" என ஆரம்பிக்கும் The Star-Spangled Banner என்ற அமெரிக்க தேசிய கீதத்தையும் பாடியிருந்தால் நிகழ்வு முழுமையடைந்திருக்கும். இந்த நிகழ்வுகளைக் காண லண்டனிலிருந்து, ஐக்கிய தேசியக் கட்சியின் கிளை உறுப்பினர்கள் யாழ்ப்பாணத்திற்கு சென்றிருந்தார்கள் என்பதிலிருந்து பாட்டாளிகள் தினம் அரசியல்வாதிகளின் அரங்க நிகழ்வாக ஆக்கப்பட்டதனை தெரிந்து கொள்ளலாம்.

சம்பந்தன் தற்போது கூறிவரும் கருத்துகளை நண்பர் ஒருவர் பட்டியிலிட்டிருந்தார். அவை பின்வருமாறு.

- *தனிநாடு, பிரிவினை கோரவில்லை*
- *சுயநிர்ணய உரிமை பற்றி பேச்செடுக்க மாட்டோம்*
- *தமிழ் ஈழம் என்ற பெயரை உச்சரிக்கப் போவதில்லை*
- *வடக்கு - கிழக்கு தாயகம் என உரிமை கொண்டாடவில்லை*

எமக்கு விருப்பமில்லாவிட்டாலும், தமிழ் மக்களுக்கு இயல்பு வாழ்க்கை ஏற்படுபடுத்துவதற்காக இவற்றை நாங்கள் சொல்கிறோம் என்றும் சம்பந்தன் தனக்கு நெருக்மானவர்களிடம் குறிப்பிட்டதாகத் தெரிகிறது. இதனை இராஜதந்திரம் என சம்பந்தனின் புலம்பெயர் விசுவாசிகள் கூறி வருகிறார்கள்.

சம்பந்தன் சிங்கக்கொடியை உயர்த்திப் பிடித்தமைக்கு பல்வேறு வியாக்கியானங்கள் வழங்கப்பட்டாலும், தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் விடயத்தில் எல்லாவித விட்டுக் கொடுப்புகளுக்கும் தயாராக இருக்கிறோம் என்பதனை வெளியுலகத்திற்கு அறிவிக்கும் நடவடிக்கையாகவே இதனைப்பார்க்க முடியும். யாழ் மேதினம் தொடர்பாக பி.பி.சி. வெளியிட்ட செய்தியறிக்கை இதனை உறுதிசெய்வதாக அமைந்திருந்தது. 'ஒரு காலத்தில் விடுதலைப்புலிகளின் முன்னணி அமைப்பாக இருந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பு தற்போது குறிப்பிடத்தக்களவு மிதவாதப் போக்கை கடைப்பிடிக்கும் அமைப்பாக மாறியுள்ளது.' என பிபிசியின் செய்தியறிக்கையில் தெரிவிக்கப்ட்டுள்து. அவ்வறிக்கையில் சம்பந்தன் சிறிலங்காவின் தேசியக் கொடியை அசைத்தமை பல அரசியல் விமர்சர்களின் பாராட்டைப் பெற்றுள்ளது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**புலம் பெயர் தமிழ் மக்கள் அரசியல் விழிப்புணர்வுடன் செயற்படாவிட்டால், மிதவாத தலைமைகள் என்வர்களின் பங்களிப்புடன் இராசதந்திர முனையில் இன்னொரு முள்ளிவாய்க்கால் நடந்தேறுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.**

இதற்கிடையில், மேற்படி மேதின ஊர்வலத்தில் தமிழீழ தேசியக் கொடியை ஒருவர் தாங்கி வந்ததாகவும், சிலர் தமிழீழ வரைபடம் கொண்ட ரீசேர்ட்களை அணிந்திருந்ததாகவும் செய்திகள் வெளியாகியிருந்தன. சிறிலங்கா புலனாய்வுப்பிரிவைச் சேர்ந்தவர்களே இவ்விதம் நடந்துகொண்டதாக தெரிகிறது. இச்செய்திக்கு சிறிலங்கா அரச ஊடகங்கள் கொடுத்த முக்கியத்துவம் மேலும் அதனை உறுதிசெய்வதாக அமைந்திருந்தது. இங்கு குழப்பத்துக்குரிய கொடியாக தமிழீழ தேசியக் கொடியும், சமாதானத்திற்குரிய கொடியாக வாழேந்திய சிங்கக்கொடியும் சர்வதேச ஊடகங்களிலும் சித்தரிக்கப்பட்டுள்ளமை தமிழ்த்தேசியத்தின் இன்றைய நிலமையை வெளிக்காட்டுவதாக அமைந்துள்ளமையை நாம் அவதானிக்க வேண்டியவர்களாக உள்ளோம்.

இங்கு இன்னொரு முக்கியமானவிடயத்தையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும், இன்று தாயகத்திலும், புலம்பெயர் நாடுகளிலும் இயங்கும் தமிழ் அமைப்புகள் வெளிச்சக்திகளின் குறிப்பாக அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளை திருப்திப்படுத்தும் வகையிலேயே செயற்பட்டுவருகின்றன. இந்த ஒழுங்குக்குள் வராத அமைப்புகள் தீவிரவாதப் போக்குடையதாக ஒதுக்கப்படுவதுடன், அவற்றின் மீது கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன. புலம்பெயர் நாடுகளில் இயங்கும் பெரிய தமிழ் அமைப்புகளின் தலைமை மிதவாதிகளிடம் இருப்பதனையே வெளிச்சக்திகள் விரும்புகின்றன. இவ்வாறு மிதவாத தலைமைகளை ஏற்படுத்த வேண்டும் என்பதில் சிலவன்முறையாளர்களும் வரிந்துகட்டிக் கொண்டு நிற்பதிலிருந்து மிதவாதிகள் என அழைக்கப்படுபவர்களின் சுயரூபத்தினை அறிந்து கொள்ளலாம்.

புலம் பெயர் தமிழ் மக்கள் அரசியல் விழிப்புணர்வுடன் செயற்படாவிட்டால், மிதவாத தலைமைகள் என்வர்களின் பங்களிப்புடன் இராசதந்திர முனையில் இன்னொரு முள்ளிவாய்க்கால் நடந்தேறுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

ஒரு பேப்பர்
கிடைக்குமிடங்கள்

**New Malden**

| | |
|---|---|
| Ayngaran | 020 8949 6734 |
| Megaa Superstore | 020 8336 0061 |
| Vaaniyan | 020 8605 0434 |
| Murugan Kovil | 020 8942 4475 |
| Vaishna Superfoods | 020 8399 4488 |
| Stoneleigh Amman | 020 8393 8147 |

**Tooting**

| | |
|---|---|
| Yhaal House | 020 8767 8585 |
| Rainbow Restaurant | 020 8640 4230 |
| Amman Kovil | 020 8795 4258 |
| Niru Con.Store | 020 8672 3200 |
| Ayngaran | 020 8540 1500 |
| Suvai Aruvi | 020 8543 6266 |
| Adchaya | [illegible] |

**Croydon**

| | |
|---|---|
| Best Foods | 020 8684 6269 |
| Haran Bros | 020 8686 2552 |
| Chennai dosa | 020 8665 9192 |
| Eelam Video | 020 8664 8351 |
| Spice Land | 020 8667 1700 |

**Lewisham**

| | |
|---|---|
| Chandra | 020 8333 8680 |
| Eelam Shop | 020 8690 6545 |
| Katpagam | 020 8694 8810 |
| AJ Video | 020 8691 8888 |
| Sivan Kovil | 020 8318 9844 |
| KRS | 020 8297 9432 |

**Eastham**

| | |
|---|---|
| Seelans | 020 8471 5733 |
| Sakthi Cash & Carry | 020 8394 4560 |
| Murugan Temple | 020 8478 8433 |
| Station Super Store | 020 8503 4711 |
| Best Food | 020 8552 9578 |
| Akilan Enterprise | 020 8548 0033 |

**Ilford**

| | |
|---|---|
| Vinnayagar Kovil | 020 8911 8934 |
| Nathan | 020 8514 1744 |
| Angels | 020 8553 0490 |
| Sri Supermarket | |

**Edmonton**

| | |
|---|---|
| New Kannan Stores | 020 8884 4979 |
| Sayas | 020 8805 9529 |
| Nagapoosani Temple | 020 8884 3333 |

**Walthamstow**

| | |
|---|---|
| Vinayagar Kovil | 020 8527 3819 |
| Kumarans | 020 7609 1912 |
| Prabas | 020 8509 3322 |

**Harrow**

| | |
|---|---|
| Tsk food & Wine | 020 7622 4258 |
| Eelavan | 020 8863 6160 |
| Prabhas | 020 8866 0977 |
| South Harrow F&W | 020 8423 6321 |
| Best foods | 020 8423 9933 |
| Sambal Express | 020 8799 7171 |

**Wembley**

| | |
|---|---|
| Malar Super Market | 020 8795 5797 |
| Ganapathy C & C | 020 8795 4627 |
| Best foods | 020 8900 0100 |
| Vahizan Disc | 020 8795 0648 |

**Ealing**

| | |
|---|---|
| Amman kovil | 020 8810 0835 |

**Greenford**

| | |
|---|---|
| Ambiha | [illegible] |

**Coventry**

| | |
|---|---|
| Eellakanthan Temple | 02476663554 |

**South hall**

| | |
|---|---|
| Thamilini C & C | 020 8606 9900 |
| Duvaraka C & C | 020 8813 9126 |
| Palm Palace | 020 8813 9663 |
| Spicy Palace restaurant | 020 8574 4087 |
| Luxmys C & C | 020 8571 4599 |
| Tamilan C & C | 020 8561 8174 |
| Lady Margret | 020 8571 4434 |

ஒருபேப்பர் ஆசிரியர் குழுவைச் சேர்ந்த
அ.இரவி மற்றும் சயந்தன் இருவரினதும் நூல் வெளியீடு....




• 12 மே 2012 சனிக்கிழமை

• மாலை 5:00மணி முதல்

• சிவயோகம் மண்டபம்.

**180 – 186 UPPER TOOTING ROAD, SW17 7EJ**

மேலதிக விபரங்களுக்கு : 020 7043 4310
: 07871 680 930

www.facebook.com/orupaper Mail : info@orupaper.com

# உரையாடல் அரங்கு

நடத்துனர் : இளையதம்பி தயானந்தா

முதலுரை : க.சீவரத்தினம்

• அறிமுகம்

சோமிதரன்

**வெடித்த நிலத்தில் வேர்களைத் தேடி** - ஆவணப்படம்

ஈழத்தமிழர்களின் வரலாற்றுப் பூர்வீகத்தினை ஆதாரப்படுத்தும் ஓர் ஆவணம்

அறிமுக உரை : ரஜித்தா பிரதீபன்

---

• வெளியீடு

அ.இரவி

**பாலைகள் நூறு** - கதைகளின் தொகுப்பு

வெளியிடப் பெறுபவர் : அ.வைரவமூர்த்தி

வெளியீட்டு உரை : நா.கண்ணன்

குறிப்பு உரை: அருந்ததி இரத்தினராஜா
ஜெயக்குமார் மகாதேவன்

---

• விமர்சனம்

சயந்தன்

**ஆறாவடு** - புதினம்

1987 - 2002 இலங்கைத் தீவில் இரண்டு சமாதான காலங்களுக்கிடையில் நகரும் கதை

விமர்சன உரை: ம. எழிலன்
சசீவன் கணேசானந்தன்

கருத்து உரை : கதை படித்தோரும் படிக்காதோரும்

நிறைவு உரை : கோபி இரத்தினம்

-ஒரு பேப்பர் காரர்கள்+காரிகள்

# துணையற்றவர்களுக்கு நம்பிக்கையும் வெற்றியும் பெற்றுத்தரும் ஆன்மீக, சோதிட அறிஞர் குருஜீ

ஆன்மீக குணப்படுத்தலிலும் சோதிடத்திலும் விசேட திறமையுள்ள பரம்பரை வழிவந்த குருஜீ இவ்வகையான சித்து ஞானமும் விஞ்ஞான அறிவும் தனது உடலில் ஊறியுள்ளதை சிறுவயதிலிருந்தே உணர்ந்திருந்தார்.

அவருடைய சொந்தக் கிராமத்தில் இளவயதினராக இருக்கும்போதே வெள்ளை உடை அணிந்த ஞானி ஒருவர் இவரை அணுகுவது போன்று அடிக்கடி இவரது கனவில் தோன்றினார்.

சிறந்த அருளினால் சூழப்பட்டது போன்ற இவ்வுருவம் குருஜீயிடம் அதிவிசேட குணாதிசயங்கள் அமைந்திருப்பதை சைகைகள் மூலம் தெரியப்படுத்தினார்.

இவர் இளவயதிலேயே தம்மிடமிருந்து என்ன எதிர்பார்க்கப்படுகிறது என்பதையும் தம்மிடமுள்ள விசேட ஆற்றல்மூலம் மற்றவர்களுக்கு உதவுவதே தமது கடமையெனவும் உணர்ந்து கொண்டார்.

எதிர்காலத்தை உணரும் ஆற்றலுடன் ஆன்மீகப் பாதையில் செல்ல விரும்புவோருக்கு மகிழ்வும் வெற்றியும் பெற்றுக் கொடுக்கத் தேவையான கருவிகளைத் தாம் பெறல் வேண்டும் என்பதை உணர்ந்தார்.

இவருடைய 19 ஆவது வயதில் இவருக்கு அறிவுரைகூறி ஏற்ற பாதையில் நடத்திச் செல்லக்கூடிய ஆசான்கள் இருவர் கிடைத்தது இவரது அதிஷ்டமாகும். இவ்விருவரும் இவருக்கு கணித சாஸ்திரம், கைரேகை, சோதிடம், வழிபாடு, தியானம் பற்றிய அறிவை ஊட்டினர். அத்துடன் அதிஷ்டப் பொருட்கள், நிறங்கள் ஆகியவற்றை முன்கூட்டியே சொல்லக்கூடிய ஆற்றலையும் அடைந்தார்.

'மக்கள் துன்பம் காரணமாக என்னிடம் வரும்போது எனது ஆற்றலை உபயோகித்து அவர்களுக்கு ஒரு தீர்வைக் கூறுவேன்'

இவரை நம்பி இவரைப் பின்பற்றுவோர் பலருண்டு. கடவுளின் அருளினாலேயே அவர்களுக்கு என்னால் உதவமுடிகிறது.

என்னிடம் உள்ள ஆற்றலை அவர்களுடன் பகிர்ந்து கொள்கிறேன். அதற்காக அவர்கள் எனக்கும் பணம் கொடுக்கவேண்டியதில்லை. எனது செய்கை அவர்களுக்கு உதவியாக இருப்பின் மீண்டும் வந்து அவர்களுடைய பாராட்டின் பிரதிபலிப்பாக ஏதாவது சன்மானம் அளிப்பார்கள், அல்லது அவர்களது குடும்பத்தவரையோ நண்பர்களையோ என்னிடம் அனுப்புவார்கள். பலதரப்பட்ட சவால்களை ஏற்று அவற்றிற்குத் தீர்வு காண்பதில் உள்ள தனது நேர்மையையிட்டு இவர் பெருமிதம் அடைகிறார்.

**நான் உதவுவதற்கே இங்குள்ளேன். அதற்காக எந்தவித பிரதி உபகாரத்தையும் நான் எதிர்பார்ப்பதில்லை.**

இவரிடம் பலதரப்பட்ட பிரச்சனைகளுடன் மக்கள் வருகிறார்கள். திருமணம், குழந்தை பெறாமை, வேலையில்லாமை, வியாபார நட்டம் ஆகியவற்றிற்குத் தீர்வுகளும், உதவிகளும் வெற்றியும் தேடி மக்கள் வருகிறார்கள்.

'நான் உதவுவதற்கே இங்குள்ளேன். அதற்காக எந்தவித பிரதி உபகாரத்தையும் நான் எதிர்பார்ப்பதில்லை. என்னால் முடிந்தவரை முயற்சிப்பேன். நான் வழிபாட்டின் ஆற்றலை நம்புகிறேன். அத்துடன் எனது பார்வை வெற்றியை நோக்கியதாகும்' என்கிறார் குருஜீ.

*குருஜீ - 07965559918*


# SPIRITUAL HEALING & ASTROLOGY

FREE ABSOLUTELY FREE FREE

**உலகத்தில் சூரிய, சந்திரன் நவக்கிரக மகிமையினாலே இன்பம், துன்பங்கள் நன்மை தீமைகள், பற்றிய விபரங்களைக் கூறுவார். இவரை ஒருமுறைசந்தியுங்கள். கைரேகை, பெயர் இராசி, லட்சுமி கடாட்சம், பொருள், அரசியல், உத்தியோகம், கல்வி,வியாபாரம், திருமணம், குழந்தை பாக்கியம், கணவன், மனைவி ஒற்றுமையின்மை, காதல் கலியாணம் மற்றும் விசா தொடர்பான விடயங்கள் பார்த்து சொல்லப்படும். நிலம், வீடு, யோகம், அதிஸ்ட நம்பர்கள், கோர்ட் வழக்குகள், கண்திருட்டி பரிகாரம் செய்வார். சாந்தி செய்து தரப்படும்.**

உடன் சந்தியுங்கள்.....

People ask as to how he got such spiritual powers at such a young age. It is just one of God's miracles.

Please Take Prior Appointment

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்.

**GURU JI [Spiritual Healer & Astrologer]**

**07965 559 918 | Hounslow, Middlesex**

All matters will be kept confidently.

# கருணாநிதியின் அரசியல் இருப்பிற்கு கைகொடுக்கும் "தமிழீழம்"



தற்போது பரவலாகப் பேசப்படும் விடயம், கருணாநிதியின் 'தமிழீழம்' என்கிற முழக்கம் பற்றியதாகும்.

27 வருடங்களிற்கு முன் உருவாக்கப்பட்டு, கேட்பாரற்று கிடந்த தமிழீழ ஆதரவாளர் அமைப்பினை (TESO), மறுபடியும் தூசிதட்டிக் கையில் எடுத்துள்ள கருணாநிதியின் நகர்வின் பின்புலம் என்ன என்பது குறித்தே காரசாரமான விவாதங்கள் எழுந்துள்ளன.

இவர் உள சுத்தியோடு சொல்கிறாரா, இல்லையேல் அரசியல் சுயநலத்திற்காக இப் பிரச்சினையைதூக்கிப்பிடிக்கிறாரா? என்பதுதான் மக்கள் மத்தியில் உருவாகியுள்ள பலத்த சந்தேகம்.

**மக்களும், விடுதலைப் போராளிகளும் அழியும் போது கிளஸ்டர் குண்டுகள் கருவறைச் சிசுக்களின் செவிப்பறைகளை உடைக்கும் போது, உமிக்குவியலில் மக்கள் அரிசியைத் தேடும் போது, இசைப்பிரியாக்கள் கதறும் போது, தமிழினத் திராவிடத் தலைவர் கருணா நிதிக்கு எதுவுமே புலப்படவில்லை.**

இவரது கட்சிக்குள் எழுந்துள்ள ஸ்டாலின் - அழகிரி சகோதர யுத்தத்தை மூடி மறைப்பதற்கும், கட்சி உடையாமல் இருப்பதற்கும், இக் கோஷத்தை கருணாநிதி முன்வைக்கிறார் என இந்திய ஆங்கில ஊடகமொன்று அண்மையில் சாடியிருந்தது

ஒரு கல்லில் பல மாங்காய்களை வீழ்த்தும் அரசியல் சாணக்கியம் தெரிந்தவர் இவரென்று பலரும் போற்றுவதால், சகோதர யுத்தப் பிரச்சினைக்கு அப்பால்வேறுபல இருப்புப்பிரச்சினைகளும் உள்ளது போல் தெரிகிறது.

அண்மையில் நடந்த தமிழக தேர்தல்களில், யாருடனும் கூட்டுச் சேராமல் தனியே நின்று வெற்றிவாகை சூடும் அதிமுக வின் அசுர பலத்தால் கருணாநிதி தடுமாறுகிறார் என்பதிலிருந்த்து ஆரம்பிக்கிறது இப்பிரச்சினை

63 சட்டசபைத் தொகுதிகளில் போட்டியிட்டு 58 இடங்களில், சீமானின் சூறாவளிச் சுற்றுப் பயணத்தால் தோல்வியடைந்த காங்கிரசை நம்பி, இனி அரசியல் நடத்த முடியாது என்பதனை கருணாநிதி நன்றாகவே புரிந்துள்ளார்.

அத்தோடு வட இந்தியாவில் அண்மையில் நடைபெற்ற சட்ட சபைத் தேர்தல்களில் காங்கிரஸ் படுமோசமாகத் தோற்கடிக்கப்பட்ட நிகழ்வும், கருணாநிதியின் இராஜதந்திரக் கண்களை அகலத் திறந்திருக்கும்.

ஆகவே ஐ.நா. பிரேரணை குறித்து பெரிதாகப் பேசப்பட்ட நேரத்தில் தமிழகத்தில் ஏற்பட்ட எழுச்சி, ஒட்டு மொத்த அரசியல் கட்சிகளும் அதற்குச் சார்பாக எடுத்த நிலைப்பாடு, வேகமாக வளர்ந்து வரும் சீமானிட்கான ஆதரவுத்தளம், சுதர்சன நாச்சியப்பனின் இலங்கைப் பயணத்தின் பின்னரான தமிழக காங்கிரசின் சரிவு நிலை போன்றவற்றை ஆய்வுக் குட்படுத்திய கருணாநிதி, ஈழப் பிரச்சினையை மறுபடியும் கையிலேடுப்பதைத் தவிர வேறு மார்க்கமில்லை என்கிற முடிவிற்கு வந்துவிட்டார் போல் தெரிகிறது.

இவை தவிர மே 17 இயக்கம், நாம் தமிழர் கட்சி என்பன இளையோர் மத்தியில் உருவாக்கும் சிந்தனைத் தாக்கங்கள் , தமது கட்சியின் எதிர்கால இருப்பிற்கு அச்சுறுத்தலாக அமையுமென்பதை முற்கூட்டியே ஊகித்துக் கொள்கிறார் தி.மு.க.தலைவர் கருணாநிதி .

கூடன்குள அணு மின் நிலையம் , முல்லைப் பேராறு, மீனவர் படுகொலை, மின்வெட்டு போன்ற வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்காக போராட முன்வராத கருணாநிதி , திடீரென ஈழத் தமிழ் மக்களுக்கு 'தமிழீழம்' தான் ஒரே தீர்வுஎன்கிற ஆயுதத்தை ஏன் கையிலேடுக்கின்றார் என்பதனை உலகத் தமிழினம் நன்கறியும்

மத்திய அரசு, போரை நிறுத்த அழுத்தம் கொடுக்காவிட்டால், தமதுநாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசுக்கு வழங்கும் ஆதரவினை மீளப்பெறுவார்கள் என்பதோடு பதவியைத் துறப்பார்கள் என்று பெரிய குண்டைத் தூக்கிப் போட்டார் கருணாநிதி.

மகள் கனிமொழியை திகார் சிறையிலிருந்து விடுதலையை செய்ய, அடிக்கடி டெல்லிக்கு பயணம் செய்த கருணாநிதி, முள்ளிவாய்க்காலில் தமிழ் மக்கள் சாரை சாரையாகக் கொல்லப்படும் போது, மன்மோகன் சிங்கிற்கு கடிதம் அனுப்பிக் கொண்டிருந்தார்.

இரண்டாம் அலைக்கற்றை ஊழலில் இரண்டரை இலட்சம் கோடி ருபாவை மோசடி செய்ததாக குற்றச்சாட்டப் பட்டவர்களுக்காக, தள்ளாத வயதிலும் ஓடித்திரிந்த கருணாநிதி, ஒன்றரை இலட்சம் தமிழர்கள் வன்னி பெரு நிலப் பரப்பில் கொத்துக்குண்டு வீச்சினால் கொல்லப்பட்ட போது அசையவில்லை.

ஊடக நண்பர் பிரேம் சிவகுரு குறிப்பிடுவது போன்று, கும்பகர்ணத்தூக்கத்திலிருந்த 'டெசோ' அமைப்பைத் தூக்கத்திலிருந்து எழுப்பி, இயக்க ஆரம்பிப்பதற்கு அரசியல் விளக்கமும் கொடுக்கப்படுகிறது.

சாத்வீகப் போராட்டம், ஆயுதப் போராட்டம் என்பன முடிவுற்று, அடுத்ததாக ஐ.நா. அவை நோக்கிய மூன்றாம் கட்டப் போராட்டம், இந்த 'டெசோ' அமைப்பின் ஊடாக ஆரம்பிக்கப் பட்டுள்ளதாக ஈழவிடுதலை ஆதரவாளர் சு.ப.வீரபாண்டியன் அவர்கள் கூறுகின்றார்.

**அரசியல் பார்வை**

**இதயச்சந்திரன்**

வடகிழக்கில் தமிழீழத்திற்கான வாக்கெடுப்பு நிகழ்த்தப்பட வேண்டும் என்பதனை இலக்காகக் கொண்டு, ஐ.நா.அவைக்கான அழுத்தத்தை இவ்வமைப்பு கொடுக்குமாம்.

இவ்வாறான கோரிக்கை பல புலம்பெயர்ந்த தமிழர் அமைப்புகளால் மிக அண்மைக் காலமாக முன் வைக்கப்பட்டு வரும் நிலையில், அவ்வாறான 'வாக்கெடுப்பு' முழக்கம், புலம்பெயர் மக்களின் ஆதரவினை கருணாநிதிக்குப் பெற்றுத் தரும் என்கிற எதிர்பார்ப்பும் இந் நகர்வில் இருக்கலாம்.

ஆனால் இந்திய மத்திய ஆட்சியில் பங்காளியாக இருக்கும் தி.மு.க. வானது, நடுவண் அரசிடம் இக்கோரிக்கையை முன்வைத்து, அதன் ஆதரவினைப் பெற முயற்சிப்பதே பொருத்தமானதாகவிருக்கும்.

அதனை விடுத்து, ஐ.நா.விற்கு அழுத்தம் கொடுக்கப் போகிறோம், சீனாவிற்கு சிக்கலைக் கொடுக்கப் போகிறோம் என்றவாறு, மத்திய அரசோடு முரண்படுவதை மிகச் சாதுரியமாக தவிர்த்துக் கொள்கிறார் நமது மூன்று மணி நேர உண்ணாவிரதி கருணாநிதி.

'தமிழீழம்' என்கிற பிறப்புரிமை குறித்துப் பேசுவோர் எல்லோரும் மீட்பர்கள் என்று ஏற்றுக்கொள்ளும் நிலையில் தற்போது தமிழினம் இல்லை.

மக்களும், விடுதலைப் போராளிகளும் அழியும் போது கிளஸ்டர் குண்டுகள் கருவறைச் சிசுக்களின் செவிப்பறைகளை உடைக்கும் போது, உமிக் குவியலில் மக்கள் அரிசியைத் தேடும் போது, இசைப்பிரியாக்கள் கதறும் போது, தமிழினத் திராவிடத் தலைவர் கருணா நிதிக்கு எதுவுமே புலப்படவில்லை.

அண்மைக்காலம் வரை, சகோதர யுத்தமே போராட்டத்தை அழித்தது என்று, புவிசார் அரசியலின் சூத்திரம் புரியாமல் உளறிக் கொண்டிருந்தவருக்கு, பௌத்த சிங்களப் பேரினவாதத்தின் தமிழ் இன அடி அழித்தலின் வன்மம் தெரியவில்லை என்று நினைப்பது மடமைத் தனம்.

போரை நிறுத்திவிட்டோம் என்று மகிந்தர் கூறி, தனது உண்ணாவிரதத் தவத்தினைக் கலைத்து ஏமாற்றியதாக கருணாநிதி கூறுகிறார்.

சிங்களம் ஏமாற்றும் என்பதை உணர்ந்து தானே தமிழீழ ஆதரவாளர்கள் அமைப்பினை (TESO) உருவாக்கினீர்கள். இவ்வளவு அரசியல் சாணக்கியம் தெரிந்த நீங்கள், எவ்வாறு இரண்டாவது தடவையாக சிங்களத்திடம் ஏமாந்தீர்கள் கலைஞரே!

**அண்மையில் நடந்த தமிழகத் தேர்தல்களில், யாருடனும் கூட்டுச் சேராமல் தனியே நின்று வெற்றி வாகை சூடும் அதிமுகவின் அசுர பலத்தால் கருணாநிதி தடுமாறுகிறார் என்பதிலிருந்த்து ஆரம்பிக்கிறது இப்பிரச்சினை**

இந்திய நடுவண் அரசின் வெளியுறவுக் கொள்கையே மாநில அரசின் கொள்கை என்று முள்ளிவாய்க்கால் கடந்து மூன்றாண்டுகளாகச் சொல்லி வந்த நீங்கள், ஒரு இரவிலேயே 27 ஆண்டுகளுக்கு பின்னோக்கி சென்றதன் மர்மம் என்ன?

தமிழ்ப்பிரதேசத்தில் வாக்கெடுப்பு நிகழ்த்தப்பட வேண்டும் என்கிற பிரேரணையை 'டெசோ' அமைப்பில் அங்கம் வகிக்கும் கருணாநிதியின் திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய நாடாளுமன்றத்தில் முன்வைக்குமா என்கிற கேள்வியை சுப.வீரபாண்டியன் அவர்களிடமே விட்டுவிடுவோம் .

'தமிழீழம்' வேறு 'கட்சி' வேறு, இரண்டையும் இணைத்துப் பார்க்கக் கூடாதெனப் பொருள் விளக்கவுரை கூறும் சுப. வீரபாண்டியன் அவர்கள், மத்திய அரசுடனான தி.மு.க.வின் உறவுக்குப் பங்கம் விளையக் கூடாதென்கிற எச்சரிக்கை உணர்வோடு இருப்பதுபோல் தெரிகிறது. ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் வாக்களிக்கும் உரிமை உடையவர்கள், அமைப்புகள் அல்ல, 'நாடுகள்' தான் என்பதைப் புரிந்து கொண்டால், இதற்கான அழுத்தத்தை 'டெ.சோ' அமைப்பு இந்திய நடுவண் அரசிற்கு கொடுக்கட்டும்.

**Currency Trading Course** 14th to18th May 2012

The next currency trading course would be from Monday 14th to 18th May 2012. You CAN start from an absolute, Zero beginning. It will be a clear cut, simple, straightforward and enjoyable course. Where ever needed tamil explanation will be given to make every one understand the course. This will be a comprehensive course and provide you with everything you need to learn Currency trading (Forex) and start trading profitably. The fee for this course has been highly reduced to enable as many of you to benefit from learning this highly lucrative skill.

Venue: Knights of Harrow Seminar Room 164 Pinner Road, Harrow, HA1 4JJ.

10:00am to 3:00pm

[Seats are limited.] The Fee: £250

To book your space contact: Nthiran: 0781 221 1663
Para: 0795 850 7010, Kajan: 0782 794 7964

BALU ASIAA MONEY TRANSFER

அனைத்து நாடுகளிற்குமான துரித கதியிலான பணமாற்றுசேவையை பெற்றுக்கொள்வதற்கு நாடவேண்டிய ஒரே இடம்.

Head Office
5 Upper Green west, Mitcham, Surrey, CR4 3AA.
Tel: 020 864 846 44
020 843 229 66
Mob: 07904 590 115

Germany: Balu Asiaa
Tel: 0049 2932 898 625
0049 1520 395 2364

Branches:
Wembley: STADIUM FOOD & WINE
233 Harrow Road, Wembley, HA9 6DX.
Tel: 020 890 016 59

# குளத்தோடு கோவித்துக் கொண்டு...



சுகி
(ஒருபேப்பருக்காக)

எமது சொந்த மண்ணைவிட்டு, சொந்த பந்தங்களை விட்டு, வாழ்ந்த வீடு, வளர்த்த தென்னங்கன்று, என்று எல்லாவற்றையும் துறந்து, உயிர் பிடித்துக் கொண்டு வெளிநாட்டுக்கு வேறு வழியின்றி கொஞ்சப்பேரும், பல கனவுடன் விருப்பத்துடன் கொஞ்சப்பேருமாக பல வகையினர் இருந்தாலும், இங்கு வந்ததும் வேலை, படிப்பு, வியாபாரம் மற்றும் இன்னோர் அன்ன வேலைகளில் மூழ்கிக்கொண்டு, விடிந்தது பொழுது படுகிறது தெரியாத வகையில், இப்பத்தானே கிறிஸ்மஸ் வந்தது, அதுக்கிடையில் அடுத்ததா என்றவகையில் நேரக்கம்பியை விட வேகமாக வாழ்க்கையில் ஓடிக் கொண்டிருக்கிறார்கள்.

இதில் எதிலும் ஒட்டாது, ஆனால் பிள்ளைகளுக்காக இந்த மொழி தெரியாத நாட்டுக்கு வந்து விட்டோம் என புலம்பும், அல்லது மொழி புரிந்தும், புலம்பலை வெளிக்காட்டாது வாழும் பல வயது போனவர்கள் உண்டு. அங்கிருக்கும் போது யாருக்கும் கடமைப்படாது, மூன்று வேளை சாப்பாட்டையும் தம் விருப்பம் போல் சமைத்து, விரும்பிய கோயில், குளம் என்று, வாழ்ந்தவர்களுக்கு இங்கு, பிள்ளைகளில் தங்கியிருக்கும் நிலையும், சொந்த சமையல் அறையில் இருக்கும் உபகரணங்களைக் கூட சரியாக உபயோகிக்க முடியாதநிலையும், தனித்து பிரயாணம் செய்ய முடியாத பயமும், அவர்களை நிரந்தர நோயாளியின் மனநிலைக்கு ஆக்கி விடுகின்றது.

அவர்களுக்கு எதிர்காலத்தை பற்றிய பயம், ஊரில் இருப்பதை விட இங்கு பலமடங்கு அதிகமாகவே காணப்படுகிறது. அவர்களைச் சூழ்ந்துள்ளவர்களுடன் மனம்விட்டு கதைக்கவோ, வாய்விட்டுசிரிக்கவோ இயலாதளவிற்கு, நேரத்தை அடைவு வைத்து விட்ட சூழவுள்ளவர்களின் வேலைப்பளு, தமக்கு வருத்த துன்பம் வந்தால் இவர்களால் பார்க்க முடியுமா? என்ற ஏக்கம், கவலையாக உருவெடுக்கிறது. வருத்தம் வர முன்பே, தனது பிள்ளைகள் தம்மிடம் அன்பாக உள்ளார்களா? என்ற சில, பல அன்பு பரிசோதனைகளைச் செய்யமுற்படுவதோடு, தனது பொம்மை என்று பிறரோடு பகிர்ந்து கொள்ளாது நாமே வத்திருக்க முற்படும் குழந்தையின் மனோ பாவம் போல் தனது மகன் அல்லது மகள் மீது பிரத்தியோகமான அன்பை வெளிக்காட்டுவதோடு அவர்களும் அதே போலதம் மீது காட்ட வேண்டும் என்றும் விரும்புகிறார்கள்.

வேலைத்தலத்திலும், வீட்டிலும் சரி ஒருவரின் பிரசன்னமோ, இருப்போ மற்றவர்களுக்கு தேவை, அல்லது சந்தோசத்தைக் கொடுக்கிறது எனும் போதுதான், அவரின் முக்கியத்துவம் உணரப்படுகிறது. அவரும் அவரின் இருப்பின் முக்கியத்துவத்தால் மனநிறைவு கொள்ளுகின்றார். கணவனோ, மனைவியோ, பிள்ளையோ நேரம் சென்று வரும் போது, வீட்டில் உள்ளவர்கள் என்னப்பா இவ்வளவு நேரம்? என்று தமது இருப்பின், இழப்பை அடையாளம் கண்டு கொள்ள வேண்டும் என்று எதிர் பார்கிறார்கள். இருப்பு முக்கியமாகும் போது, இழப்பும் உணரப்படுகிறது, அது மனித இயல்பு, சுயநலம் என்றும் கூறலாம். ஒருவர் நன்றாக உழைக்கும் போதும், வருவாய் ஈட்டும் போதும், வீட்டில் எல்லா வேலைகளையும் செய்யும் போதும், பிள்ளைகள் என்றால், நன்றாக படித்து, விளையாட்டில் சிறந்து, கலைகளில் தேர்ச்சி பெறும் போதும், குழந்தைகள் என்றால் அவர்களின் எல்லா அசைவுகளும் தரும் மகிழ்ச்சியின் போதும், இருப்பின் முக்கியத்துவம் மற்றவர்களால் உணரப்படுகிறது, பாராட்டப்படுகிறது.

இப்போ முதுமை காரணமாக ஒரு வேலையும் செய்யமுடியாமல், பணவருவாயும் இல்லாமல், உங்களின் முற்று முழுதாகக் தங்கியிருக்கும் பெற்றோருக்கு அடிக்கடி ஒரு சந்தேகம் வரும், அதாவது தனது இருப்பு, வீட்டில் இருக்கும் மற்றவர்களுக்கும் மகிழ்ச்சியையும், சந்தோசத்தையும் கொடுக்கின்றதா? என்பது தான் அது. எமக்கு வயதுபோய் நாம் எமது பிள்ளைகளின் வருவாயில், வீட்டில் அடைந்து இருக்கின்றோம் என்று, ஒருகணம் அவர்களின் நிலையில் இருந்து பார்த்தால், இதனை நாம் முழுமையாக உணர்ந்து கொள்ளலாம். வேலையில் இருந்து பெண் நண்பிக்கும், காரில் பயணம் செய்து கொண்டு பிள்ளைக்கும் ஒரு நாளைக்கு ஒருதடவையாவது தொலைபேசி எடுக்கும் நாம், எமது பெற்றோருக்கும் அது மாதிரி எடுத்து சுகம் விசாரிக்கின்றோமா? அவர்கள் வாழும் நாட்கள் எமக்கு மகிழ்ச்சி தருவதை சொல்கின்றோமா? அவர்களின் இருப்பின் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றோமா?

முன்பு உழைக்கும் போதும், உதவியாக இருந்த போதும் அன்பு காட்டிய பிள்ளைகள், இருப்பின் முக்கியத்துவம் குறைந்ததால் கடமைக்காக ஏதோ தானோ என்று பார்கிறார்கள் என்று, அவர்களை நினைக்க வைக்கின்றோமா? கட்டியணைக்கிறோமா? கொஞ்சிகுலாவுகிறோமா? எமது குடும்பத்தின் முக்கிய நபராகமதித்து எமது குடும்ப விடயங்களை, பொது, வேலை விடயங்களை பகிர்ந்து கொள்கிறோமா? எமது நாளில் ஒரு ஐந்து நிமிடத்ததை அவர்களுக்காக ஒதுக்குகின்றோமா? நாம் போகும் இடங்களும் அவர்களை விரும்பி கூட்டிக்போகின்றோமா? இதில் எல்லாவற்றையும் அவர்களின் உடல் நிலை, நோய்கள் கருதி செய்ய முடியாவிட்டாலும், இயலுமானதை செய்தால் அவர்கள் வாழும் காலத்தில் அவர்கள் மகிழ்ச்சியாக வாழ்வார்கள். அன்புக்கு கட்டுபடாதவர்கள் குறைவு, ஆனால் நீங்கள் காட்டும் அன்பு, பலனை எதிர்பாராததாக இருக்க வேண்டும். வயதுபோனவர்களிடம் நீங்கள் எதிர்பார்பதற்கு ஒன்றுமில்லை என்று ஆகும் போது தான், உங்கள் அன்புக்குச் சோதனை வருகின்றது. நீங்கள் சுயநலம் இல்லாதவராக இருக்கும் இடத்தில் தான், அப்படியான அன்பைச் செலுத்தமுடியும், அன்பு, குறையை மறைக்கும், மன்னிக்கும்.

இங்கு பெற்ற பிள்ளைகள் ஒருமாதிரியும், வந்த மருமகள், மருமகன், பேரப்பிள்ளைகள் இன்னொரு மாதிரியும் அவர்களை நடாத்துவதையும், அதனால் குடும்பத்தில் பிரச்சனைகள் வருவதையும் காணலாம். சிறு பிள்ளைகளின் மனதில் எதுவும் பசுமரத்தாணி போல் பதிந்து விடும். நீங்கள் உங்கள் பெற்றோரையோ, மாமன் மாமியையோ நடாத்தும் விதம், அறிவு வர அவர்கள் விளங்கிக் கொள்வார்கள்.

வயது போக, அதே மாதிரி உங்களை அவர்கள் நடாத்தினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. வேண்டாத கோபதாபங்களாலும், பேசித் தீர்த்துக் கொள்ளாத பிரச்சனைகளாலும், நான் முக்கியமோ அவர் முக்கியமோ என்ற இருப்பு பிரச்சனையாலும், குடும்ப வாழ்க்கை நரகமாகிவிடும். ஏனெனில் தாயன்பை இழக்க எல்லோரும் விரும்பமாட்டார்கள்.

காலைக்கடனை முடித்துவிட்டு, நான் குளத்தோடு கோபம் என்று நீங்கள் இருப்பீர்களேயானால்? அசிங்கம் உங்களுக்குத்தான், குளத்துத்திற்கில்லை!






# பிரான்ஸ் தேர்தல் - 2012



**சாத்திரி**
*(ஒரு பேப்பர்)*

பிரான்ஸ் மக்களும் உலக நாடுகளும் ஆவலுடன் பரபரப்பாக எதிர் பார்த்துக்கொண்டிருந்த பிரான்சின் தேர்தல் முதல் சுற்று நடைபெற்று முடிந்து விட்டது. ஊடகங்கள் வெளியிட்ட புள்ளி விபரங்களின் படியே பிரான்சின் சோசலிசக் கட்சி வேட்பாளர் François Hollande 28.5 வாக்குகளை பெற்று முதலாமிடத்திலும். வலதுசாரி கட்சியான (U.M.P) வேட்பாளர் Nicola Sarkozy 27 சத வீத வாக்குகளை பெற்று இடண்டாமிடத்திலும் தீவிர வலதுசாரிக் கட்சியான (F.N) கட்சி வேட்பாளர் Marine Le Pen அவர்கள் 18.1 வீத வாக்குகளை பெற்று மூன்றாமிடத்தையும் பிடித்திருக்கின்றார்கள்.

**இனி 5 வருசத்திற்கு சோசலிச றோசாப்பூ மலர்ந்திருக்கப் போகின்றது என்பது உறுதியாகிவிட்டது. ஆனால் அதை யார் யார் பிடுங்கி எப்படி பாவிக்கப் போகிறார்கள் என்பதை பொறுத்தே அடுத்த தேர்தலில் மக்கள் முடிவு செய்வார்கள்.**

இனிவரும் 6 ந்திகதி மேமாதம் இரண்டாவது சுற்றில் முறையே முதலாமிடத்தில் உள்ள சோசலிசக் கட்சிக்கும் இரண்டாமிடத்தில் உள்ள வலதுசாரிக் கட்சிக்கும் பலமான போட்டி நிகழப் போகின்றது.

பிரான்சில் வாக்களிப்போரின் எண்ணிக்கை வீதம் வீழ்ச்சியடைந்து செல்வதோடு மட்டுமல்லாமல் இளையோர் சமூகத்தில் தேர்தல் மீதான ஆர்வம் இல்லாமிருப்பதாகவும் தேரதல் ஆணையம் கவலை வெளியிட்டுள்ளது. பிரான்சில் 55 சதவீதமானோரே வாக்களிப்பு செய்கின்றனர்.

அதற்காக இந்த தடைவை தேர்தலில் அனைவரும் வாக்களிக்க வேண்டும் என்கிற பிரச்சாரத்தினையும் சில பொது அமைப்புக்கள் மூலமாக தேர்தல் ஆணையம் செய்திருந்தது. ஆனால் அதில் பெரியளவு முன்னேற்றம் எதுவும் ஏற்பட்டதாக தெரியவில்லை. அதுவும் தமிழர்களை பொறுத்தவரை வாக்களிப்பு என்பது மிக மோசமான நிலையிலேயே உள்ளது. குடியுரிமையை எடுத்துக்கொண்டு இங்கிலாந்தில் போய் குடியேறிவிடுவது அல்லது ஒருக்கால் ஊருக்கு போய் வந்து விடுவதோடு அவர்களது குடியுரிமை பெற்றதன் நோக்கம் முடிந்துவிடுகின்றது.

இனி நடந்து முடிந்த தேர்தலிற்கு வருவோம் முக்கியமான தேர்தல் வாக்குறுதிகளில் சோசலிசக் கட்சி வெற்றி பெற்றால் தான் பதவிக்கு வந்ததும் முதலாவது வேலையாக ஆப்கானிலிருந்து பிரெஞ்சு இராணுவத்தை திரும்பப் பெற போவதாக வாக்குறுதி அளித்திருந்தார்.

அதற்காகவே பிரான்சில் இருக்கும் அறுநூறிற்கும் அதிகமான பள்ளிவாசல்களில் கூட்டமைப்பு சோசலிசக் கட்சிக்கு ஆதரவு வழங்கியதோடு சோசலிசக் கட்சிக்கு வாக்களிக்குமாறு பகிரங்க அறிக்கையும் விட்டிருந்தது. காரணம் சார்க்கோசியின் ஆட்சியிலேயே முஸ்லிம் பெண்கள் பிரான்சில் பர்தா (முக்காடு போடுதல்) அணியக்கூடாதுஎன்கிறசட்டத்தை கொண்டு வந்திருந்தில் கடுப்பாகியிருந்தனர். அதே போல பெரும்பாலான முஸ்லிம்களும் சோசலிசக் கட்சிக்கே வாக்களித்திருந்ததுடன் இரண்டாவது சுற்றிலும் சோசலிச கட்சிக்கே வாக்களிப்பார்கள் என்பதும் உறுதி. ஆனால் சோசலிசக் கட்சி ஆட்சிக்கு வந்து ஆப்கானிலிருந்து இராணுவத்தை திரும்ப பெற்று விட்டால் மட்டும் பிரான்சில் முஸ்லிம் தீவிரவாத அமைப்புக்களின் நடவடிக்கைகள். கட்டுப்பாட்டிற்குள் வருமா? என்பது கேள்விக்குறியே.. அது மட்டுமல்ல மீண்டும் முக்காடு போடுவதற்கான அனுமதி கேட்டு ஆர்ப்பாட்டங்கள் நடைபெறும் என்பதையும் எதிர்பார்க்கலாம்.

வலது சாரிகட்சியின் வேட்பாளர் அதிரடியான பல திட்டங்களை அறிவித்தபடி தேர்தலில் இறங்கியிருந்தாலும். கடந்த பத்தாண்டுகளாக வலது சாரிகளிடம் ஆட்சியை ஒப்படைத்திருந்த பிரான்ஸ் மக்களிற்கு அலுப்புத் தட்டியிருந்தது அவர்களிற்கும் ஒரு மாற்றம் தேவைப்பட்டது.

கட்சிகளில் வாக்குறிதிகள் திறைமையான தலைவர்கள் என்பதற்குமப்பால் பிரான்சில் தொடர்ச்சியாக ஒரு கட்சியை ஆட்சியில் வைத்து அழகு பார்த்து நாட்டில் குடும்ப அரசியலையோ அல்லது ஒருவரின் சர்வாதிகார ஆட்சிக்கு வழியமைக்க பிரான்ஸ் மக்கள் வழிசமைப்பதில்லை. அதே நேரம் பிரான்ஸ் பொருளாதார ரீதியாக தள்ளாடிக்கொண்டிருக்கும் போது சார்க்கோசி அவர்களினதும் அவரது மனைவியினதும் ஆடம்பர வாழ்க்கை முறையும் சொகுசு பயணங்களும் பிரெஞ்சு மக்கள் அவ்வளவாக இரசிக்கவில்லையென்பதும் உண்மை.

அடுத்ததாக பிரான்சில் வேகமாக முன்னேறி வரும் அபாயம் என்னவெனில் இந்தத் தடைவை 18.1 வீத வாக்குகளை பெற்று மூன்றாவது சக்தியாக வளர்ந்து நிற்கும் ஐரோப்பாவின் அடுத்த பெண் கிட்லர் என வர்ணிக்கப்படும் F.N கட்சியின் மரின் லுப்பனை பற்றியது.

பிரான்ஸ் பிரெஞ்சு மக்களிற்கே என்கிற கோசத்துடன் வெளிநாட்டவர்களிற்கெதிரான கடும்கொள்கைகளுடன் வேகமாக முன்னேற்றம் கண்டு வருகின்றது இந்தக் கட்சி.பெரும்பாலும் பிரான்சில் வாழும் முஸ்லிம் சமூகத்திற்கெதிரானதான பிரச்சாரத்தினையே இவர்கள் கடுமையாக முன்னெடுத்தாலும் ஒரு சமூகம் அல்லது இனத்திற்கெதிரான பிரச்சாரமாக அது அமைந்து விடாமல் பொதுவாக வெளிநாட்டவர்கள் குடியேறிகளிற்கெதிரானதாகவே இருப்பதால் அதில் நாங்களும் அடக்கம். இந்தக் கட்சியினை இவரது தந்தை Jean-Marie Le Pen நடத்திய காலத்திலும் விட அவரது மகளான Marine Le Pen பொறுப்பெடுத்த பின்னர் அதன் வளர்சி வேகமாக அதிகரிப்பதற்கு காரணம் மற்றைய கட்சித் தலைவர்களிடம் இல்லாத அரசியல் கவர்ச்சி பேச்சாற்றல். பத்திரிகையாளர்களிற்கு சளைக்காமல் பதில்சொல்லும் திறமை என்பன கட்சியைவேகமாக வளர்க்கின்றது. நான் வசிக்கும் நகரத்தில் இந்தத் தேர்தலில் இவரே அதிக வாக்குகளை பெற்றுள்ளார் என்பதோடு அவரது பேச்சாற்றலில் மயங்கி அவருக்கே ஓட்டு போடுவமா என்றும் நான் யோசித்திருந்தேன். ஆனால் அவர் ஆட்சிக்கு வந்தால் முதல்வேலையாக என்னை நாட்டை விட்டு துரத்திவிடுவார் என்கிற பயத்தில் இன்னொரு கட்சிக்கு ஓட்டு போட வேண்டியிருந்தது.அடுத்தடுத்த தேர்தலிகளில் இவரது கட்சி ஆட்சியை பிடித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை ஆனால் பிரான்சில் ஒரு உள்நாட்டு கலவரம் கட்டாயம் நடக்கும்.என்பதுஉறுதி.

எது எப்படியோ இந்த தேர்தலில் சார்க்கோசியை பதவியால் இறக்குவது என்பதையே குறிக்கோளாக கொண்டு அனைத்து கட்சிகளும் களத்தில் இறங்கியிருந்தால் இரண்டாவது சுற்றில் போட்டியிடாத மற்றைய அனைத்து கட்சிகளிற்கு வாக்களித்தவர்களும் பெரும்பாலும் சோசலிசக் கட்சிக்கே வாக்களிப்பார்கள் என்பதை எதிர் பார்க்கலாம். அதே நேரம் அவர்களின் வெற்றி வாய்ப்பும் உறுதி செய்யப்பட்டு விட்ட நிலையில். இனி 5 வருசத்திற்கு சோசலிசறோசாப்பூ மலர்ந்திருக்கப்போகின்றது என்பது உறுதியாகிவிட்டது. ஆனால் அதை யார் யார் பிடுங்கி எப்படி பாவிக்கப் போகிறார்கள் என்பதை பொறுத்தே அடுத்த தேர்தலில் மக்கள் முடிவு செய்வார்கள்.

## ஏழை..பணம்,மனிதன்..மிருகம்..என்ற பாகுபாட்டு விதி சமைக்கும்..இந்த உலகம்..!

ஆசைகள்
அங்கும் இங்கும் ஒன்று தான்..
உடலின் சேர்க்கையில்
திரவங்களின் கலப்பில்..
வந்தன விளை பொருட்க்ள்..!

தாயென்றும் தந்தையென்றும் உறவுகள்..
சமூகமென்றும் மக்களென்றும்
கூட்டங்கள் கூச்சல்கள்...!
எல்லாமே
இயற்கையின் விதிப்படி..!

ஆனால்...
போட்ட குட்டிகளுக்கு
இரை தேட வழியின்றி
மனிதன்..!!
போட்ட குட்டிகளுக்காய்
உடல் ஒட்டிய போதும்..
இரைக்காக இரங்கும்..
இதுவும் ஓர்
உயிர்ப்புள்ள..
பிராணி தான்..!

'சாட்' செய்து... சோடி பிடித்து
கை கோர்த்து.. காதலித்து
மேடை போட்டு... வேதம் ஓதி..
தாலி கட்டி.... தேன்நிலவு கண்டு
வந்தால் என்ன..

உடல் ஒட்டி குட்டையோடு..
வீதியோரம் இழுபட்டு,
நொந்து நூலாகி வந்தால் என்ன
விளை பொருள் எங்கும் ஒன்றே..!

எல்லாம் பசிக்கு ஏங்கும்
ஜீவன்கள்..!

இந்த
உயிரின் எளிமை
உணருமா..???!
ஏழை.. பணம்
மனிதன்.. மிருகம் என்றே
பாகுபாட்டு விதி சமைக்கும்..
இந்த
செயற்கை
உலகம்..!



**கடன் சுமையால் கஸ்டப்படுகிறீர்களா?**

தனிநபரோ... வியாபாரமோ...

- கடன்/Credit Cardக்கு மாதாந்தம் கட்டும் பணத்தை குறைக்க...
- Bankruptcy யை தழுவ அல்லது தவிர்க்க...
- வியாபாரத்தை பலப்படுத்த...
- TAX / VAT / PAYE போன்றவற்றில் தகுந்த ஆலோசனையைப் பெற...

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே அழையுங்கள்

உங்களுக்கு உதவி செய்யக் காத்திருக்கிறோம்

BARNET-LONDON 020 8216 2520 MR. BRIAN
CROYDON 020 8150 9950 MR SIVA RANJAN
CAMBRIDGESHIRE 01354 707 911 MR. VAHEESAN



BBK PARTNERSHIP
www.bbkca.com
Email: admin@bbkca.com

R3

THE INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS

Chartered Accountants and Business Recovery Professionals

- Accountancy / Audit
- Tax Solutions
- Company Formation
- Confidential Tax Consultancy
- Investigations / Tax Mitigation
- Bankruptcy / IVA
- Liquidations
- Business Startup & Consultancy
- Solicitors Rules Audit
- Payroll / VAT / Book keeping

# ஆசிய நாடுகளிடையே படைபலப் போட்டி



**வேல் தர்மா**
*(ஒரு பேப்பருக்காக)*

அமெரிக்கா தனது உலக வல்லாதிக்கத்தைப் பாதுக்காக்க தனது படை பலத்தைக் கூட்டு கிறது. அமெரிக்காவிற்கு ஈடு கொடுக்க சீனா தனது படை பலத்தைப் பெருக்குகிறது. சீனா வின் படை பலத்திற்கு ஈடு கொடுக்க இந்தியா தனது படைபலத்தைப் பெருக்கிறது. இந்தியா விற்கு ஈடு கொடுக்க பாக்கிஸ்த்தான் தனது படை பலத்தைப் பெருக்குகிறது. சீனாவின் படை பல அதிகரிப்பு ஒஸ்ரேலியா முதல் ஜப்பான் ஈறாக மத்திய கிழக்கு நாடுகள் வரை ஒரு பயத்தை ஏற்படுத்துகிறது.

## கட்சிக்குள் மக்களாட்சி முறைமை சரியாக இல்லாவிடில் மக்களாட்சி முறைமை வேலை செய்யாது. ஊழல் நாட்டில் தவிர்க்க முடியாத ஒரு அம்சமாகிவிட்டது.

சின்னஞ்சிறு சிங்கப்பூரில் இருந்து பென்னம் பெரிய ஜப்பான் வரை படைக்கலன்களை அமெரிக்காவிடம் இருந்து வாங்குகின்றன. அமெரிக்கா இலாபமீட்டுகிறது. சிங்கப்பூர் உல கின் பத்தாவது பெரிய படைக்கலன் இறக்கு மதி செய்யும் நாடு. வியட்னாம், சிங்கப்பூர், மலே சியா, ஜப்பான், ஒஸ்ரேலியா ஆகிய நாடுகள் நீர்மூழ்கிக் கப்பல்களை வாங்கிக் குவிக்கின்றன.

### ஆசிய நாடுகளிடை தீராப்பிரச்சனைகள்.

இந்தியா சீனாவிடை எல்லைப் பதட்டம். தீர்க்கப்படாத எல்லைப் பிரச்சனை. அப்படியே இந்தியாவிற்கும் பாக்கிஸ்தானிடையும். தென் கொரியாவை அழிக்க நினைக்கும் வட கொரியா. ஜப்பானின் வர்த்தகக் கடற்போக்குவரத்தை தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க நினை க்கும் சீனா. தென் சீனக் கடல் முழுவதும் (மற்ற நாட்டுக்கடற்படுக்கை உட்பட) தனது என அடம் பிடிக்கும் சீனா. இப்படி ஒரு கொதி நிலை ஆசியா எங்கும். ஏபரல் மாதம் வட கொரியா, இந்தியா, பாக்கிஸ்த்தான் ஆகிய மூன்று நாடுக ளும் தங்கள் நீண்ட தூர ஏவுகணைகளைச் பரீட் சித்துப் பார்த்தன.

### சீன – இந்தியப் போட்டி

சீனா தனது வேகமாக வளர்ந்து வரும் பொரு ளாதாரத்தைப் பாதுகாக்கவும் தனது தடங் கலற்ற கடல் வழி வழங்கற்பாதையை உறுதி செய்யவும் தனது பாது காப்புச் செலவீனங் களை அதிகரித்தது. 2011இல் சீனாவின் அச் சுறுத்தல் காரணமாக ஒஸ்ரேலியா தனது தேசிய பாதுகாப்புக் கொள்கையை மீளாய்வு செய்தது. மொத்த ஆபிரிக்கக் கண்டத்தில் உள்ள வறியவர்களிலும் அதிக வறியவர்களைக் கொண்ட இந்தியா உலகின் மிகப்பெரிய படைக் கலன் இறக்குமதி நாடாகியது. கடந்த பத்து ஆண்டுகளாக இந்தியா தனது அணுப் படைக் கலன்களை இரட்டிப்பாக்கியுள்ளது. பாக்கிஸ்த் தானிடம் இந்தியாவிலும் பார்க்க அதிகமான அளவு அணுப்படைக்கலன்கள் இருப்பதாக நம் பப்படுகிறது. பாக்கிஸ்தானிடம் உள்ள அணுப் படைக்கலனகள் தீவிரவாதிகள் கைக்குப் போய்ச்சேரும் ஆபத்து உள்ளது. 2015இல் இந்தியாவின் பாதுகாப்புச் செலவீனம் 80 பில் லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேல் இருக் கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இனிவரும் காலங்களில் இந்தியா நூற்றுக்கு மேற்பட்ட கடற்படைக் கப்பல்களை தனது படைக்குச் சேர்க் கவிருக்கிறது. இந்தியா சீனாவிலும் பார்க்க கிட்டத்தட்ட இரு மடங்கு தனது கடற்படையை நவீன மயப்படுத்தச் செலவு செய்கிறது. சீனா வின் படை பலம் இந்தியாவிலும் இரண்டு மடங்கு என்று சொல்லலாம். சில அம்சங் களைப் பொறுத்தவரை மூன்று மடங்கு என்றும் சொல்லலாம். ஆனால் கடற்படை வலிமையில் சினாவிற்கு இந்தியா பெரும் சவாலாக இருக் கிறது. சீனப் பொருளாதாரம் இந்தியாவினதி லும் பார்க்க மூன்று மடங்கு பெரியது. சீனா விற்கு படைக்கலன் அதிகரிப்புப் போட்டியில் இந்தியா ஈடாகமாட்டாது என்பது பலரது கருத்து. ஆசிய நாடுகளின் 2011இல் தமது பாதுகாப்பிற்கு செலவிட்ட தொகை

### சீனாவின் தாழ்வு மனப்பான்மை

நேட்டோப் படைகள் அடிக்கடி உலகின் பல பகுதிகளிலும் சென்று படை நடவடிக்கைக் களில் ஈடுபட்டு வருகின்றன. சீனா 1979இல் வியட்னாமில் மூக்குடை பட்டதன் பின்னர் வேறு எங்கும் போரில் ஈடுபட்டதில்லை. சீனாவின் கடற்படை ஒரு கடற் போரில் கூட ஈடுபட்டதாக சரித்திரம் இல்லை. தனது படையினர் அனுபவ மற்றவர்கள் என்ற தாழ்வு மனப்பான்மை சீனா விற்கு உண்டு. சீனா தனது படை பலத்தைப் பரீட்சிக்கவும் கள அனுபவம் பெறவும் முயலுமா என்ற அச்சம் பலரிடம் உண்டு.

## ஆசியர்கள் மக்கள் தொகையிலும் உழைப்பிலும் மூளைத் திறலும் ஐரோப்பியர்களையும் மிஞ்சக் கூடியவர்கள்.

சுவிட்சலாந்தின் நிலப்பரப்பிலும் முன்று மடங்கு நிலப்பரப்புக் கொண்ட இந்தியாவின் அருணாச்சலப் பிரதேசத்தை தன்னுடையது என்கிறது சீனா. இந்தியாவின் எல்லைகளுக் குள் பல இடங்களில் சீனா புகுந்து படை நிலை களை அமைத்துள்ளது.

### ஆசியாவும் மக்களாட்சியும்

ஆசியர்கள் மக்கள் தொகையிலும் உழைப்பி லும் மூளைத் திறனிலும் ஐரோப்பா வாழ் ஐரோப் பியர்களையும் வட அமெரிக்கா வாழ் ஐரோப் பியர்களையும் மிஞ்சக் கூடியவர்கள். இவர்கள் தங்களுக்குள் மோதிக் கொள்வதாலும் சரியான ஆட்சியாளர்களையோ சரியான ஆட்சி முறை மையையோ கொண்டிருக்காததாலும் பின்த ங்கிவிடுகிறார்கள். சீனாவில் அரச முதலாளித்து வம். இந்தியாவில் மக்களாட்சி முறைமை. ஆனால் மக்களாட்சி முறைமைக்குத் தேவை யான அரசியல் கட்சிகளுக்குள் மக்களாட்சி முறைமை இல்லை. கட்சிகள் தனிப்பட்ட குடும் பங்கள் அல்லது தனிப்பட்ட குழுவினர்களின் பிடியில் இருக்கின்றன. கட்சிக்குள் மக்களாட்சி முறைமை சரியாக இல்லாவிடில் மக்களாட்சி முறைமை வேலை செய்யாது. ஊழல் நாட்டில் தவிர்க்க முடியாத ஒரு அம்சமாகிவிட்டது.

### ஊர் இரண்டுபடக் கோண்டாடும் கூத்தாடியாக அமெரிக்கா

சீனா தனது படைத்துறையை அபரிமிதமாகப் பெருக்க ஆசிய-பசுபிக் நாடுகள் சீனாவிற்கு அஞ்சி அமெரிக்காவிடம் படைக்கலன்களை வாங்குவதுடன் தமது பாதுகாப்பிற்கு அமெரிக் காவை நாடுகின்றன. அமெரிக்க இந்த நாடுக ளுடன் தனது வர்த்தகத்தை வளர்த்தும் படைத் துறை ஒத்துழைப்பை அதிகரித்தும் தனது உலக ஆதிக்கத்தைப் பெருக்குகிறது.

---

## தமிழரின் தாகம்.....

சட்டென்று ஒரு வெடிச்சத்தம்...!
பட்டென்று போனது ஓருயிர்!
சிட்டென்று பறந்த சின்னக் குருவி...
வேட்டொன்றில் வீழ்ந்தது வீணாய்!
பாழ்பட்ட யாழ் மண்ணில் ஒருநாள்,

தேள்கொட்டிய மாதிரி ஒரு செய்தி...
நோயுட்ட மனதோடு விடிந்தது...
சிவந்த காலை,
மார்தட்டி நின்றவன்
புழுதியில் கிடந்தான்!!!
கார்கொண்ட மேகம்...
கண்ணீர் அஞ்சலி செலுத்த,
பேர் கொண்ட அவர்
முகம் தணலாய் மறைக்க,
வீறுகொண்ட நாலுபேர்
இருக்குமிடம் விலகினார்!
போர்கொண்ட உள்ளங்களின் காரியக்
குணம் போல..!

காரணம் தெரியாது...!
காரியம் புரியாது...!
ஆழங்கள் தாண்டி...
தோண்டும் நேரம் இதுவோ?
காரிருள் ஊடே ஒரு விடிவெள்ளி..
வெளிச்சம் காட்டிச் சிரிக்கிறது!

விடைதெரியாத
வினாக்களுக்கும்,
விடைகொடுக்கும்
நேரமிது!

கடைந்தெடுத்த
சிலபேர் மட்டும்...
சிதறிப்போய்......
மீண்டு வருவார்!!!

கண்ணீர் விட்டு அழுத இனம்,
மீண்டும் சிரிக்கும் கேளீர்!

செந்நீர் சிதறி செத்த மானம்,
மாண்டு மீண்டும்....
துளிர்க்கும் பாரீர்!


எந்தனைக்கு தெரியாது...
எதுவும் புரியாது!
மனதில் பட்டது..
இந்த நல்லது கெட்டது!
இதுவரை
தோன்றியது நடந்தது துன்பியலாய்!
இனிமேல் நடக்கும் எல்லாமே
இனிதாய்!

சட்டென்று ஒரு வெடிச்சத்தம்...!
பட்டென்று போனது ஓருயிர்!
சிட்டென்று பறந்த சின்னக் குருவி...
வேட்டொன்றில் வீழ்ந்தது வீணாய்!
தமிழரின் தாகம்.....................!??????

ஒருவன் - யாழில்


தமிழ் தொலைக்காட்சி புதிய இணைப்புக்கள்!!
Tamil Gold Star GBP £13.99
Tamil Mega Silver GBP £8.99
Tamil Bronze GBP £5.99
சட்டலைட் இணைப்பு இல்லாமல் HD தரத்தில் தமிழ் தொலைக்காட்சிகள்
அனைத்து விதமான தமிழ் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் சிறப்பான முறையில்...
VIJAY TV பார்க்க...
திருத்த வேலைகளுடன் DIGITAL, MPEG-4 தொழில்நுட்பத்துடன்!!
உடன் அழையுங்கள்....
எமது விசேட கழிவு
Vijay TV, Jaya TV, Kalaignar tv பார்க்க ஒரு வருட சந்தா மற்றும் பொருத்தும் செலவு உட்பட £149 மட்டுமே
முக்கிய அறிவித்தல் நேரடியாகத் தொடர்பு கொண்டால் LNP £35க்கு மாற்றித்தரப்படும்
DOUBLE LNP குறைந்த கட்டணத்தில் பொருத்திக் கொடுக்கப்படும்
இலவச சானல்களைப் பார்ப்பதற்கு சந்தா அட்டையுடன் மலிவான விலையில் RECEIVER பொருத்திக் கொடுக்கப்படும்.
NANTHAN SATELLITE ☎ 07581 423 532 / 07440 056 339

# 'Sinhala Buddhism' is worlds apart from the tolerant non-violent Buddhism of the Gautama Buddha





By Tisaranee Gunasekara

That the ancient-city of Dambulla is not sundered by religious violence is thanks to the sense and sensibility of its ordinary inhabitants (of all faiths) and the security personnel on duty.

Had the people of Dambulla been as virulent as the anti-Mosque/anti-Kovil demonstrators, had the STF and police personnel been as supine as the government, a religious conflagration would have engulfed the area and beyond

> The mob-like demonstrators and the monks who were leading and inciting them represented the ugliest face of Sinhala supremacism – intolerant of other races and contemptuous of other religions.

Mobs have no sense; religious-frenzy is unconcerned about consequences. But governments need to count the cost of fanaticism, especially in a pluralist country which is yet to recover from the wounds of a 30 year war.

The manner in which the Rajapaksa administration responded to the Mad Men of Dambulla indicates that the self-destructively myopic mindset, which created a linguistic issue and facilitated its evolution into an ethnic war, flourishes still, in the highest echelons of the Lankan state.

The Dambulla fracas and the manner in which it was 'solved' reveal the deadly faultlines in Lankan polity and society. No Islamic or Hindu representative took part in the conclave which consisted of officials and Buddhist monks (including the ringleaders of the would-be-mob).

Such a blatantly unrepresentative and obviously prejudiced gathering could not be expected to come up with a just and fair solution and it did not. The decision to remove the mosque, the kovil and other 'unauthorised' structures placed the official seal of approval on the extremist demands of the demonstrators, thereby aligning the Lankan state with Sinhala-Buddhist fanaticism.

The mob-like demonstrators and the monks who were leading and inciting them represented the ugliest face of Sinhala supremacism – intolerant of other races and contemptuous of other religions. Sinhala-Buddhism is worlds apart from the tolerant and non-violent Buddhism of the Gautama Buddha.

The demonstrating monks and laypersons are the ideological kin of fanatics of all creeds, everywhere, from Christian fundamentalists in the US to Salafis in Saudi Arabia, from Hindu fanatics who admire the killer of Mahatma Gandhi to Jewish fundamentalists who spit on little Jewish girls because they 'dress indecently'.

These fanatics, in their efforts to recreate their various – and mutually exclusive – heavens on this single earth, tear really-existing states apart and bring untold suffering upon people of all faiths and none. A pluralist country can survive only if it keeps such purveyors of destruction on a very tight leash.

A sensible government would have approached the Dambulla issue as a law-and-order problem and placed its resolution in the hands of the courts. After all, the dispute is not about such recondite matters as which religion is right or whose god is better.

The dispute is, at least outwardly, about such factually verifiable issues as how long the mosque and the kovil had been around, whether they are 'unauthorised' and if they are located in temple-land. Instead the regime succumbed to the demands of the would-be-rioters, and by doing so, created space for religious tension in Dambulla to simmer and gather force.

More dangerously, this execrable supineness might embolden other fanatics elsewhere; safe in the belief that the Rajapaksa state is behind them, they may demand the removal of this mosque, that church or the kovil over there…, turning reconciliation into a Sisyphean task.

The rhetoric of the Dambulla protestors indicate that the real issue is not the location of one little mosque and one tiny kovil but the nature and trajectory of post-war Sri Lanka. Is Sri Lanka a Sinhala supremacist country in which religious/racial minorities are not citizens with inalienable rights but aliens existing on sufferance?

Or is Sri Lanka a pluralist land in which all are citizens with equal rights?

Is the government building a Sinhala Peace or a Sri Lankan Peace?

Is our destination a Sinhala-supremacist Future or a Sri Lankan future?

As the Dambulla demonstrators moved from mosque to kovil, a thin middle-aged woman in a skirt and a blouse walked up to the Buddhist monk leading the would-be-mobsters and respectfully informed him that she had been worshipping at the kovil since childhood. The monk answered the woman with dismissive arrogance, threatening to destroy 'unauthorised' dwellings (including hers) and telling her to take her god and go elsewhere.

Then he made a comment which can be roughly translated as "Hell, crows are not just flying over our heads; they are trying to build nests" ("Yakko, me kakko oluwa udin yanawa witharak nevei kuudu wennath hadanawane"- Sirasa News First).

The inference is obvious; it encapsulates the mindset of the demonstrators and their ilk: these non Sinhala-Buddhist aliens are becoming uppity; they think our country is there country; they must be stopped.

According to the Sinhala supremacist vision of Sri Lanka, any minority–including Sinhala Christians – are not co-owners of this country but its guests. We, Sinhala-Buddhists, see ourselves as gracious hosts who allowed these alien elements to come and settle down in 'our' country. But we also expect the 'guests' to remember that they are just that – guests.

Thus the right of any minority to live in Sri Lanka is a conditional one, determined by their conduct and their willingness to obey the various guidelines set by us (from Sinhala Only to no mosques/kovils/churches in sacred areas). This 'hosts and guests' mindset was responsible for every wrong turn we made in our dealings with Tamils. Abiding by it again will lead us not to peace and reconciliation but to a new, faith-based conflict.

The Rajapaksas do not hesitate to ignore, or even attack Buddhist monks, when they so desire. The Kandy night-races went ahead despite the public protests of a chief prelate, who, faced with a Rajapaksa whim, found himself as powerless as any Hindu or Muslim.

Wikileaks cables revealed that when leading prelates tried to hold a Sanga Council to oppose the incarceration of Gen. Fonseka, they faced bomb-threats and threats of orchestrated schisms ('Government apologists retaliated by promising that 500 temples would be split off from the main Buddhist sects and re-aligned with a lesser-known sect from Rajapaksas' home region in the south').

The regime acceded to the demands of the Dambullla demonstrators not because it feared to cross Buddhist monks, but because on this issue it did not care to rein in the fanatics; and, perhaps, regarded the mosque/kovil demolition as a suitable quid-pro-quo between Sinhala supremacism and Rajapaksa supremacism.

> The rhetoric of the Dambulla protestors indicate that the real issue is not the location of one little mosque and one tiny kovil but the nature and trajectory of post-war Sri Lanka

Secularism is the ideal option for a multi-religious country; but if that is i mpossible – as it seems to be here – the next best option is treating all religions with some degree of even-handedness. This principle of basic fairness and natural justice was grossly violated in the manner the state responded to Dambulla fracas.

Is it that the Rajapaksas do not see the danger or underestimate it?

Or it is that true to the 'hosts and guests' conception of Sri Lanka they believe that minorities do not have inalienable rights and must adapt to the wishes of the majority?

Is that why an issue which could have been settled legally is being allowed to explode all over the polity and inject germs of religious disharmony into a far from robust society?

Come Directly to a...

**TAMIL SPEAKING BARRISTER**

*For expert legal advice & represenation in Criminal and Immigration law*

**Criminal Litigation**
- Money Laundering
- Serious Fraud
- Confiscation & proceeds Of crime
- Cash Forfeiture
- Appeals Against Conviction

**Immigration**
- Nationality
- Asylum
- EU Law
- Visas (Tiers1-5, Resident Permits, Indefinite Leave to remain)
- Judicial review

அனைத்து சட்ட ஆலோசனைகளுக்கும்...

**Services Includes**

Flexible Consultancy Times For Urgents Matters 24 Hours
Police Station Representation Arrange for Legal Aid Solicitors

சகல விதமான குடிவரவு ஆலோசனைகளையும் நிபுணத்துவத்துடன் செய்து தர அழையுங்கள்....

**For Appointments**
Contact: 07837 450397
Email: Tamilbarrister@gmail.com

**Chambers:**
Furnivel Chambers, 32 Furnival Street, London, EC4A 1JQ.



முத்துப்பாண்டி கணேசன்
LL.B(Hons)(Wales),LL.M(Criminal Litigation)
**Barrister-at-Law [Direct Access]**



# Why are Indian Leaders like Krishna and Sushma Always 'Mishearing' Whatever President Rajapaksa says?

**By Namini Wijedasa**

Every time the Indians come here–and chow down on presidential grub–they lose their ability to understand the words that leave Mahinda Rajapaksa's mouth.

First, External Affairs Minister S.M. Krishna got his knickers in a twist about the 13th Amendment. Weeks later, Opposition Leader Sushma Swaraj followed suit. After separate visits to this country–and subsequent to intensive discussions with President Rajapaksa and others–they returned home convinced that he had pledged to implement the 13th Amendment!

That's just plain silly. The president hasn't even promised this to the locals. The JHU would have brought forth kittens had he done so (and nothing is as important to this government as keeping the JHU and Mervyn Silva happy). So why would he say such a thing to the Indians?

Any patriotic, right-minded Sri Lankan will swear that President Rajapaksa despises doublespeak. He never engages in it, not even under dire circumstances. He is as straight as an arrow. The Indians, therefore, must've have misheard him.

## Our rulers know best

Krishna started it off. Five short months ago, the president hosted him to breakfast in Colombo. They very cordially discussed many things. He then ended his Sri Lankan trip by participating at a joint press conference with his Sri Lankan counterpart, G.L. Peiris. He reiterated India's support to the 13th Amendment as a means to achieving a "meaningful" devolution of powers. Importantly, Krishna also said President Rajapaksa had assured him that he stands committed to pursuing the "13th Amendment plus approach."

Now, God only knows what the "13th Amendment plus approach" is. Unfortunately, God is yet to volunteer that information, so Sri Lankans remain clueless. Not that it bothers the locals overmuch. We increasingly operate on the principle that our rulers know best, if only because they won a war. We are so well governed today that we can set about our daily business with our ears, eyes and mouths closed. And, bless us, we do.

So Krishna said his piece while Peiris stared glassy-eyed into the horizon, possibly fantasizing about a golden era when Sri Lankan foreign ministers would once again have more than a fleeting relevance. A few days later, President Rajapaksa tells editors at a breakfast meeting that he didn't promise the Indians any such thing. (See, what did we tell you?).

There was no official statement clarifying the government's position. But when newspapers published the remarks, nobody from the President's office rebutted them.

Weeks afterwards, Swaraj arrives in Sri Lanka with a hefty delegation of Indian politicians. They complete a few tours, take part in various discussions and sit down to breakfast with the president on the last day of their visit. At their closing press conference, a journalist reminds Swaraj that President Rajapaksa had denied Krishna's claim that he had agreed to implement 13th Amendment plus.

Her reply, verbatim, was: "President himself spoke about 13th Amendment plus. So it's not a question of a minister saying or denying or confirming. The president himself said 13th Amendment plus." And off they flew. Two days later, President Rajapaksa denies her claim. (What did we tell you, what did we tell you?). Again, there is no official statement. But a newspaper with links to his office quoted sources as saying that "such an assurance was never given or asked for."

This is quite bewildering. We presume senior Indian politicians such as these have reasonable powers of comprehension that allow them to grasp simple facts. If President Rajapaksa says, "Yes, I will implement the 13th Amendment fully and 13th Amendment plus"… they would get it.

Similarly, if he says, "No, I will not implement the 13th Amendment fully nor 13th Amendment plus because you Indians forced it down our throats and nobody here wants it"… they would also get it. So why do the Indians leave these meetings saying one thing and the Sri Lankans another?

## Potent stuff

There is only one question to ask–what the devil do they get served at breakfast? It has to be something in the food or drink. To conclude otherwise would be to imply that the Indians are lying. Or, heaven forbid, that the Sri Lankans are!

> He is as straight as an arrow. The Indians, therefore, must've have misheard him.

This is potent stuff. They need to check out those egg hoppers and pancakes. The presidential kitchen and its staff must immediately be investigated. There must be a few foreign conspirators lurking amidst the pots and pans, plotting to destabilize India-Sri Lanka relations by surreptitiously lacing the food and drink with something. Ask Wimal Weerawansa. He will tell you that it's probably in the wheat flour imported from America. In the end, the trail always leads back to the damned Americans.

This government would never utter such barefaced untruths to another sovereign government, particularly one as powerful and as close as India is. The Indians wouldn't lie either. So it must have been a trivial misunderstanding. Unless, of course, the Indians and Sri Lankans are conspiring to make the rest of us look like fools. This is also a distinct possibility.

Contemporary Sri Lankan political law concludes that anything and everything that involves a foreign government also involves a conspiracy. Ha ha, clever chaps, these South Indian neighbours. They have taken the sharing of regional knowledge to an entirely different level. Watch this space folks–there'll be more on this later.

*Courtesy: LakbimaNews*


R.S. Finance

Commercial Mortgages & Business Loans



Contact: Sri
220 - HIGH STREET NORTH, EAST HAM,
LONDON, E6 2JA.
Tel: 020 8475 0755
Fax: 020 8470 4755 / Mob: 07803 600 543

Re-Mortgages
(Raising Funds to Start Own Business and Other Needs)
Secured Loans

Commercial Loans
Petrol Stations
Restaurants & Hotels
Convenience shops
Pharmacies

Loans will be arranged for lease hold and free hold business

Arrangements are made to meet the senior business manager from leading banks in our premises to fulfil your business loan requirements.

Whatever your needs, Regarding your Commercial Loans



SHOP FOR LEASE

Morden, 202-Martin way, SM4 4AJ இல்

புதிதாகக் கட்டப்பட்டுள்ள கடை Leaseக்கு உள்ளது

- £30,000 Lease
- Rent £8000 per year
- Insurance £750 per year
- 14 years Lease




Mob : 07737009592 / 01782214690



ஒரு பேப்பர் ORU PAPER

உங்கள் வாசல் தேடி வர,
ஒரு வருடத்திற்கு £35 மட்டுமே!

SUBSCRIPTION FORM

Name:

Address :

Postcode:

Telephone:

மேலுள்ள விண்ணப்ப படிவத்துடன், £35 க்கு "Oru Paper Ltd."" ன் பெயரில் காசோலை யினையும், G11, LOMBARD HOUSE, PURLEY WAY, CROYDON, CR0 3JP என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்

KIDS பேப்பர்

# The Joy of Toys

from Celebrating Chemistry

Do you think children who lived a thousand years ago had toys? Believe it or not, they did! Their toys were very simple compared to the toys that you play with every day. Their toys were mostly handmade from things that were found in nature, like animal bones, stones, wood, or clay. The ancient Greeks and Romans played with rattles and dolls made from clay. They also played with wooden tops, barrel hoops, and horses carved from wood. The Egyptians played with marbles made from stone. Kites flown in Asia were once made with wood and cloth. Can you imagine playing with a stone yo-yo? Children in Greece and Egypt did.

Children played with the same types of toys through the 1600s. During the 1700s when George Washington became president of the United States, scientists began to discover and invent more materials to make toys. Not only could they use rocks, wood and clay, but they could also use cotton, leather and paper. Children began to play with picture alphabet cards, puzzles and board games.

Hand-carved wooden toys like rocking horses, toy soldiers and dolls were popular with children through the early part of the 1800s. Since it took time to hand-make wooden toys, only a small number could be sold at a time and they were expensive. Toy makers looked for ways to make toys affordable for all children to enjoy.

The invention of machines changed how things were made in the 1800s, especially toys. They helped make toys faster than by hand and in larger numbers, so toys could be more affordable. Machines also helped to make toys and some of their parts from metals like aluminum, tin and iron. For example, toy trains and trolleys had wind-up tools made from tin to make them move. Cast-iron toys were made to look like bank buildings and horse-drawn fire engines. Machine-made toys became were very popular among toy makers and children because they could be shaped and cut to look like real-life things.

Another type of material used to make toys is plastic. The first type of plastic, celluloid, was invented around 1870. It was cheap and could be easily molded. The first plastic baby rattle was made out of this material. The plastic that most toys are made from today is called polystyrene and it was invented in the late 1920s. It is strong and can be stretched and shaped into different things. More toys were made with this type of plastic after 1945. Some of the toys that were introduced at this time were Lego blocks, Mr. Potato Head, and Cootie. Have you ever played with these toys? Ask your parents and grandparents if they had these toys as children.

Thanks to discoveries by inventors, scientists and engineers, toys today are made from stronger and safer types of materials. Although many toys are still made with wood, metals and plastics, there are strict rules on how they can be used in toys. Before you start playing with any new toys, be sure you and your adult partner read all the directions and instructions carefully.

Chemistry plays an important part in the inventing and making of toys. In this issue of *Celebrating Chemistry*, you will learn more about the chemistry of toys and make a few toys from items that may be found in your home or school. Read the articles about the materials and the chemistry used to make toys. After you have finished reading and doing the activities, ask your teacher or family members about the toys they played with as children. Share your knowledge of the chemistry in toys.




## Car

***This car is really fast.***

***This car is blue.***

***This car is a race car.***

***This car is a Audi car.***

***This car is a big car.***

***This is my favourite car.***




## Australia

***Australia is a huge island.***

***Canberra is the capital city,but Sydney is the biggest and best known city in Australia.***

***Sydney is near by the sea.***

***In Australia winter is from June to August.***

***Australia is one of the top five driest countries in the world.***

***The most popular sports to play and watch are Football,Rugby and Cricket.***

***Many Australian love to surf.***

***The Sydney Harbour fire works show on New Year's eve is one of the biggest in the world.***



*Nilani*



*Ramya*



*Rehashan*



*Mazneen*

## Colouring - 169





Dear Kids...




Colour and Send in a picture to ORU PAPER . you could be the lucky winner Gift from KALAIKILI...

நீங்களும் கலைக் கிளி வழங்கும் பரிசினைப்பெற படத்திற்குவர்ணம் தீட்டி எங்களுக்கு உடன் அனுப்பி வையுங்கள்..

168 Winner
Vigaashan

## சொற்களைத் தேடுங்கள் - 168

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பி | வி | அ | சி | த | ம |
| வி | தை | வ | ய | மி | கா |
| ஐ | மை | ணி | க | டி | தி |
| அ | பூ | ம் | செ | ந | ம |
| ம் | ள | இ | பி | ஆ | ர |
| ழை | ம | மை | ந | வ | ம் |
| ம | ழை | ரி | ப | ச | ர |

*சொற்களைத் தேடுங்கள் :*

*சொற்கள்* : மழை, பூ, காய், கனி, விதை, இ+டி, மரம்

***By : Ayshvaan***


Lebara
mobile
WEEKLY PASS
5p
/min
Sri Lanka
Mobiles & Landlines
Get 100 minutes to Sri Lanka
with the Weekly100 Pass
Text '100' to 65088 to sign up
£5
Rates quoted are based on full usage of minutes during the validity period and a subscription to the Weekly Pass
www.lebara.co.uk
UK'S BEST
CUSTOMER SERVICE
2011
2012
Mobile News Awards


இப்பொழுது அறிமுகப்படுத்துகிறோம்!!
தரமான, சுவையான மரவள்ளிப் பொரியல்கள்.....!!!
New Taste Sensation
Try it Now!!
3 Exciting Flavours
GOURMET CASSAVA CHIPS
CHILLI & LEMON
CHILLI
ORIGINAL SALTED
இப்போது உங்கள் அபிமான தமிழ்க்கடைகளில் கிடைக்கின்றன...
தரம், சுவை என்றென்றும்!!!
Imported & Marketed By
NIRU EUROPE LTD
Unit 11, Mitcham Industrial Estate,
85, Streatham Road,
Mitcham, Surrey, CR4 2AP
BRAND Niru®
மேலதிக விபரங்களுக்கு
Tel : 020 8640 8228
Email : sales@niru.co.uk
Quality you can taste

# சிங்கக் கொடியும் வேட்டியும் ஒன்றுதான் - உயர்த்திப் பிடிப்பதானால்

பாகம் 110

எதிர்பார்த்ததைப் போலவே இந்தியத் தூதுக்குழுவின் வருகை புஸ்வாணமாகியிருக்கிறது. இலங்கை ஜனாதிபதி இந்திய எதிர்க்கட்சித் தலைவியைத் தனியாகச் சந்தித்து 13வது திருத்தத்திற்கும் மேலாகக் கொடுக்க இருக்கிறோமென்று சொல்ல, அதனைப் பெரிய பொக்கிஷம் கிடைத்தது போல சுஷ்மா தூக்கியெடுத்துக்கொண்டு போய் டெல்லியில் அவிழ்த்துவிட, சொல்லி முடிந்த கையோடு இலங்கையரசு 13வது திருத்தம் தொடர்பாக எதனையும் ஜனாதிபதி தூது கோஷ்டியிடம் வாக்குறுதியாகக் கொடுக்கவில்லையென்று அறிக்கை விட மொத்தத்தில் எல்லாமே புஸ்வாணமாகிவிட்டது. இந்தியத் தூது கோஷ்டி திருப்திப்பட்டுக்கொண்டு போனது யுத்தத்தின் பின்னரான புனரமைப்புப் பணிகளில் இந்தியாவின் பங்களிப்பு ஓரளவு உபயோகப்பட்டிருக்கிறது என்பதில் மட்டும் தான். இன்னமும் மீளக் குடியேற்றப்படாமல் அனேக மக்கள் முகாம்களில் வாடுவதைப் பற்றிய அக்கறைகூட இல்லாமல் வடபகுதியில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் ஆச்சரியத்தை அளிக்கின்றன என்று வேறு அந்த அம்மையார் திருவாய்மலர்ந்திருக்கிறார்.

இந்தியாவிலிருந்து இலக்கைக்கு தூது கோஷ்டிகளோ ராஜதந்திரிகளோ வரும்போதெல்லாம் ஏதோ நன்மையான காரியம் நடக்கப் போகிறதென்று நம்மில் பலர் எண்ணுவதும், எதிர்பார்ப்பதும், கடைசியில் அவர்கள் வந்து போனபிறகு இருந்ததைவிட மோசமான நிலைக்குத் தமிழரின் அரசியல் நிலைமைகள் போய்விடுவதுமே தொடர்ந்து நடைபெறுகிறது.

ஆங்கிலத்தில் சீசனிங் அல்லது ஹாட்ணிங் என்றொரு வார்த்தையைப் பல சந்தர்ப்பங்களில் பாவிப்பார்கள். அதாவது பதப்படுத்தல், பழக்கப்படுத்தல், கடினமாக்குதல், எதிர்ப்புச் சக்தியை உருவாக்குதல் என்ற கருத்துக்களில் இவ்விருவார்த்தைகளையும் உபயோகிப்பார்கள். இந்தியாவும் இலங்கைத் தமிழர் விடயத்தில் தனது ராஜதந்திர முயற்சிகள் மூலம் இலங்கையை அவ்வாறுதான் மாற்றிவிட்டிருக்கிறது. தன்னுடனான ஒத்துழையாத போக்கையும், எதிர்ப்புணர்ச்சியையும் வலுப்படுத்தி, தமிழர்கள் மீது வன்முறையைக் கட்டவிழ்த்துவிட்டு ஒரு இனக்கொலையையே நடத்திமுடிக்கும் வகையில் இலங்கையைத் தனக்கெதிராகவே பதப்படுத்தி விட்டதுதான் இந்திய ராஜதந்திரம் இதுவரை செய்த கைங்கரியமாகவிருக்கிறது. இப்போது இந்தியப் பிரதிநிதிகள் வருவதும் அவர்களை இலங்கை ஏளனச் சிரிப்போடு வரவேற்பதும், பல போலி வாக்குறுதிகளைக் கூறித் திருப்பி அனுப்புவதும் நன்கு பழக்கப்பட்டுப் போன விடயங்களாகி விட்டன. போதாதற்குச் சீனாவை வேறுகாட்டித் தன்னையே பயமுறுத்துமளவுக்கு இலங்கைக்குத் துணிவையும் ஊட்டிவிட்டது இந்தியா. இனி இந்தியாவின் முயற்சிகள் அதாவது பாச்சா இலங்கையிடம் பலிக்குமாவென்பது கேள்விக் குறியுடனேயே நிற்கிறது.

## அலசுவாரம்

அலசுபவர் : **மட்டைக்கிளப்பான்**

தமிழ்நாட்டு மக்களுக்கு ஏதாவது போக்குக் காட்டித் தாஜா செய்தபடி இலங்கைமீது எத்தகைய அழுத்தங்களையும் பிரயோகிக்க முடியாமல் கையாலாகாத்தனத்துடன் வங்காள விரிகுடாவில் ஓர் இனக் குழுமத்தின் அதாவது ஈழத் தமிழ்த தேசியத்தின் அழிவைக் கண்டும் காணாமல் விட்டுவிடக்கூடிய கையறு நிலைக்கு இந்தியா தன்னைத் தானே கொண்டுபோய்ச் சேர்த்திருக்கிறது.

ஆரம்பித்திலிருந்தே இலங்கைமீது சற்றுக் கண்டிப்பைக் காட்டியிருந்தால் இப்படி நேர்ந்திருக்காது. அனால் தற்போது இந்தியாவின் இலங்கைப் பிரச்சனைமீதான மென்போக்கு ராஜதந்திரத்தின் பெறுபேறு இலங்கையின் இந்தியாவுக்கெதிரான சீசனிங் அல்லது ஹாட்ணிங் இல் வந்துநிற்கிறது. இனி அடுத்த கோஷ்டி மூக்குடைபட எப்போது வருமோ தெரியவில்லை. தலையைக் குனிந்தவாறே இந்தியாவின் நெஞ்சில் இடிக்கும் இலங்கையின் சாதுரியம் ஒரு புறமிருக்க எமது தமிழர் தரப்போ கையாலாகாத நிலைக்குப் போய்விட்டது. மேதினக் கொண்டாட்டங்களை ஐதேக வுடன் சேர்ந்து யாழ்ப்பாணத்தில் நடத்தியது மல்லாமல் ஐயா சம்பந்தர் இலங்கையின் சிங்கள மேலாண்மை வாதத்தின் சின்னமான சிங்கக் கொடியை வேறு உயர்த்திப் பிடித்துக் கொண்டு நிற்கிறார். சிங்கக் கொடியைத் தமிழர் தலைமை உயர்த்திப் பிடிப்பதற்கும் வேட்டியை உயர்த்திப் பிடிப்பதற்குமிடையேபெரிய வித்தியாசமிருப்பதாகத் தெரியவில்லை.

சிங்கள மேலாண்மை வாதத்தின் சின்னமான சிங்கக்கொடி எதைச்சொல்கிறது? நம்மில் பெரும்பாலோருக்கு அதன் தாற்பரியம் புரிவதில்லை. வாளேந்திய சிங்க(ள)த்தின் முன்னே காணப்படும் இரண்டுநிறப்பட்டிகளும் சிறுபான்மையினரைக் குறிக்கின்றனவாம். அவர்கள் சிங்கத்தின் அடக்கு முறை அதிகாரத்தின் கீழ் வாய்பொத்திக்கொண்டு பேசாதிருக்க வேண்டுமென்பதற்காகவே சிங்கம் வாளை உயர்த்தி மிரட்டிக்கொண்டு நிற்கிறது. சிங்கத்தின் இந்த அடக்கு முறை அராஜகத்தை உலகம் கண்டு கொள்ளாமல் பாதுகாக்கும் கவசங்களாக நான்கு புறத்திலும் பௌத்த தர்மம், என்கின்ற அரச இலைகள் காணப்படுகின்றன. இதுதான் அந்தக் கொடியின் தாற்பரியம். சிங்கள மக்களுக்கு இது நன்கு புரியும். ஆனால் ஏனைய இனத்தவர்களுக்கு இதற்கான அர்த்தம் சரியாகப் புரிய வைக்கப்படவில்லை. அல்லது புரிந்தும் புரியாதமாதிரி நடந்துகொள்கிறார்கள். இந்தக் கொடியைத்தான் ஐயா சம்பந்தர் உயர்த்திப் பிடித்தபடி நிற்கிறார். அந்தப் படத்தைப் பார்க்கும்போது வயிறு பற்றியெரிகிறது, நாம் எவ்வளவு கீழ் நிலைக்குப் போய் விட்டோமென்று.

இலங்கையில் சமீபத்தில் அரங்கேற்றப் பட்டிருக்கும் அரசியல் நாடகங்களிலொன்று தம்புள்ளைப் பள்ளி வாசல் எரிப்பு. இலங்கயரசு தங்களது செல்லப் பிள்ளைகளான இஸ்லாமியச் சகோதரர்களின் பள்ளி வாசலொன்றைச் சாடையாக இடித்துவிடும் ஓர் நாடகக் காட்சியை அரங்கேற்றி அதன் மூலமாக ஏதோவோர் ராஜதந்திரக் காய்நகர்த்தலில் ஈடுபட்டுள்ளது போன்றே எண்ணத் தோன்றுகின்றது. இலங்கைச் சிறுபான்மையினரின் பிரச்சனையைக் கையாளவேண்டிய பொறுப்பு இந்தியாவுக்கே உள்ளது என்கின்ற உலக அபிப்பிராயத்தை மாற்றவும், அதில் இஸ்லாமிய நாடுகளின் நேரடித் தலையீடும் அவசியமென்கின்ற நிலைமையை உருவாக்கவும், அதன்மூலம் முஸ்லீம்களின் கோரிக்கைகளையும் உலக அரங்கில் பலப்படுத்தவும், இனப்பிரச்சனைத் தீர்வைக் கொண்டுவராமல் குழப்பியடிக்கவுமே இந்து நாடகம் அரங்கேற்றப்பட்டுள்ளதோ தெரியவில்லை. ரவூப் ஹக்கீம் போன்ற அமைச்சர்களின் மறைமுகப் பச்சை விளக்கு இவ்விடயத்தில் காட்டப்பட்டிருக்கக்கூடும்.

எவ்வாறெனினும் அயோத்திப் பள்ளிவாசலில் நடந்தது போன்ற இந்த நிகழ்ச்சியின் மூலம், தீவிர முஸ்லீம் எதிர்ப்பாளர்களான வட இந்தியர்களின் சபாஷ் கிடைக்கவும் இது வழி கோலியிருப்பதால் ஒரு கல்லில் இரண்டு மாங்காய்களை விழுத்தும் ஓர் ராஜதந்திர முயற்சியாகவே இதனைப் பார்க்க வேண்டியிருக்கிறது. மேலும் காளிகோயில் உடைக்கப்படாமைக்கும் இதுவே காரணமாய் இருந்திருக்க வேண்டும்.

ஈரானுடனான எண்ணெய்க் கொள்வனவை நிறுத்தவேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ள இலங்கை அமெரிக்காவிடமோ அல்லது அதன் நேச நாடுகளான அர நாடுகளிடமோ எண்ணெயைக் கொள்வனவு செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்திலிருக்கிறது. முஸ்லீம் நாடுகளின் ஆதரவைப் பெறவேண்டுமானால் முஸ்லீம்களுக்கு எதையாவது செய்தாக வேண்டும். இங்கே செய்வதற்கு எதுவுமில்லை. இனப் பிரச்சனைக்கான தீர்வைக் கொண்டு வரும் போதுதான் முஸ்லீம்களையும் கவனிக்க முடியும்.

(தொடர்ச்சி 24ம் பக்கம்)


**Wine Tower விற்பனைக்கு (For Sale)**



எங்கள் நிறுவனத்தில் 4 பாரமான தட்டுக்களை கொண்டதுவும், 172 - 180 Bottleகளை கொள்ளளவு (capacity) கொண்டதுமான, சிறந்த வியாபார உத்திகளுக்கு (Great promotional display) உகந்ததுமான பழரச கோபுரம் (Wine tower) மிகவும் குறைந்த விலையில் விற்பனைக்கு உள்ளது. இது உங்களின் wine விற்பனை வேகத்தினை அதிகரிக்கும் முகமாக எமது நிறுவனத்தினால் (Nisha trading Limited) மிகக் குறைந்த விலையுடன், தரமானதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

**விலை : £199.00 மட்டுமே (We Beat All UK Prices)**

Item description:
360 degree wine tower black colour
Size: 770mm x 770mm x 550mm

CHEAP AND QUALITY PRODUCT

கிடைக்கும் இடங்கள்:

**Nisha Wine**
Unit 05,
Roseberry Avenue
Tottenham, N17 9SR

**Shakthi Cash & Carry**
Unit 04,
681, Mitcham Road,
Croydon, CR0 3YH

**Hi-Line Cash & Carry**
Unit 02,
40, Purley way
Croydon, CR0 3JP

மேலதிக தொடர்புகளுக்கு: (தொலைபேசி) - 0208 443 7058
E Mail : info@nishatrading.com

# ஏந்தும் சிங்கக்கொடியும் மறுக்கின்ற சுயநிர்ணயமும்



ச.ச.முத்து

*(ஒரு பேப்பருக்காக)*

தேசிய நல்லிணக்கத்துக்கு சிங்கள தேசத்துக்கு இதை விட வேறு ஏதும் சின்னமோ புகைப்படமோ தேவையில்லை. என்ன மாதிரியாக ஒரு வாஞ்சையுடன் அந்த கொடியை ஏந்தியபடி யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மேதின நிகழ்வுமேடையில் ஆட்டிக்காட்டுகிறார். இந்த சிங்கக் கொடியை நந்திக் கடலின் ஓரத்தில் நீண்ட கம்பத்தில் எந்தவொரு இடைஞ்சல்களுமின்றி பறக்கவிடுவதற்காக சிங்களப்படைகளால் கொல்லப்பட்ட லட்சத்துக்கும் மேற்பட்ட தமிழ் மக்களின் இறுதிநேர கதறல்கள் இந்த மேதின ஆட்டத்தில் சம்பந்தனின் காதில் விழாமலேயே போயிருக்கும்.

இந்த சிங்கக்கொடியின் கீழேதான் பாராளுமன்ற உறுப்பினர்களாக சத்தியப்பிரமாணம் செய்துள்ளோம். எனவே அந்த கொடியை ஏந்திப்பிடிப்பதில் என்ன தவறு இருக்கிறது என அவரின் சட்டத்தரணித்தனமான வாதம் கேட்கலாம். பயமுறுத்தலின் காரணமாகவோ அல்லது நெருக்கடியின் காரணமாகவோ இந்த கொடியை சாதாரண தமிழ் மக்கள் ஏந்தவேண்டி இருந்தால் அதில் பிழை ஏதும் இருக்கப்போவதில்லை. தவறும் இல்லை.

ஆனால் சம்பந்தரை பொறுத்தவரையில் அவர் மிகவும் விருப்புடனேயே அதனைவிட மிகவும் குதூகலத்துடனேயே சிங்ககொடியை ஏந்தி உயர்த்தி பிடித்திருப்பது தெரிகிறது. சம்பந்தரும் அவரின் கூட்டமும் அண்மைக்காலமாக விடுத்துவரும் அறிக்கைகள், பேட்டிகளுடன் ஒப்பிடும் போது இப்போது சம்பந்தர் சிங்கள தேசத்தின் கொடியை உயர்த்திபிடித்திருப்பது ஒன்றும் அதிசயமானதோ அதிர்ச்சி தரக்கூடியதோ இல்லை.

ஒரு தேசத்துக்குள் தீர்வு என்றும் பிளவுபடாத சிறீலங்கா ஒற்றை ஆட்சிக்குள் தமிழர்களுக்கு தீர்வு என்றும் இது வரை சொல்லிவந்ததை இப்போது 'சிம்போலிக்' ஆக சிங்க கொடியை ஆட்டியபடி காட்டியிருக்கிறார் சம்பந்தர்.

இப்போது இந்த சிங்ககொடியின் ஆளுகைக்கு கீழே தான் நாளாந்த அன்றாட கருமங்கள் அனைத்தையும் கழிவறைக்கு செல்வது உட்பட செய்து கொண்டிருக்கிறோம். இந்த நிலையில் அந்த கொடியை பகிரங்கமாக தூக்கி உயர்த்தி காட்டுவதில் என்ன தவறு என்று அவர் கேட்கலாம்.

நிறையவே தவறுகளும் இதில் இருக்கிறது.

முதலில் இந்த சிங்ககொடி என்பது சிங்களதேசத்தின் கொடி என்பதைவிட தமிழர்கள் இரண்டாம் தரகுடிமக்கள் என்பதையும் சிங்கள பேரினவாத மனப்பான்மையை சித்திரமாக கொண்டதும்தான் என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும். தமிழர்களின் மன்னனான எல்லாளனை வீழ்த்திய போது துட்டகெமுனு ஏந்திநின்ற கொடி என்று சிங்கள பேரினவாத தொன்மைக்கதைகள் கூறும் கொடியில் இருந்ததுதான் இன்று சம்பந்தன் ஏந்திய சிங்க கொடியில் இருக்கும் வாள் ஏந்திய சிங்கம்.

தமிழர்களின் உரிமைப்போர் முளைவிட்ட காலத்தில் இருந்தே இந்த சிங்ககொடியை நிராகரித்து எழுந்ததே தமிழ்தேசிய உணர்வு. இந்த கொடியை ஏற்றுக்கொண்டு அதனை ஏந்துவது என்பது இந்த கொடியின் பெயரால் சிங்கள தேசம் புரியும் இனப்பாகுபாட்டை, இன அடக்குமுறையை, இன ரீதியான உரிமை மறுப்பை, ஏற்றுக் கொள்வதற்கு சமனாகும் என்பதாகவே கருதப்பட்டது. கருதப்படுகின்றது.

தமிழர்களின் உரிமைப்போர் இன்னொரு கட்டத்துள் நுழைந்தபோது சிங்ககொடியை வெறுமனே நிராகரிப்பதுடன் நின்றுவிடாமல் அது தமிழர்களின் மண்ணில் பறக்கும் பொழுதில் எரிக்கப்பட்டு சிங்கள தேசத்துக்கு இது எங்கள் கொடி அல்ல என்ற சேதி சொல்லப்பட்டது.

எல்லாவற்றிலும் மேலாக சம்பந்தரின் தொகுதி இருக்கும் மண்ணில் ஏறத்தாள முப்பத்திரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இதே திருமலைமண்ணில் சார்ள்ஸ் அன்ரனி என்ற வரலாற்று வீரன் இந்த சிங்கள தேசத்து சிங்க கொடியை அது காற்றில் எழும்போது எரிவதற்கு ஏற்றதாக பொஸ்பரசு வைத்து எரித்தானே அது எதற்காக என்பதையும் மறந்துவிட்டாரா?

அந்த பதினெட்டு வயது மாணவனுக்கு அப்போது இதே சிங்ககொடி பற்றி இருந்த பார்வையும் தெளிவும் பழுத்த (?) அரசியல்வாதி என்று தன்னைதானே கூறிக்கொள்ளும் சம்பந்தனுக்கு இல்லாமல் போனது எப்படி? இன்று வரைகூட தமிழர் மண்ணில் சிங்ககொடி பறப்பது என்பது அது படைபலத்துடன் சம்பந்தப்பட்ட ஒன்றாகவே இருக்கின்றது. துப்பாக்கிஏந்தியபடையினரின் பாதுகாப்புடனேயே சிங்ககொடி பறக்கமுடியும் என்ற நிலையே இருக்கின்றது.

இந்த சிங்ககொடியை ஏந்துவதன்மூலம் தமிழர்களின் உரிமைகளை சிங்கள பேரினவாதத்திடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம் என்று சம்பந்தன் நினைக்கிறாரா?

வரலாறு வரலாறாக சிங்களம் எதனை செய்கிறது என்றும் எதுவரை நாம் கீழே சென்று பாதம் கழுவினாலும் சிங்கள பேரினவாதம் மாறப்போவதில்லை என்பதும் கண்கூடாக கண்டுவரப்படும் யதார்த்தம். அண்மையில் கூட ஒருமாதத்துக்கு முன்னர் ஜெனீவாவில் சிங்கள தேசத்துக்கு எதிரான பிரேரணை கொண்டு வரப்பட்ட போது அதற்கு எதிராக சிங்கள தேசத்தில் சிங்க கொடியை ஏந்தியபடி ஊர்வல ஆதரவு தந்த முஸ்லீம்களுக்கு ஒரு முப்பது நாட்களுக்கிடையிலேயே தம்புள்ளயில் சிங்களம் என்ன கைமாறு செய்தது என்பதை பார்த்தோமே. சம்பந்தர் பார்க்கவில்லையா?

சம்பந்தரை தேசிய தலைவராக புதிதாக உருவாக்க நினைப்பவர்களும் அவரது தலைக்கு பின்னால் ஒரு விதமான ஞான ஒளிவட்டம் ஒளிருவதாக உருவகப்படுத்துபவர்களும் இப்போது என்ன சொல்ல போகிறார்கள்?

சுயநிர்ண உரிமையை வலியுறுத்த வேண்டாம் என்றும் சிங்கள தேசத்தை போர்க்குற்றத்துள் தள்ளுவது தேசிய நல்லிணக்கத்துக்கு குந்தகம் என்றும் சிங்கள தலைமைக்கு இடைஞ்சல் கொடுத்தால் தமிழர்கள் மீது தாக்குதல் நடாத்துவார்கள் என்றும் மாறிமாறி கருத்துகளை கூறி குழம்பி, குழப்பி நிற்கும் கூட்டமைப்பின் ஒரு பகுதியினர் அமிழ்ந்து போயிருக்கும் அடிபணிவு அரசியலின் புதிய வடிவம்தான் சம்பந்தர் ஏந்தி இருக்கும் சிங்க கொடி.

இப்போதுதான் எல்லாமே ராஜதந்திரம் என்ற சொல்லாடலுக்குள் அடக்கப்படுகின்றதே. ராஜபக்சவுடன் இரவு விருந்தில் எலும்பு கடித்து சுவைப்பதும் ராஜதந்திரம்தான்.

ஜெனீவாவுக்கு வராமல் இருந்ததும் ராஜதந்திரம்தான்.

கிழக்கில் சிங்களகுடியேற்றங்களை கண்டும் காணாமல் இருப்பதும் ராஜதந்திரம்தான்.

வடக்கு கிழக்கு தமிழர்களின் பாரம்பரிய நிலம் என்று சொல்லமாட்டேன் என்று சொல்லுவதும் ராஜதந்திரம் தான்.

இப்போது சிங்களகொடியை ஏந்திப்பிடிப்பதும் ஒரு வகை ராஜதந்திரம்தான்...

இந்த ராஜதந்திரம் எதுவும் புரியாமல் தமது இளமையை துறந்து தமது உறவுகளை பிரிந்து காடுகளிலும் மேடுகளிலும் கடும் துயரிலும் இறுதிவரை தமது மக்களின் உரிமைகளுக்காக போராடி மரணித்த அனைவரும் மன்னித்து கொள்ளுங்கள்.

# நாலு வார்த்தை எழுதவிடு........

## தராகி சிவராம் - ஒரு நினைவு கொளல் குறிப்பு

"மச்சான், நீ உன்னை புலி இல்லை எண்டு சொல்லலாமடாப்பா நீ புலிக்கெதிராகவும் வேலை செய்யலாம் ஆனால் சிங்கள அரசாங்கமோ சிங்கள மக்களோ உன்னை புலி என்றுதான் பார்ப்பார்கள் தமிழர் எல்லோரும் அவர்களுக்கு புலிகள் தாண்டாப்பா "

இந்த வாக்கியத்தைச் சொன்னவன் சிவராம். **தராகி சிவராம்** இப்பொழுதும் கணீர் என்று சேயோன் இன் காதில் அடித்தபடி இருக்கிறது அந்த வாக்கியம்.

அவ்வாறு சொன்னவன் 2002 ஆம் ஆண்டு வாக்கில் இவ்வாறு சேயோன் இடம் சொன்னான் "மச்சான், நீ நினைக்கிறியா சிங்கள மக்கள் எல்லாரும் திருந்தீட்டினம் எண்டு? அல்லாட்டி ரணிலுக்கு சமாதானத்தில அக்கறை வந்திட்டுது எண்டு நீ நினைக்கிறியா? ஒண்டும் இல்லையடாப்பா புலிகள் குடுத்த அடி தான் இவையல பேச்சுவார்த்தை மேசைக்கு இழுத்துக் கொண்டு வந்திருக்கு..."

சிங்களத்தின் யதார்த்த அரசியலை மிக எளிய தமிழில் அவன் சொன்னான். அவன் சொன்னது அத்தனையும் உண்மை என்பதை காலம் அடித்துச் சொன்னது. இலங்கைத் தீவில் தமிழர் பிரச்சினைக்கான ஒரே தீர்வு தமிழீழம் தான் என்பதில் அவன் உறுதிபட நின்றான். அதனால் எந்த சமரசம் அற்ற, விட்டுக் கொடுப்பிலாத, இலக்கில் உறுதிமிக்க, உன்னத தியாகம் கொண்ட, வீரமும் ஓர்மமும் ஒருங்கே கைவரப் பெற்ற தமிழீழ விடுதலைப் புலிகள் மீதும் நமது தேசியத் தலைவர் மீதும் அவன் அடங்காப் பற்றுக் கொண்டிருந்தான். தமிழ்த் தேசியத்தை உறுதிபட கைப்பற்றி நின்றான்.

அவனது ஆரம்பம் 'புளொட்' எனப்பட்ட தமிழீழ மக்கள் விடுதலைக் கழகமே. அவன் அதிலிருந்த காலத்தில் நிகழ்த்திய அரசியல் தவறுகளும், அராஜகக் குற்றங்களும் அதிகம் என்பான் சேயோன். மன்னிக்க முடியாதன கூட அதில் அடங்கும். காலம் அவனை மன்னித்து விட்டதோ தெரியாது ஆனால் இவனிலும் மோசமான குற்றம் இழைத்தவர் பலர் உத்தமர்களாக உலா வருகின்ற போது சிவராமின் 'பழி பாவங்களை' கண்டித்துக் கொண்டு தமிழ்த்தேசியம் மீதான அவனது அக்கறை கண்டு அவனை நினைவு கூரலாம் என நம்புகிறான் சேயோன்.

சிவராம் வெறுமனே ஒரு இராணுவ ஆய்வாளனாகத் தன்னை வரித்துக் கொள்ளவில்லை. அந்த இராணுவ ஆய்வுக்கும் ஓர் அரசியல் இருந்தது அது தமிழ்த்தேசிய அரசியல். தமிழ்த்தேசியத்துக்கு, தமிழ்த்தேசிய மக்களுக்கு இன்னும் சொன்னால் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு உதவக்கூடிய அரசியல். அதன் நிமித்தம் அவன் இராணுவ ஆய்வில் புனைவைக் கூட மேற்கொண்டிருந்தான் **ஐலண்ட்** என்ற ஆங்கிலப் பத்திரிகையில் அவன் எழுதிய இராணுவ ஆய்வுக் கட்டுரைகள் சிங்கள் இராணுவத்துக்கு பெரும் கிலியைக் கூட ஏற்படுத்தி இருக்கிறது. அதற்காகத்தான் அவன் அப்படி எழுதினான். "மச்சான் உவங்களை வெருட்ட வேணும். பார் வியூகங்களை மாத்திறாங்களோ இல்லையோ?" குறிப்பிட்ட அந்த சம்பவங்களை மறந்தாலும் வியூகங்கள் மாறுபட்டதை உணர்ந்த ஞாபகம் இன்னும் நெஞ்சில் நிற்கிறது.

நமது வலக்கையை நாமே வெட்டி எறிந்தது போல் இருந்தது கிழக்கு மாகாணத் தளபதி கருணா அம்மானின் பிரிவு. அந்தப் பிரிவின் பின்னணியில் சிவராம் நின்றான் என்று ஒரு கருத்தும் உண்டு. அது குறித்து சேயோன் கதையாட விரும்பவில்லை. ஆனாலும் கருணா மட்டக்களப்பை முதன்மைப்படுத்தி நின்ற போது 'மட்டக்களப்பான்' ஆன சிவராம் 'வன்னி ஏன் இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த இடம்?' என **வீரகேசரியில்** எழுதிய கட்டுரை அந்தச் சூழலை சட்டென மாற்றியது அந்தக் 'காலத்தை' சட்டென முறிந்து விடாமல் பார்த்தது. சிவராமின் சாவுக்கும் அக்கட்டுரை தான் காரணமோ? சேயோன் அறியான்.

சிவராமின் அறிவுத்தேடல் ஆழமானதாகவும், அகலமானதாகவும், நதியின் வேகத்தினூடாகவும் பாய்ந்தது. மாக்சியம், பெரியாரியம் குறித்த அவனது புரிதலை சேயோன் வாய்பிளந்து பார்த்து நிற்பான். தனது இருபது வயதுப் பருவத்தில் மட்டக்களப்பிலிருந்து வெளியான **கீற்று** என்ற சஞ்சிகையில் மாக்சியம் தொடர்பான ஆய்வுக் கட்டுரை ஒன்றினை அவன் எழுதியிருந்தான். அப்பொழுது சேயோன் மாத்திரம் அல்லாது, ஏற்கனவே சொல்லப்பட்ட மாக்சீய அறிஞர்கள் சிலரும் வாய்பிளந்ததை சேயோன் அறிவான்.

தமிழ்த் தேசியம் தொடர்பான கொழுத்த அறிவு வேறு யாரிடம் உள? அவனது அறிவுக்குப் பிரதியிட வேறு யாரினால் முடியும்? ஆங்கிலப் புலமை, இராணுவ ஆய்வில் வல்லமை, தமிழ்த் தேசிய அக்கறைக்கான அறிவுச் செழுமை இவையெல்லாம் ஒருங்கு கூடியவர் வேறு யார்?

**பேரா. சிவத்தம்பி** அவர்கள் ஒரு முறை சேயோன் இடம் கூறினார் "சிவராம் போல ஆங்கிலப் புலமை வாய்ந்தவர்கள் எவரும் இல்லை நாங்கள் தமிழனாக நின்று தமிழிலே சிந்தித்து ஆங்கிலத்தில் எழுதுகிறோம். சிவராம் ஆங்கிலத்தில் சிந்தித்து ஆங்கிலத்தில் எழுதுவான். அதே சமயம் தமிழில் சிந்தித்து தமிழிலும் எழுதுவான். "

சேயோன்க்கு ஒரு புளுகம் வந்து சிவராமிடம் அதனைச் சொன்னான். "அப்படியா..? சேரா அப்படிச் சொன்னவர் ? பரவாயில்லையடாப்பா, சரியான சந்தோசமா இருக்கு. வா பாருக்கு போவோம்.... "

சிவராம் ஒரு மகத்தான ஆளுமை வெற்றிடங்களை இயற்கை விடுவதில்லை என்பது விஞ்ஞான விளக்கம் 'ஆனால் சிவராம் இல்லாத வெற்றிடத்தை இயற்கை விட்டு விட்டது. வேறொரு கன்றும் அதிலிருந்து முளைத்ததில்லை. அதனால், பட்டுப் போகவில்லை அந்த நெடுத்த பனைமரம் என்று அண்ணாந்து பார்த்து ஆறுதல் கொள்கிறான் சேயோன்.

- சேயோன்


## ஆரம்ப நிகழ்வுகள்



கொக்குவில் தாவடி நந்தாவில் நலன்புரிச்சங்கம், மருத்துவக் கலாநிதி பி.ஆறுமுகராசா அவர்களின் தலைமையில், கொக்குவில் கோண்டாவில் கிராமசபையின் முன்னாள் உப தலைவர் திரு நா. அருணாசலம் அவர்களால், 29-05-2012 மாலை ஆறுமணியளவில் கிழக்கு இலண்டன் ஈஸ்ற்ஹாம் நகரில் தமிழர் முன்னேற்றக் கழக மண்டபத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நிகழ்வுகளின் போது எடுக்கப்பட்ட படங்களையே மேலே நீங்கள் காண்கிறீர்கள்

## ஆவணப்படம்




இலங்கைத்தீவில் ஊடகவியலாளர்கள் மீது மேற்கொள்ளப்படும் அடக்குமுறைகளை வெளிப்படுத்தும் வகையில் Silenced Voices என்ற தலைப்பில் ஆவணப்படம் ஒன்றினை நோர்வேயைச் சேர்ந்த திரைப்பட இயக்குனர் Beate Arnstad தயாரித்துள்ளார். மே 6ம்திகதி ஹரோவில் நடைபெறும் மாமனிதர் சிவராம் நினைவு கருத்துப்பட்டறையில் இத்திரைப்படம் திரையிடப்படவுள்ளது. Beate Arnstad உட்பட இத்திரைப்படத்தில் பங்கேற்றிருக்கும் ஊடகவியலாளர்களும் நேரில் கலந்துகொள்கிறார்கள்.

இந்நிகழ்ச்சி Beacon Centre, Malcom Jeffrey Place, Scott Crescent, Rayners Lane, Harrow HA2 0TY என்ற முகவரியில் நடைபெறவுள்ளது.

## நடக்க இருக்கும் நிகழ்வுகள்

**MAY 06 SUNDAY**

**உதைபந்தாட்டப் போட்டிகள்**

தமிழ் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் (ஐ.இ) நடாத்தும் மாபெரும் உதைபந்தாட்டப் போட்டிகள்

இடம்: Warren farm sports center, Windmill lane, Southhall, Middlesex, UB2 2NE

நேரம்: காலை 8.00 மணி முதல்

தொடர்புகளுக்கு: 0777 164 8257 / 0775 193 1640 0795 049 9567

**MAY 12 SATURDAY**

**நூல் வெளியீட்டு நிகழ்வுகள்**

ஒரு பேப்பர் ஆசிரியர் குழுவைச் சேர்ந்த அ.இரவி மற்றும் சயந்தன் ஆகியோர் எழுதிய முறையே 'பாலைகள் நூறு', 'ஆறா வடு' புத்தக வெளியீடு

நேரம்: மாலை 05:00 மணி முதல்

இடம்: சிவயோகம் மண்டபம் 180 – 186 UPPER TOOTING ROAD, SW17 7EJ

**MAY 13 SUNDAY**

**நூல் வெளியீட்டு நிகழ்வு**

தீபம் தொலைக்காட்சி எம்.என்.அனஸ் (இளைய அப்துல்லாஹ்) எழுதிய லண்டன் உங்களை வரவேற்பதில்லை கட்டுரைத் தொகுப்பு வெளியீட்டு விழா

இடம்: என்பீல்ட் நாகபூஷணி அம்மன் ஆலய மண்டபம் 61, Church :ane, Edmonton, N9 9PZ

நேரம்: மாலை 5:30 மணி முதல்

**JUNE 24 SUNDAY**


**நுண்கலை விழா**

கிங்க்ஸ்ரன் தமிழ் பாடசாலை நடாத்தும் பல் கலாசார நுண்கலை விழா

நேரம்: மாலை 05:00 மணி முதல்

இடம்: Rose Theatre, Kingston, 24-26 High Street, Kingston, KT1 1HL

தொடர்புகளுக்கு: 079 5768 2083







உதயகலா


தயாபரன்


ரிசி


ஸ்கந்தா

# கிணறு வெட்டக் கிளம்பிய பூதம்

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுகிறோம் என்ற பெயரில் நடந்தேறிய நாடகம் பாகம்-02

**சாத்திரி**
(ஒரு பேப்பர்)

*இது ஒரு பேப்பர் 159 இதழில் வெளிவந்த கட்டுரையின் தொடர்ச்சி. இக்கட்டுரை தொடர்பான சில தகவல்களை உறுதி செய்வதில் ஏற்பட்ட தாமதத்தினால் குறித்த நேரத்தில் இதனை வெளியிட முடியவில்லை. இக்கட்டுரையில் வெளியிடப்பட்டிருக்கும் தகவல்கள் சம்பந்தப்பட்டவர்களால் எழுத்து மூலமாகவும் வாய்மொழியாகவும் கட்டுரையாளருக்கு வழங்கப்படடிருந்தன. தனிநபர் தாக்குதல், அரசியல் வேறுபாடுகள் என்பற்றை கடந்த உண்மை நிலவரத்தை அறியத்தருவதற்காக இக்கட்டுரை வரையப்பட்டுள்ளது. தேவையேற்படின் இது தொடர்பான பதிவுகளை கட்டுரையாளர் வெளியிடத் தயாராகவுள்ளார். இக்கட்டுரையில் தொடர்புபட்டுள்ள திரு. ஸ்கந்ததேவா அவர்களை கட்டுரையாளர் தொலைபேசி வாயிலாகவும், மின்னஞ்சல் மூலமாகவும் தொடர்பு கொள்ள மேற்கொண்ட முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை. இருப்பினும் அவர் தனது பக்க நியாயத்தை தெரியப்படுத்தினால் அதனை அடுத்த தொடரில் இணைத்துக் கொள்ளப்படும்.*

2011 டிசம்பர் 4,5ம் திகதிகளில் தமிழ் இணையங்களில் பரபரப்பான செய்தியொன்று வெளியாகியிருந்தது. உதயகலா தயாபரராஜ் என்ற பெண்ணின் மோசடி, விபச்சாரம் நீலப்படமென்றெல்லாம் கதை வசனம் தயாரிக்கப்பட்டு மெகாசீரியல் நீளத்துக்கு செய்தி பரவியிருந்தது. அதே நேரம் போரால் பாதிக்காப்பட்டு அங்கவீனமானவர்களும் முன்னை நாள் போராளிகளையும் வெளிநாடு அழைத்துச் செல்வதாகக் கூறி அவர்களிடம் பணத்தை பெற்றுக்கொண்டு தாய்லாந்திலும் மலேசியாவிலும் கைவிட்டு விட்டார்கள் என்கிற செய்தியும் பரவியிருந்தது.

இவை அனைத்தையும் பின்னால் நின்று இயக்குபவர் லண்டனில் வசிப்பவரான ஸ்கந்ததேவா என்பதை நான் ஒரு பேப்பர் மூலமாக அம்பலப்படுத்தியிருந்தேன். அதன் பின்னர் உதயகலா மற்றும் தயாபராஜ் ஆகிரோடு தொடர்பு கொள்ளக்கூடிய சந்தர்பம் எனக்கு கிடைத்தபொழுது செய்திகளில் வெளியானபோல் தங்களிற்கும் நடந்த மோசடிகளிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை அனைத்திற்கும் ஸ்கந்தாவே பொறுப்பு என அதற்குரிய ஆதாரங்களுடன் தெரிவித்திருந்தனர். இனி நடந்து முடிந்த மோசடி பற்றியும் அதில் ஸ்கந்தாவின் பங்கு என்ன என்பதனையும் பார்ப்போம்.

ஸ்கந்ததேவா, ரிஷி என்ற ரிசாந்தன் ஆகிய இருவரும் Gatherpage என்கிற அமைப்பினை யாழ்ப்பாணத்தில் அலுவலகம் திறந்து நடாத்தி வந்தனர். இந்த நிறுவனத்தில் 20 வரையிலான இளம் பெண்களை வைத்து பல்கலைக்கழக மாணவர்கள், கல்விகற்கும் மாணவர்களுக்கு உதவும் வகையில் இணையதளம் ஒன்றை நடாத்தி வந்தனர். இவ்விணைய தளத்தில் மாதிரி பரீட்சை வினாத்தாள்கள் குறிப்புகள் என்பன பதிவேற்றம் செய்யப்பட்டன. சமநேரத்தில் ITSO என்ற அமைப்பினை ஸ்கந்ததேவாவின் மகளின் பெயரிலும், ரிஷியின் பெயரிலும் பிரித்தானியாவில் பதிவு செய்து நடாத்தத் தொடங்கினார்கள். இதேநேரம் நம்பிக்கையொளி என்றொரு அமைப்பினையும் நடாத்தி வருகின்றனர். இந்நிறுவனத்தில் பணிப்பாளர்களில் ஒருவராக திருமதி. ஸ்கந்ததேவா இருக்கிறார். (இந்நிறுவனங்கள் பற்றிய விபரங்களை எனது முன்னைய கட்டுரையில் குறிப்பிட்டிருந்தேன்.)

*இனி உதயகலா மீது எப்படி கள்ளப்பட்டம் விபச்சாரப்பட்டம் சூட்டப்பட்டது என்பதனைப் பார்ப்போம்.*

உதயகலா துடிப்பும் துணிச்சலும் மிக்க ஒரு பெண். இந்தப்பெண்ணை ஸ்கந்தாவின் முகவர்கள் அணுகுகிறார்கள். சமூக முன்னேற்றம் மற்றும் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகளை தமது நிறுவனங்கள் மூலம் செய்து வருவதாகவும் தமது நிறுவனம் இலங்கையிலும் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் என்றும் தெரிவித்துள்ளார்கள்.

தமது நிறுவனத்தில் பணியாளாராக உதயகலாவை இணையுமாறும் மாதாந்தம் சம்பளம் தருவோம், பாதிக்கப்பட்டவர்களின் விபரங்களை ஊர்கள் தோறும் சென்று எடுத்துத் தருமாறும் வேண்டுகிறார்கள். தரப்படுகிற விபரங்களுக்கு, உரியவர்களுக்கு நம்பிக்கையொளி, ITSO இரண்டும் உதவிகளைத் தருமென்றும் கேட்டுள்ளனர். மக்களுக்கான உதவிகள் மூலம் தனக்கும் ஒரு வேலை வாய்ப்புக் கிடைக்கிறதே என்ற நம்பிக்கையில் உதயகலா ஸ்கந்தாவின் பணிப்பின்பேரில் பணிக்கு அமர்த்தப்படுகிறார். இவர்கள் சொல்கிற இடங்களுக்கெல்லாம் சென்று பாதிக்கப்பட்டவர்களின் விபரங்களை உதயகலாவும் சேகரித்து அனுப்பத் தொடங்கினார்.

இத்தோடு நின்றுவிடாமல் மலேசியா, தாய்லாந்து, இந்தோனேசியா போன்ற நாடுகளுக்கு போரால் பாதிக்கப்பட்ட ஊனமுற்றவர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட மக்களைக் கொண்டு சென்று கப்பல் மூலம் வெளிநாடுகளுக்கு அனுப்பும் வேலைகளையும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவியாகச் செய்வதாகவும் ஸ்கந்தா கூறியுள்ளார். வெளிநாடு போக விரும்புகிற போரால் பாதிக்கப்பட்டவர்களிடம் 2 முதல் 3 லட்சம் வரையான பணத்தையும் சேகரிக்குமாறும் பணித்துள்ளார். உதயகலா தன்னை சுவிசிலிருந்து வந்திருப்பதாக மக்களிடம் அறிமுகப்படுத்தும் படியும் இவர்கள் பணித்தார்கள்.


ஸ்கந்தா மீதிருந்த நம்பிக்கையில் உதயகலாவும் செயற்படத் தொடங்கினார். அத்தோடு வெளிநாடுகளிலிருந்து பலரை உதயகலாவுடன் ஸ்கந்தா தொலைபேசி மூலம் தொடர்பு படுத்திவிட்டார். தமது பணி மக்களுக்கானது அதில் உதயகலாவின் பங்கு தங்களுக்கு வேண்டும் என்பதனையும் வெளிநாட்டு முகவர்கள் கூறினார்கள். வெளிநாட்டில் இருந்து மக்களுக்காக இயங்குவோரென பலர் ஸ்கந்தாவின் ஏற்பாட்டில் உதயகலாவுடன் பேசியிருக்கிறார்கள். இப்போது முழுமையான நம்பிக்கை ஸ்கந்தா கூட்டணிமீது உதயகலாவுக்கு வந்துவிட்டது.

ஸ்கந்தாவினதும் அவரது கூட்டணியினரின் சொற்படி பல ஊனமுற்றவர்கள் போரால் பாதிக்கப்பட்டவர்களிடம் பணம் சேகரித்து அவர்கள் சொன்னபடி கொழும்பில் இட ஒழுங்குகள் செய்து வெளிநாட்டுக்கு அனுப்புவதற்கான ஒழுங்குகளையும் ஸ்கந்தாவின் ஆலோசனைப்படி உதயகலா பொறுப்பேற்றுச் செய்து கொண்டிருந்தார். வடக்கு கிழக்கு இரு பகுதியிலும் ஸ்கந்தா வழங்கிய தரவுகளோடு உதயகலா சென்று வெளிநாட்டுக்கு ஆட்கள் சேர்த்ததோடு ஸ்கந்தாவின் பெயரால் வழங்கப்பட்ட Wheelchair. பண உதவிகளும் பல ஊனமுற்றவர்களுக்கு வழங்கப்பட்டன.

இவ்வேளையில் Gatherpage என்கிற அமைப்பில் ரிஷியாலும் ஸ்கந்தாவாலும் இயக்கப்பட்ட அலுவலகத்திலும் அது சார்ந்த இடங்களிலும் பெண்கள் துஸ்பிரயோகம் ஏமாற்று வேலைகள் போன்றவை நடைபெறுவதனை பாதிக்கப்பட்ட சில இளம் பெண்கள் மூலம் உதயகலா அறிந்து கொள்கிறார். Gatherpage அலுவலகத்தில் நடைபெறுகிற ஊழல்கள் ஸ்கந்தாவுக்கு தெரியாமல் நடப்பதாக நினைத்த உதயகலா இவ்விடயம் பற்றி ஸ்கந்தாவுக்கு தொலைபேசியில் தெரியப்படுத்தினார்.

ஆயினும் ஸ்கந்தாவால் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. இதனால் கோபமடைந்த உதயகலா Gatherpageஇல் நடக்கிற துஸ்பிரயோகங்கள் நிறுத்தப்படாவிட்டால் அது பற்றி இராணுவத்தினருக்கும் பொலிசாருக்கும் தெரியப்படுத்தப் போவதாக ஸ்கந்தாவுக்கு தொலைபேசியில் மிரட்டினார். அத்தோடு Gatherpageஇற்கு நேரே சென்று அங்கு பணியாற்றிய கஸ்தூரி, ராதிகா போன்ற பெண்களுக்கும் எச்சரிக்கை விடுத்தார்.

கஸ்தூரி, ராதிகா இருவரும் உதயகலாவுடன் முரண்பட்டு ஸ்கந்தாவுக்கு விடயம் தெரிவிக்கப்பட்டது. விடயம் இப் பெண்களுக்கு இடையில் கைகலப்பு வரை சென்றுவிட உதயகலா பொலிசாருக்கு தொலைபேசியில் தகவல் சொல்லப்போவதாக தொலைபேசியை எடுக்க கஸ்தூரி திடீரென Gatherpage அலுவலகத்தில் இருந்த எழுத்துப்பிரதி ஆவணங்கள் யாவற்றையும் தீயிட்டெரித்தார். விடயங்கள் உடனுக்குடன் ஸ்கந்தா கூட்டணிக்கு கஸ்தூரி, ராதிகா மூலம் தெரிவிக்கப்பட்டுக் கொண்டிருந்தது.






விடயத்தைச சமாளிக்க ஸ்கந்தா உதயகலாவுடன் சமாதானம் பேச முயன்றார். உதயகலா விடாப்பிடியாக இந்த மோசடியை இணையங்களுக்கும் அச்சு ஊடகங்களுக்கும் அறிவிக்கப் போவதாகக் கூறினார். விடயத்தின் நிலமையைப் புரிந்து கொண்ட ஸ்கந்தா உதயகலாவை அமைதியாகச் சிலநாள் இருக்கும்படியும் தவறுகளை விசாரித்து முடிவுக்கு வருவோம் எனவும் வேண்டிக் கொண்டார். ஆனால் தொடர்ந்து இந்த மோசடிக்காரர்களுடன் தான் இயங்கமாட்டேன் எனக்கூறிய உதயகலா நம்பிக்கையொளியுடனான உறவை முறித்துக் கொண்டு வெளியேறினார்.

Gatherpage இல் நடைபெறுகிற மோசடி வெளியில் உதயகலா மூலம் வெளிவராது இருக்கவே உதயகலா தயாபரராஜ் மோசடி, விபச்சாரம் என செய்திகள் பரப்பப்பட்டதாக தெரியவருகிறது. உதயகலா மீது முழுப்பழியும் விழுந்துவிட ஸ்கந்தா கருணாநிதி கணக்கில் ஒரு புனைவையும் அவிழ்த்துவிட்டார். அதுதான் 28 ஆயிரம் பிரித்தானியப் பவுண்ஸ்களையும் ரிஷியிடம் கொடுத்து ஏமாந்ததான கதை. உதயகலாவுடன் எவ்வித தொடர்புகளையும் கொண்டிராத ரிஷியை உதயகலாவுடன் தொடர்பு படுத்தி செய்தியை ஆளாளுக்கு ஊடகங்கள் கதையெழுதி வெளியிட்டிருந்தன.

(தொடர்ச்சி 24ம் பக்கம்)


# KTS Legal Solicitors & Advocates


Residential Property and Commercial Property


Immigration


Intellectual Property


Company Law


Landlord and Tenant


Outsourcing Law


Power of Attorney


Partnership Law


Contract Law

We offer our clients expert and focused legal advice, quality, care and efficiency

- Residential Property and commercial property
- Immigration
- Intellectual Property
- Company law
- Landlord and Tenant
- Outsourcing Law
- Power of Attorney
- Partnershiip Law

KTS LEGAL Solicitors & Advocates

Tel:020 8367 0505 | Fax:020 8367 0404
Nicholos House, 12 River Front,
Enfield, EN1 3TF
Email: info@ktslegal.co.uk | Web:www.ktslegal.co.uk

## மாணவர்களிடம் திணிக்கப்படும் கல்வி

காலம் மாறலாம். காலநிலை மாறலாம். இருந்த இடம் மாறலாம். மக்கள் மாறவில்லையே. கல்வியே கருந்தனமாகக் கருதிய தாயகத்தில் வீட்டுக்குள் பட்டினியில் கிடந்தாலும் தமது பிள்ளைகள் படிக்கவேண்டும் டாக்டர், என்ஜினியர்,Accountant ஆக வராவிட்டாலும் பரவாயில்லை குறைந்தபட்சம் அரசாங்க உத்தியோகத்திலாவது சேரவேண்டும் என்ற ஆசை, சராசரி குடும்பங்களில் நிலவியது பழைய கதை.

புலம் பெயர்ந்த நாடுகளில், வாழத் தலைப்பட்ட இன்றையதமிழ்சமுதாயத்தில் இன்னமும் பழைய பாரம்பரிய ஆசை தலை தூக்குவது வளர்ந்துவரும் இளம் தலைமுறையினரை இங்கொன்று அங்கொன்றாக பாதித்து வருவது பலர் கண்களுக்கு தெரிவதில்லை இங்கு பிறந்து வளர்ந்து வரும் மாணவர்கள் இந்த நாடுகளின் சூழ்நிலைக்கும், சம்பிரதாயத்துக்கும் அமையவே அவர்கள் மாறிவருகிறார்கள் என்பதை பெற்றோர்கள் ஜீரணித்துத்தான் ஆக வேண்டும். அதுதான் யதார்த்தம்.

தமிழ் மக்களின் பாரம்பரியத்தை மறந்து விடாமல், கலாச்சாரத்தை விட்டுக் கொடுக்காமல்,பண்பாட்டை இழந்துவிடாமல் அநேகமான பெற்றோர் தமது பிள்ளைகளைப் பேணி வளர்ப்பது மகிழ்ச்சி தரும் செய்திதான் எனினும் கல்வி விடயத்தில் இவர்களை அறியாமலே பிள்ளைகளை எடைபோடத் தவறியுள்ளமை சில குடும்பங்களில் இடம்பெறும் சச்சரவுகள் நிரூபிக்கின்றன. பெற்றோர்களுடன் வாழப்பிடிக்காமல் தனியாகச் சென்று வாழும் பிள்ளைகளும் இந்த நாடுகளில் காணலாம்.

பிள்ளைகளின் கல்வி விடயத்தில் சில குடும்பங்களில் கணவன் மனைவிக்கிடையே கூட ஒரு சமரசம் ஏற்படுவது மிகச் சங்கடமான சம்பவங்களினால் தெரிய வந்துள்ளது தாங்கள் பெற்ற குழந்தைகளையே சரியாக எடை போடத் தெரியாத பெற்றோர்களால் அவர்களுடைய வருங்காலத்தைப் பற்றி தீர்மானிக்க எவ்வாறு முடியும் அநேகமான பிள்ளைகள் பெற்றோருடன் செலவழிக்கும் நேரத்தைவிட வெளியில் கல்விக் கூடங்களிலும் விளையாட்டு மைதானங்களிலும் செலவிடும் நேரம்தான் கூடுதலாக இருக்கும். இதன் காரணமாக இவர்களுடைய வளர்ச்சி சிந்தனை அனேகமாக குடும்ப சூழ்நிலைக்கு வித்தியாசமாக மாறுவதையும் அவதானிக்க முடிகிறது. சில குடும்பங்களில் சில பிள்ளைகள் கல்வியில் மிகச் சிறந்தவர்களாக ஒரு குறிப்பிட்ட பருவம் வரை பிரகாசித்தவர்கள் திடீரென அப் பாதையினின்று விலகி தமக்கு விரும்பிய ஒரு கோட்டில் செல்ல தீர்மானிப்பது எதனால் என்று பெற்றோர்களுக்கு விளங்குவதில்லை இதற்கான முக்கிய காரணமாக , பிள்ளைகளின் விருப்பு வெறுப்பை அறியாது அவர்கள் விரும்பாத கல்வி முறையை அவர்களிடம் திணிக்க முற்படும் எதேச்சதிகார அணுகுமுறை தான் என்பதை மிக அழகாகவும் ஆணித்தரமாகவும் சமீபத்தில் வெளி வந்த 'தோனி' என்ற திரைப்படம் நன்கு உணர்த்தியது. இதில் பிரதான கதாபாத்திரத்தில் நடித்த பிரகாஷ் ராஜ், இன்றைய பெற்றோரின் மன நிலைமையை மிகத் தத்துருபமாக வெளிக் காட்டியுள்ளார் இதன் தாக்கம் நிச்சயம் பலரைக் கவனிக்க வைக்குமென நம்புகிறேன்.

## இலகுவாக பாரம்தூக்க கையுறை

இயற்கை தந்த உடலால் எவ்வளவு சக்தி கிடைத்தாலும், கைகளும், கால்களும் தான் அதிகம் தேவைப்படும் அவயங்களாக மனிதர்களுக்கு உதவுகிறது. கைகளில் கால்களில் வலு விளந்தவர்கள், பிறர் உதவியில்லாமல் நடமாடுவது மிக மிகக் கஷ்டம். இவர்களுக்கு உதவுவதற்காகவே விசேட உபகரணங்கள் நாளுக்கு நாள் பாவனைக்கு வந்தவண்ணம் இருக்கின்றன. ஆராய்ச்சிகளும் தொடர்ந்து நடந்த வண்ணமே இருக்கின்றன.

எடை கூடிய பொருட்களை கைகளால் தூக்கும் போது, அநேகர் சிரமப்படுவதை அவதானித்த ஆராய்ச்சியாளர்கள், இதற்கான காரணத்தை ஆராய்ந்தார்கள். தொழில் ரீதியாக எடை கூடிய பொருட்களை அன்றாடம் தூக்கும் போது, கைகளின் தசைநார்கள் (MUSCLES) நாளடைவில் அதன் சக்தியை இழந்து ஒரு கட்டத்தில் முற்றாகச் செயலிழக்கவும் வாய்ப்பு இருப்பதை அவதானித்துள்ளனர். எனவே, வலு விளந்துபோகும் தசை நார்களுக்கு வலுக் கூட்ட ஏதாவது உபகரணம் கிடைக்காதா என்ற சிந்தனையில் ஆராய்ச்சி செய்த ரோக்கிய விஞ்ஞான பல்கலைக் கழகத்தின் HIROSHI KOBAYASHI's என்பவரும் அவரது குழுவினரும் மிக அருமையான ஒரு செயற்கையான கையுறையை கைகளில் பொருத்தக் கூடியதாக தயாரித்துள்ளனர்

**தகவல் களஞ்சியம்**

வைத்திருப்பவர் : **உமா மகாலிங்கம்**

இந்த செயற்கைக் கையுறையை MUSCLE SUIT எனப் பெயரிட்டு அநேக பரிசோதனைகளின் பின் அடுத்த ஆண்டளவில் சந்தைப்படுத்த முன்வந்துள்ளனர் பாடசாலை மாணவர்கள் முதுகில் சுமந்து செல்லும், பைகளின் தோற்றத்திலும் நிறையில் 9.2kg எடையுள்ள இந்த புதிய MUSCLE SUIT, 40kg எடையிலான அரிசி மூட்டையை எதுவித சிரமமும் இன்றி மிக இலேசாக தூக்கக் கூடியதாக இருப்பதை பரிசோதனைக்கு உட்பட்டவர்கள் ஒப்புக் கொண்டுள்ளனர்.

இவர்களால் தயாரிக்கப்படும் கையுறைகள் இரண்டுவிதமான தேவைகளுக்கு பயன்படும் விதமாக உருவாக்கம் கொடுத்துள்ளனர் தொழில்ரீதியாக அதிகம் எடைகளைத் தூக்கும் தேவைகளுக்கு, கைகளுக்கும் முதுகுக்கும் வலுச்சேர்க்கும் வகையில் உபயோகப்படுத்தக் கூடியதாகவும் 5kg எடையளவிற்கு இலகுவான பொருட்களை கையாள்வதற்கும் உதாரணமாக படுக்கையில் இருந்து ஒரு நோயாளியை தூக்குவதற்கும், படுக்க வைப்பதற்கும் உதவும் வகையில் இந்த MUSCLE SUIT தயாரிக்கப் பட்டுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

இறப்பர் உறைகளினாலும், காற்று அமுக்கத்தினாலும் செயல்பட வைத்திருக்கும் இப்புதிய கண்டுபிடிப்பு, வலுவிழந்தவர்களுக்கு கிடைத்துள்ள வரப் பிரசாதமாகும். அடுத்தவருட முற்பகுதியில் விற்பனைக்கு வர இருக்கும் இந்த செயற்கைக் கையுறையை, மருத்துவ சாதனங்களில் இன்னுமொரு உபகரணமாக மனதார வரவேற்போம்.

## புற்றுநோய்களை முறியடிக்கும் அஸ்பிறின்

இருதய நோயால் பாதிக்கப் பட்டவர்களுக்கு ஆத்ம நண்பனாக உதவும் அஸ்பிறின் மாத்திரையின் மகிமை புற்று நோயால் பாதிக்கப் பட்டவர்களையும் பாதுகாக்கப் போவது பரிசோதனைகள் மூலம் நிச்சயப் படுத்தப் பட்டுள்ளது. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் எகிப்த்திய வழி வந்த மருத்துவப் பதிவேடுகளில் காணப் பட்ட வைத்தியகுறிப்புகளில், விலோ(WILLOW) மரப்பட்டைகளின்று பிரித்தெடுக்கப்படும் SALICYLATE எனப்படும் மூலிகை மருந்து, உடலில் உண்டாகும் வீக்கம்/கட்டி போன்ற நோய்களைத் தடுக்கும் சக்தி படைத்ததாக ஆராச்சியாளர்கள் அறிந்துள்ளனர்.

அஸ்பிறின் மாத்திரைகளை உட்கொள்வதினால், சிலருக்கு சில பக்க விளைவுகள் உண்டாகுவதாக சில குழப்பமான செய்திகள் கிடைத்தாலும் இதன் மருத்துவ மதிப்பீட்டில், சில வகைப் புற்றுநோய்கள் உடலில் பரவுவதைத் தடுக்கும் குணாதிசயம் இதற்குண்டு என ஆய்வாளர்கள் நிரூபித்துள்ளனர். DUNDEE பல்கலைக் கழகத்தின் ஆய்வாளர் GRAHAME HARDI தனது ஆய்வில் அஸ்பிறின் உடலுக்குள் செல்லும் போது உடைந்து SALICYLATE ஆக மாற்றம் அடைவதால் புற்றுநோய்கள், நீரழிவு போன்ற உடல் உபாதைகள் பரவாது தடுக்க உதவுவதாக அவர் மேற்கொண்ட பரிசோதனையில் அறிந்துள்ளார்.

தங்களுடைய ஆராச்சியில் கண்டுகொண்ட SALICYLATE வகை மருத்துவ பரிகாரம், ஆதி காலம் தொட்டு கடைப்பிடித்துவரும் மூலிகை மருத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு அணுகுமுறையே தவிர ஒரு புதிய கண்டுபிடிப் பல்ல என ஆராச்சியாளர் HARDIE ஒப்புக் கொள்ளும் அதே சமயம், புற்றுநோய்கள் உடலில் பரவாமலும் நீரிழிவு உடலைத் தீண்டாமலும் அஸ்பிறின் எப்படி உதவுகிறது என்ற இரகசியத்தை கண்டுபிடிப்பதில் மேற்கொண்டு பரி சோதனைகள் நடைபெறுவதாக தகவல் தந்துள்ளார்.

# மரண அறிவித்தல்



திருமதி இராஜேஸ்வரி பரமலிங்கம்

தோற்றம்:06-04-1939

மறைவு: 28-04-2012

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிவரூபராணி செந்திவடிவேலு அவர்கள் 28-04-2012 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம், திலகவதி[மாரிமுத்து] தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நல்லதம்பி, சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மருமகளும், நல்லதம்பி செந்திவடிவேலு அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சிறிதரன், நவநீதன்[அவுஸ்திரேலியா], காலஞ்சென்ற மணிவண்ணன், பால்ராஜன்[லண்டன்], காலஞ்சென்ற ரஞ்சித்குமார், யசோதை[இலங்கை] ஆகியோரின் பாசமிகு தாயாரும், யோகதுரை, மங்களேஸ்வரி, கஜலட்சுமி ஆகியோரின் அன்பு மாமியாரும், பிறண்டன், அபிஷா, வினுஷா, சிறிதரன், மணிவண்ணன், கேசவன், ரஞ்சித்குமார், அருண்குமார் ஆகியோரின் அன்புப் பேத்தியாரும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**குடும்பத்தினர்**

தொடர்புகளுக்கு:
**செந்திவடிவேலு - இலங்கை**

**செல்லிடப்பேசி: +94776354237**

# நலன்கள்...

*வி.பு. முன்:*

2008 ஆம் ஆண்டு நான் அந்த வீட்டில் கொஞ்ச நாட்களாக ஒரு அலுவல் காரணமாகத் தங்கியிருக்க வேண்டியிருந்தது. அப்போது நான் கண்ட காட்சி அது. வீடு ஒரே அமளிப்பட்டுக் கொண்டிருந்தது. பிள்ளைகள் ஆளுக்கொரு மூலையாக இருந்து மனப்பாடம் பண்ணிக் கொண்டிருந்தனர். தாய் சாந்தினி இடைக்கிடையிலே பிள்ளைகளை உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தாள். 'பிள்ளை உச்சரிப்பை கொஞ்சம் கவனி, அந்த குமாரி எப்பிடி அண்டைக்கு பேசினது பார்த்த நீங்கள் தானே .பிள்ளை கொஞ்சம் ஜூஸ் தரட்டே? தொண்டை காஞ்ச மாதிரி இருக்கு'. 'வேண்டாம் அம்மா' இது மூத்தவள் டிலானி. தாய் பிள்ளைகளின் போராட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்த அப்பா கனகவேலுவுக்கு உள்ளங்காலிலிருந்து உச்சி வரை எரிச்சல் பத்திக் கொண்டு பரவியது. 'அந்தப் பிள்ளைகளைச் சும்மா விடப்பா... அதுகள் தங்களாலை முடிஞ்சதைச் செய்யுங்கள் தானே'. சாந்தினிக்கு கோபம் எகிறியது. 'ஓமோம் ஏன் சொல்ல மாட்டீங்கள் இந்தப் பிள்ளைகளோட நானெல்லோ கஷ்டப்படுறன். திங்களில இருந்து வெள்ளிக்கிழமை வரை பள்ளிக்கூடம் விட்டு எடுக்கிறது சனிக்கிழமை மியூசிக் வகுப்புகளுக்கு ஆள் மாறி ஆளை விட்டு எடுக்கிறது ஞாயிற்றுக்கிழமைகளில இந்தத் தமிழ் வகுப்பு. இது எல்லாத்துக்கும் பிள்ளைகளோட அலையுறது நான் எல்லோ! நீங்கள் ஏன் சலிக்கிறீங்கள்? வேலையாலை வாறதும் செய்தி பாத்து டெலிபோனிலை வியாக்கியானம் செய்யுறதும் தானே உங்கட வேலை?' கனகவேலுவுக்கு ஏன்தான் வாயை விட்டோமோ என்றிருந்தது. சாந்தினி தொடர்ந்தாள் 'ஒவ்வொரு வருஷமும் இந்த மாவீரர் பேச்சுப் போட்டியிலை முதலாம் இடமாய் வாற என்ற பிள்ளைகள் இந்த வருசமும் அதைதான் பிடிக்க வேணும்'. 'சூழுரைத்தல்' என்பதை நேரடியாகப் பார்க்கும் சந்தர்ப்பம் எனக்கு அன்று கிடைத்தது.

நான் அவர்களுடனேயே தங்கியிருந்ததால் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக பேச்சுப் போட்டி சூடேறிக்கொண்டே இருந்தது. போட்டி குழந்தைகளுக்கான பேச்சில் மட்டுமா? அதைத் தொட்டு இதைத் தொட்டு அம்மாமார்களுக்கிடையிலேயும் (அப்பாமார்கள் இவற்றில் தலையிடுவது மிகக் குறைவு என்பதை கனகவேலுவின் பேச்சிலிருந்து புரிந்து கொண்டேன்) குடும்பங்களுக்கிடையிலேயும் 'நீயா நானா' நடை பெற்றுக் கொண்டிருந்தது. குழந்தைகளின் திறமைகளை வளர்த்தல், எம் வரலாற்றையும் எம் வீரர்களையும் இளம் சமுதாயம் புரிந்து கொள்ளுதல் என்பதை விட்டு பெற்றோரின் நோக்கம் எங்கோ செல்வதை உணரக்கூடியதாக இருந்தது.

போட்டி இறுதி நாளும் வந்தது. சாந்தினி காலையிலேயே எழுந்து பிள்ளைகளையும் எழுப்பி இறுதி ஒத்திகை பார்க்கப் பட்டது. நிற்கும் நிலை, கண்ணசைவுகள், கை கால் அசைவுகள், குரல் ஏற்ற இறக்கங்கள், தொனி, உச்சரிப்பு, சபையோரைக் கவரும் விதம், (முக்கியமாக நடுவர்களை) அனைத்தும் கடந்த வருடங்களின் அனுபவ அடிப்படையில் சரி பார்க்கப்பட்டு சாந்தினியும் கனகவேலுவும் திருப்தியாயினர். இன்று சமையல் இல்லை. 'தம்பி குறை நினைக்காமல் இண்டைக்கு மட்டும் வெளியிலை சாப்பிட்டுக் கொள்ளுகிறீரா?' 'ஓமக்கா நான் பாத்துக் கொள்ளுறன், நீங்கள் யோசிக்காதையுங்கோ, நானும் உங்களோட உதவிக்கு வரவா அக்கா?' ( போட்டி நடக்குமிட விடுப்பை அறியத்தான்). 'கார்ல இடமில்ல நீர் வேணுமெண்டால் மெத்ரோவில வாருமன். விலாசம் எழுதித் தாறேன்'. விலாசத்தை எழுதி என்னுடைய கைகளுக்குள் தந்து விட்டு எல்லோருமாக வெளியேறினர். கனகவேலுவைப் பார்க்க நான் ஆறு வயதில் அம்மாவின் சேலைத் தலைப்பைப் பிடித்துக் கெண்டு பின்னாலேயே திரிந்த ஞாபகம் வந்தது.



அன்று போட்டி நடக்குமிடத்துக்குப் போக வேண்டும் என்று நினைத்தும் இன்னொருவரை அவசியமாக சந்திக்க வேண்டியிருந்ததால் முடியாமல் போய் விட்டது. நான் மதியம் வெளியே சாப்பாட்டை முடித்து பின் எனது அலுவல்களையும் முடித்து வர மாலை ஏழு மணியாகி விட்டது. நான் வந்து கொஞ்ச நேரத்துக்குள் அவர்களும் திரும்பினர். சாந்தினி அக்காவின் முகம் பளீர் சிரிப்புடனிருந்தது. 'தம்பி நீர் வந்திருக்க வேணும் எப்பிடி பிள்ளைகள் பேசினதுகள் தெரியுமா? வழமை போல மூத்தவை இரண்டு பேரும் முதலாவது தான். எனக்குத் தெரியும் என்ர பிள்ளையளை வெல்லேலாது எண்டு'. சாந்தினி அக்காவின் பெருமை தொடர்ந்து கொண்டிருந்தது. நான் பிள்ளைகளுக்கு எனது பாராட்டுக்களைச் சொல்லி விட்டு படுக்கப் போய் விட்டேன். சாந்தினி அக்காவின் பேச்சு தொலைபேசியில் தொடர்ந்து கொண்டிருந்தது நீண்ட நேரம் வரை கேட்டது.

*வி.பு.பின்:*

2010 இல் அதே காலப் பகுதியில் அந்த வீட்டுக்குப் போக வேண்டியிருந்தது. பழைய நினைவுகள் ஞாபகத்துக்கு வர அந்த வீடு களை கட்டியிருக்கும் என்று நினைத்தபடி படியேறினேன். வீடு அமைதியாயிருந்தது. பிள்ளைகளை வெளியே காணவில்லை. வந்த களைப்புத்தீர குளித்து முடித்ததும் சாந்தி அக்கா உணவு பரிமாறினார். மெதுவாக கேட்டேன் 'என்ன பிள்ளைகளைக் காணேல்லை அக்கா?' அவையளை என்ர தங்கச்சி வந்து சினிமாவுக்கு கூட்டிக் கொண்டு போயிட்டா தம்பி' சாந்தினி அக்கா இயல்பாகப் பதில் சொன்னார். 'இந்த முறை மாவீரர் போட்டிகள் எல்லாம் எப்பிடிப் போகுது'? 'ஆ ஆ அது எல்லாம் நடக்குது. ஆனால் நான் எங்கட பிள்ளைகளை விடேல்லை' இழுத்துக்கொண்டு பதில் வந்தது. 'ஏனக்கா ஏன் என்ன பிரச்சனை?'. 'இல்லைத் தம்பி ஏன் சும்மா பிரச்சனைகளை? இவ்வளவு நாளும் இவை பலமா இருந்தவை. எல்லாம் பெரிசா நல்லா நடந்தது. இப்ப எல்லாம் முடிஞ்சுது.

இனி இதுக்குள்ள இருந்து ஒரு பலனுமில்லை. அதோட நாட்டுக்கும் போக வேணும். பிறகு எல்லாம் சிக்கலாப் போயிடும்? அதுதான் நாங்கள் ஒண்டுக்கும் பிள்ளைகளைப் பங்குபற்ற விடேல்லை'. எனக்கு சாப்பாடு தொண்டைக்குள் இறுகி உள்ளிறங்க மறுத்தது. பாரதியின் கவி வரிகள் ஏனோ ஞாபகத்துக்கு வந்தன.

*'நெஞ்சி லுரமுமின்றி*
*நேர்மைத் திறமுமின்றி*
*வஞ்சனை சொல்வாரடி'...*

கை கழுவ எழுந்த போது சாந்தினி அக்கா கேட்டார் 'ஏன் தம்பி சரியாச் சாப்பிடேல்லை'? 'இல்லையக்கா வரேக்க ரெயினுக்குள்ள சாப்பிட்டதால பசியில்லை' சொல்லும் போதே எம்மாவீரர் ரத்தமும் சதையும், கருகலுமாய் கிடந்த காட்சிகள் வந்து போயின.

*Alvit Vincent*

## பிரிந்து பறக்கும் வலி....

அன்பே
உனக்கும் எனக்குமான
உறவுகள்
எந்தக் கவிஞனும்
இதுவரை புனைந்துவிடாத
வார்த்தைகளின்
வனப்புகளைத் தாண்டி
வரையப்பட்ட கவிதைகளடி..
நாம் பழகிய
அழகிய நாட்களின்
நினைவுகள்
எந்த ஓவியனது
தூரிகையிலும்
இதுவரை சிக்கிவிடாத
அற்புதமான ஓவியங்களடி...

உன் வார்த்தைகள்
என் செவிகளில் விழுந்த
அந்த மிகமெல்லிய
முதலாவது குளிர்நாளில்
நீ பேசிய ஒவ்வொரு
வரிகளையும்
என் நினைவுப் பெட்டகத்தில்
எடுத்துச் செல்கிறேன்..

பழைய சில
முத்திரைகளையும்
பட்டாம்பூச்சிகளின்
இறகுகளையும்
பொன் வண்டு
முட்டைகளையும்
எல்லைகளற்ற மகிழ்ச்சியுடன்
சேகரித்து வைத்திருக்கும்
சிறுவனைப்போலவே
உன் மேலான
என் அன்பின்
நினைவுகளையும்
என்னுடனே எடுத்துச்
செல்கிறேன்..

என் கனவுகளில்
அலைந்து திரிந்த
வெண்மேகமே – உன்
எல்லைகள் பரந்தவை
என்பதை
உணர்ந்து கொண்ட பொழுதில்
உன் பறத்தலுக்காக
உன் பாதைகளில் இருந்து தூர
விலகி
என்காதலுடன் நான்
ஒடுங்கிக் கொள்கிறேன்..

சிகரங்கள் தொடவேண்டிய
உன் சிறகடிப்புக்காக
சுய நலங்களுடன்
உன்னைச் சுற்றிய
என் கனவுகளுக்கு நானே
தீ மூட்டிக் கொள்கிறேன்..
எல்லையற்ற வானத்தில்
கட்டற்றுப் பறக்கும்
பட்டாம் பூச்சி
உன் கனவுகளுக்கு நான்
வட்டமிட்டுவிடக் கூடாதென்பதால்
உன் எண்ணங்களில் இருந்து விலகி
எட்ட நின்றுகொள்கிறேன்..

கால நதியின்
நீள் பாய்ச்சலில்
கண்ணீராய் கரைந்து.....
தூரங்கள் பிரிந்து......
நீயொரு திசையிலும்
நானொரு திசையிலுமாகக்
கனவுகளைச் சுமந்துகொண்டு
அலைந்து திரிந்தாலும்
ஒன்றாகும் உணர்வுகளிலும்
சிந்தனைகளிலும்
எம்மிரண்டு இதயங்களினதும்
இயங்கு புள்ளிகள்
சுற்றிக்கொண்டிருக்கும்..

நீ உயரப் பறந்து கொண்டே இரு..
உன் கனவுகளை யாருக்காகவும்
விற்றுவிடாதே..

பிரிந்தும் பிரியாத
உன் நினைவுகள்
மனதின் ஆழத்தில்
பூக்கும் பொழுதெல்லாம்
உன் வெற்றிகள் – என்னை
உற்சாகப் படுத்தும் அன்பே..

பிரிவதற்கென்றே
சேர்ந்த உறவா நாம்..?
புரியாத மௌனங்களே
விடைகளாக
உனை விட்டுப்போவதை
நினைத்து
செத்துப்போகும்
என் விழிகளில்
எட்டிப்பார்க்கின்றன
உன் நினைவுகள்
கண்ணீராய்...

உருகி வழியும்
கண்ணீர்த்துளிகளுடன்
யாரும் காணாமலே
கரைத்துவிடுகிறேன்
என் இதய வலிகளை...

நாளை இவை உன்
கனவுகளின் சிறகுகளில்
பாரமாக இருந்து விடக்
கூடாதென்பதால்..

-அபேஸ்

BAR - RESTAURANT - BANQUETING
FUSHIA
HAPPY HOUR!
5.00 PM TO 7.00 PM
40% DISCOUNT
ON ALL FOOD AND DRINKS
Orders must be taken before 7.00 pm
Monday to Sunday
3 Brighton Road, South Croydon, CR2 6EA
www.fushiauk.com
Tel: 020 8680 8833

WebDesign, MATHS CLASSES
Home Visit Computer & Maths Classess.
- For University 1st Year Students ( C, C++ )
- PHP & mySQL Classes from very basic level
- Website Design & Basic Computer Training
(Surrey, Middlesex, Essex Area) By Experience Tutor
மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்
C/C++
Mr.Mathi / Mr.Jaya
Tel: 07426 893 479 | 07800 772 360

# பிள்ளைப்பேறு



அண்மையில் தவம் அண்ணனின் மருமகனை லண்டனில் சந்திக்க நேர்ந்தது. பேச்சில் இந்தியத் தமிழ் வாசம் வீசியது. என்ன ஏது என்று கேட்டபோது தமிழ் நாட்டில் தானும் தன் மனைவியுமாக தங்கியிருந்து பிள்ளைப் பேற்றுக்கான சிகிச்சையில் ஈடுபட்டதாகக் கூறினார். பதினொரு ஆண்டுகளாக பிள்ளையில்லாத பிரச்சினை மருத்துவ முயற்சிகளும் பயனளிக்கவில்லை என்று வருத்தப்பட்டார். தமிழ் நாட்டில் ஆயுள்வேத வைத்தியர் ஒருவரின் ஆலோசனைக்கு அமைய தற்போது ஆயுள்வேத முறையிலும் ஷெர்ப லைப் என்ற பாலுணவு வைத்திய முறையிலும் கடைப்பிடிப்பதாகத் தெரிவித்தார்.

இலட்சம் இலச்சமான செலவுகள் நூற்றுக் கணக்கான தொடர் ஊசிகள். மீண்டும் மீண்டுமான சத்திர சிகிச்சை வைத்தியம் இதையும் தாங்கியும் பிள்ளைப்பேறு என்ற இலச்சியத்தை ஈடேற்றுவதில் கணவன், மனைவி இருவருமே உறுதியாக உள்ளனர். முயற்சியில் 16 ஆண்டுகளின் பின் வெற்றி பெற்ற என்னுடைய அனுபவத்தையும் கூறி. அவர்களுக்கு ஆறுதலூட்டினேன் தென்பளித்தேன்.

பிள்ளைப் பிரச்சினை, நேர்த்தி என்பன காலா காலமாக எம் நாட்டிலே நிலவிவருகின்ற ஒன்று எனக்கு இன்னும் நினைவிருக்கிறது எனது வீடு அமைந்த கொல்லங்கலட்டி வீதிக்கு மின்சார இணைப்பு புதிதாகத் தரப்பட்ட காலமது. எமது வளவில் உப தபால் கந்தோருக்கு அருகில் இருந்த அரசமரம் மின்கம்பி இணைப்புக்காக தறிக்கப்பட வேண்டும் என்பது அரசாங்க உத்தரவு. தடித்துப் பருத்த அரச மரம் அது. அந்த உத்தரவைக் கேட்டதும் அம்மம்மாவின் ஓலம் உச்சமாக ஒலித்தது. பிள்ளைவரம் வேண்டி வளர்த்த அரசமரமாம் அது. நாளாந்தம் அரச மரத்தைச் சுற்றி நேர்த்திக்காக எத்தனையோ குடம் தண்ணீர் தான் ஊற்றி வளர்த்த கதையைக்கூறி அழுதா. அந்த அரசமரம் தான் தனக்கு இரு பிள்ளைகளின் தாயாகும் வரத்தைத் தந்தது என்பது அம்மம்மாவின் நம்பிக்கை.

செப்பில் பாம்பு செய்து வைப்பது. ஏழு செவ்வாய்க் கிழமைகளுக்கு அம்மனுக்கு விரதம் அனுஷ்டிப்பது. பிள்ளைத் தொட்டில் செய்து அம்மாளுக்கு வைப்பது என்று பிள்ளைப்பேறு இல்லாதவர்கள் இறை அருள் வேண்டும் சங்கதிகள் ஏராளம். மந்திரம் மாந்திரீகம் என்று அலைவோரும் உண்டு. கால ஓட்டத்தில் பிள்ளைப்பேறு மருத்துவ முறைமூலம் சாத்தியமாகியது. தெய்வ நம்பிக்கயோடு மருத்துவத்தின் துணையையும் நாடும் நிலையயும் அதிகரித்தது.

இவ்வகையில் மகப்பேறு மருத்துவம் தனிப் பிரிவு சிகிச்சை முறையாக வைத்திய சாலைகளில் இருந்தது. இலங்கையிலும் அது தனி மருத்துவப் பிரிவாக காலா காலமாக இயங்கி வருகின்றது. பேராசிரியர் வைத்திய கலாநிதி சின்னத்தம்பி என்கின்ற பெண்மணி பிள்ளைப் பேற்று மருத்துவத்துக்கு சிறந்து விளங்கிய மருத்துவர் என்ற பெயரை எடுத்தவர். உடுப்பிட்டியின் முன்னால் பாராளுமன்ற உறுப்பினர் சிவசிதம்பரம் அய்யாவின் பெரியதாயார் இவர். பிள்ளைப் பேறு இல்லாத தம்பதிகள் என்றே பெண்ணுக்கு ஏதோ குறைபாடு என்ற கருத்து தான் நீண்ட காலமாக ஒலித்தது. ஆணும் அதற்கு காரணமாக இருக்கலாம் என்பது மருத்துவ வளர்ச்சியின் பின்பே தெரியவந்தது. மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

ஆண், பெண் ஆகிய இருவரும் மலடன், மலடி என்ற பெயரைப் பெறாமல் இவ்வாறாக பிள்ளைப் பேற்றுக்கு அலைகின்ற சங்கதிகளும் மருத்துவ முறையை கடைப்பிடிக்கின்ற சந்தர்ப்பங்களும் அதிகரித்தது. பிள்ளை இல்லாத நிலையிலே பெண்ணே அதற்குக் காரணம் என்று ஆண் வேறு திருமணம் செய்கின்ற நிலைப்பாடுகளும் இதனால் திருமண பந்தம் முறிவுற்று பெண் பிள்ளைப்பேறு இல்லாத நிலையிலே தனி மரமாக ஆகும் தன்மையும் கூட நடக்கத்தான் செய்தது.

ஆண்கள் பக்கத்தின் விந்துக்கள் அவற்றின் தொகை, வீரியம் என்பனவற்றின் குறைபாடு பிள்ளைப் பேறின்மைக்கு காரணம் ஆகலாம் என்பது மருத்துவ முறையில் தெரியவந்தது. பெற்றோருக்கு சம்மதித்து அவர்கள் பேசும் திருமணத்தை தன்னுடைய குறைபாட்டை மறைத்து செய்து கொள்கின்ற ஆண்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். இதனால் மணப் பெண் நிர்கதியாவதும், மனவிரக்தி கொள்வதும், குடும்ப உறவுகசப்பதும், இது மன, மண முறிவுக்கு காரணமாக அமைவதும் கூட நடக்கத் தான் செய்தது.

## ஊரின் வாசம்

சுவாசிப்பவர்: ப.வை. ஜெயபாலன்

இந்த நிலையிலே மருத்துவத் துறையின் வளர்ச்சி உச்சமேறியது. மருத்துவத் துறையை உழைப்பாக்கும் போலி மருத்துவர்களும் உருவெடுத்தார்கள். லண்டன் தொலைக்காட்சி ஒன்றில் கூட மதியம் அரை மணி நிகழ்ச்சி மகப்பேறு மருத்துவத்திற்காக தினமும் ஒதுக்கப்பட்டு வருகின்றது. மருத்துவம் என்று ஆரம்பிக்கும் போது பிள்ளையில்லாப் பிரச்சினை அதிக துன்பத்தைத் தருவது பெண்களுக்குத் தான். வயிறு கழுவுவது என்பது பிள்ளைப்பேறு இல்லாதவர்களுக்கான ஆரம்ப வைத்தியம். செயல்முறை சிகிச்சை. யோனிக்கு உள்ளீடாக நடைபெறுகின்ற ஒரு சிகிச்சை முறை. பிள்ளைப்பேறின் போது காணப்படும் அதே நோவு, பிள்ளைப் பேற்றின் பின் காணப்படும் அதே வலி இந்த சிகிச்சை முறை மூலமும் பெண்களுக்கு ஏற்படத்தான் செய்கின்றது.

வெளியே விந்தையும், முட்டையையும் தனித் தனியாக கணவன் மனைவி இருவரிடமும் எடுத்து பரிசோதனைக் குழாய் மூலம் சினைப் படுத்துவது அதைப் பின்னர் மனைவியின் கருப்பையில் பதிவைப்பது என்ற முறை 1978 இல் கண்டறியப்பட்டது. இதற்கான மருத்துவ நிலையம் பிரித்தானியா நோட்டின்காமிலே உண்டு என்பதும் உலக பிரசித்தி பெற்ற பிள்ளைபேறு குழாய் முறையிலான பிள்ளை பேறு முறை இங்கே தான் வெற்றிகரமாக நடத்தப்படுகின்றது என்பதும் உலகளாவிய அபிப்பிராயம். சிறப்பான வெற்றியை பல ஆயிரக்கணக்கானவர்களுக்குதந்த சிகிச்சை முறை இது.

இதன் வளர்ச்சியாக ஆண்களின் விந்தில் குறைபாடு இருந்தால் நன்கொடையாக வேறு ஆணின் விந்தைப் பெற்று வெளிஎடுக்கப்பட்ட பெண்ணின் முட்டையோடு சினைப்படுத்தி சோதனைக்குழாய் முறை மூலமாக பெண்ணின் யோனியில் பதிவைப்பது. இதேபோல் பெண்ணின் முட்டையில் குறைபாடு இருந்தால் நன்கொடையாக வேறொரு பெண்ணின் முட்டையை சினைப்படுத்தி பதிவைப்பது. இரு சாராருக்கும் குறைபாடு இருந்தால் அல்லது பெண்ணின் யோனியிலே பிள்ளையை தாங்க முடியாத தன்மை இருந்தால் இவ்வாறான சிகிச்சை முறை மூலம் வாடகைத் தாய் ஒருவருடைய வயிற்றில் பதிவைத்து பிள்ளை பிறந்ததும் தம்பதிகளுக்கு அந்தப் பிள்ளையைத் தருவது என்று பல்வகை மருத்துவ சிகிச்சை முறை இப்போது வளர்ச்சி கண்டுள்ளது என்ற வகையிலும் பிள்ளையில்லாக் குறை தீர்க்கப்பட முடியும் என்ற நம்பிக்கையை தற்போது இது கொண்டிருக்கின்றது.

கொள்ளிவைக்கக் கூட ஒரு மகன் இல்லையே என்றும் பாடுபட்டுத் தேடிய சொத்தை அனுபவிக்க கூட ஒரு வாரிசு இல்லையே என்றும் கவலைப் படுவோரின் கவலையை தீர்க்க பிரித்தானியாவில் கூட பரிசோதனைக் குழாய் முறை மூலம் சிகிச்சை இலவசமாக அளிக்கும் தீர்மானத்தை சென்றசில வருடங்களாக தம்பதியினருக்குச் செய்து தருகின்றது. மலடி, மலடன் என்று வையகத்தார் ஏசாமல் தாய் தந்தை என்ற பெருமையை ஒவ்வொருவரும் பெற இந்த மருத்துவ முறை உதவுகின்றது. இது எவ்வாறாயினும் இறை நம்பிக்கையும் இத்தகைய மருத்துவ முறையும் மனித குலத்தின் வளர்ச்சிக்கு ஒரு உறுதுணையாக அமையும் என்பதை எல்லோரும் ஏற்றுக்கொண்டாகத்தான் வேண்டும்.

# பாதிக்கப்பட்ட...

*(21ம் பக்கத் தொடர்ச்சி)*

ஸ்கந்தாவை நம்பி வெளிநாட்டுக்கு போகும் கனவோடு கொழும்பில் தங்கியிருந்தவர்களுக்கு விடயத்தைச் சொல்வதெப்படியெனத் தவித்த உதயகலா வெளிநாடு அனுப்பும் முகவர் ஏமாற்றிவிட்டதாகச் சொன்னார். பணத்தைக் கொடுத்தவர்கள் உதயகலாவை தொந்தரவு செய்யத் தொடங்கினார்கள். பெருந்தொகை பணத்தை உதயகலா முன்னின்று பெற்றுக் கொடுத்தமையால் அதற்கான பதிலையும் உதயகலாவே சொல்ல வேண்டியிருந்தது.

இந்தப்பணப்பிரச்சனை வந்ததும் ஸ்கந்தாவையும் ஸ்கந்தாவின் முகவரான மட்டக்களப்பின் முகவருக்கும் தொலைபேசியெடுத்துதான் பொறுப்பு நின்று பெற்றுத் தந்த பணத்தை உரியவர்களுக்குத் திருப்பிக் கொடுக்குமாறு வேண்டினார். ஸ்கந்தா எதற்கும் தான் பொறுப்பில்லையெனத் தப்பிக்க பல பொய்களைச் சொன்னார். இறுதியில் உதயகலா மோசடி விபச்சாரம் என்ற செய்தியை தான் இணையங்களுக்கு கொடுக்கவில்லையென்று சத்தியம் செய்தார். Gatherpage இல் பணியாற்றிய பெண் பிள்ளைகளில் சிலரது பெயரைச் சொல்லி அவர்களே செய்தியை வெளியில் போட்டதாகவும் சொன்னார்.

செய்தி வந்த அவமானத்தால் தயாபரராஜ்ஜின் குடும்பம் அவரை வெறுத்து ஒதுக்கிவிட்டது. அத்தோடு சகோதரனுடன் இருந்த உதயகலாவின் தாயாரை உதயகலாவின் சகோதரன் வீட்டில் இருந்து வெளியேறச் சொல்லிவிட்டார். அந்தத்தாய் இன்று வரையும் கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றிலேயே ஆதரவற்று வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

தற்போது தயாபரராஜ், உதயகலா ஆகிய இருவரும மன அழுத்தநோய்க்கு ஆளாகி துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

மேலதிக விபரங்களுடன் அடுத்த பேப்பரில் சந்திக்கிறேன்.

# சிங்கக் கொடியும்..

அப்படியானவோர் தீர்வு தற்போதைக்குச் சாத்தியமில்லை. ஆதலால் முஸ்லீம்களின் மத உரிமைகளில் சாடையாகக் கைவைத்து அதனை உடனடியாக மிகவும் ஏற்றுக்கொள்ளத்தக்க நேர்மையானதும் நீதியானதுமான வழியில் தீர்த்து வைக்கும்போது அரபுலகம் அதனை மிகவும் நன்றியோடு பார்க்க வழியேற்படும் என்கின்ற ராஜதந்திரமும் இதில் அடங்கியிருக்கலாம்.

எப்படியாயினும் அறுபது வருடங்களுக்கு மேற்பட்ட பழமை வாய்ந்த பள்ளிவாசல் கட்டடத்தை உடைத்துத் திருத்தவேண்டிய தேவை ஏற்பட்டிருப்பதால் அரச செலவில் அதனைச் செய்து முடிக்க இந்த வழியே சரியானது என்கின்ற முடிவில் இத்தகைய அதிரடிப் பள்ளிவாசல் உடைப்பு நிகழ்ச்சிக்கு அரச சார்பு முஸ்லீம் தலைவர்கள் பச்சைக்கொடி காட்டியிருக்கலாம்.

சிங்கள மக்கள் மத்தியில் பௌத்த சிங்கள பேரினவாதத்திற்கு தமது நாட்டில் உள்ளவோர் பெரிய மதிப்பாகவும் இவ்வுடைப்பு நிகழ்வைக் காட்டி ஆதரவு திரட்டலாம். பின்னர் புதிதாகப் பள்ளிவாசலைக் கட்டிக்கொடுத்து இஸ்லாமியர்களையும் முன்னரைவிடப் பலமடங்கு மகிழ்ச்சியிலாழ்த்தலாம் என்ற பலதரப்பட்ட முன்யோசனைகளுடனேயே இந்த உடைப்பு நிகழ்ச்சி நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும், ரவூப் ஹக்கீம் வேறு இனப்பிரச்சனையில் மத்தியஸ்தம் வகிக்க விரும்புகிறாராம். அவரையும் பாதிக்கப்படும் ஓர் சமூகத்தின் தலைவராகக் காட்டி அவரது மத்தியஸ்தத்திற்கு தமிழர்களின் ஆதரவைத் திரட்டவும் இந்த உடைப்பைப் பயன்படுத்தலாமென்ற நோக்கமோ தெரியவில்லை.

மற்றும்படி இஸ்லாமிய நாடுகளின் ஆதரவை ஐநாவில் பெற்றுக்கொடுத்த முஸ்லீம் தலைவர்களைத் தமது அரசில் வைத்துக் கொண்டு அவர்களுக்கெதிராகச் சிறிதும் நன்றியுணர்ச்சியின்றிச் சிங்களவர்கள் இக்காரியத்தைச் செய்திருக்க நியாயமில்லையென்றே எண்ணத்தோன்றுகின்றது



# சம்பந்தனுக்கு நன்றி!

மௌலி
(ஒரு பேப்பருக்காக)

சிங்கள பௌத்த பேரினவாதத்தின் சின்னமான சிங்கக் கொடியை சம்பந்தன் தூக்கிப்பிடித்த விடயம் தொடர்பாக பலரும் கண்டனங்களை வெளியிட்டிருந்தமையை படித்தேன். எனக்கு இந்தச் சம்பவம் ஒரு விதத்தில் மகிழ்ச்சியை தந்தது. அது பற்றியே இந்தக் கட்டுரையில் எழுத விரும்புகின்றேன்.

எதிரியை விட துரோகி தான் அதிகம் ஆபத்தானவன் என்பதையும் வழுவழுத்த உறவை விட வைரம் பொருந்திய பகை நல்லது என்பதையும் முழுமையாக நம்புகின்றவன் என்றவகையில் சம்பந்தனின் சிங்கக் கொடியாட்டம் ஒரு நல்ல செய்திதான். சம்பந்தன் யார் என்பதை அது வெளிப்படையாகவே காட்டி விட்டது. இங்கே சம்பந்தன் நல்லவரா கெட்டவரா என்பதை விட தமிழ் மக்களின் அரசியல் பாதையில் இருந்த, வேடதாரியான ஒரு நீல நரியின் சாயம் போயிருக்கின்றது. அது இனி காட்டு ராஜா வேஷம் போட முடியாது. இவரை ஒரு தேசியத்தலைவர் என சரவணபவன் போன்றவர்கள் கூறினால் அது சம்பந்தனை நக்கலடிப்பதாகத்தான் இருக்கும்

சம்பந்தனின் செய்கைக்கு விளக்கமளிக்க புறப்படும் மற்றய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் காகமும் நரியும் கதை சொல்வதை விடுத்து, இந்த விடயத்தில் ஒரு தெளிவான நிலைப்பாடு எடுக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். தவறுமிடத்தில் அவர்களும் மக்களால் முற்றாக நிராகரிக்கப்பட வேண்டியவர்களாகவே இருப்பார்கள். தமிழீழத்தில் புதிய அரசியல் வெளி திறப்பதற்கும், புதிய தலைமை உருவாவதற்கும் சம்பந்தன் கொடுத்திருக்கும் வாய்ப்பு அளப்பரியது. சம்பந்தனை முற்று முழுதாக நிராகரிப்பதன் மூலமே மாற்றுத்தலைமை உருவாக முடியும். அதற்கான தார்மீக நியாயத்தை அவர் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார். சம்பந்தன் கூட்டத்தைப் போன்ற போலிகள், சம்பந்தன் சிங்கக்கொடியாட்டத்தில் இருந்தபோது, தமிழீழ தேசியக் கொடியுடன் ஓடிய அரசின் உளவாளி போன்ற நபர்கள் , அமைப்புக்கள், ஊடகங்கள் புலம் பெயர் தேசத்தில் இருக்கின்றன. புலம் பெயர் தேசத்தில் போலிகளை அடையாளம் காணுதல் தேசிய உணர்வுள்ள புலம் பெயர் தமிழர்களின் கடமையாக இருக்க, வடக்கு கிழக்கில் இறுக்கமான அரசியல் கட்டமைப்பை உருவாக்கக வேண்டிய கடினமான பணி அங்குள்ள நல்ல சக்திகளுக்கு உண்டு .

வடக்கிலும் கிழக்கிலும் தேசிய உணர்வுள்ள சக்திகள் ஓரளவு தலையெடுத்து வருவதனைக் காணக் கூடியதாக உள்ளது. ஆனால் புலம் பெயர் தேசத்தில் இந்த பணி மிகக் கடினமானதாகவே உள்ளது. இதற்கு அடிப்படைக் காரணம் புலம்பெயர்ந்தவர்களில் பெரும் பாலானவர்கள் தேசியப் பற்றின்றி, எழுபதுகளின் பிற பகுதியிலும் எண்பதுகளின் முற்பகுதியிலும் வந்தவர்கள் தம்மை பெருந்தோட்ட தொழிலாளர்களை மேய்க்கும் கங்காணிகள் என எண்ணிக்கொண்டு, பிற்காலத்தில் வந்தவர்களை கையாட்களாக, கூலிகளாக வைத்து தமது வியாபார நோக்க்கங்களைக் கையாண்டு வருகின்றனர்.

பிரித்தானிய தமிழர்பேரவையின் நிறுவக உறுப்பினர்கள் எனக் கூறுவருபவர்களும் சம்பந்தனின் வழி வந்தவர்களே. இவர்கள் தேசியப்பற்று என்பதை விட பணம் பண்ணுதல், பிரமுகராக பெருமை சேர்த்தல் என்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கின்றனர். இந்நபர்களை சரியாக இனங்காண்பதில் சம்பந்தனின் வரலாறு புலம் பெயர் தமிழர்களாகிய எமக்குப் பாடமாக அமைய வேண்டும்.

# மே தினப் பேரணி!







லண்டன் மாநகரில் பல்லின மக்கள் கலந்து கொண்ட மே தினப் பேரணியில் பிரித்தானிய தமிழர் பேரவை கலந்து கொண்டு தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட வன்கொடுமைகளை எடுத்துக் காட்டியது.

சாதகமற்ற மழையுடன் கூடிய கால நிலை மற்றும் வேலை நாளாக இருந்தும் பிரித்தானிய தமிழர் பேரவை உறுப்பினர்கள் இப் பேரணியில் கலந்து கொண்டு, துண்டுப் பிரசுரங்களை விநியோகித்ததுடன் பல்லின மக்களின் மத்தியில் இணையத் தள மின் மனுவிற்கான கையெழுத்துப் பெறும் வேட்டையில் உற்சாகமாக ஈடுபட்டனர்.

சர்வதேச சுயாதீன விசாரணை வேண்டுமென்ற கோரிக்கையினை முன் வைத்து கவனத்தை சிதறவிடாது தொடர்சியாக பிரித்தானிய தமிழர் பேரவை. முன்னெடுத்துவரும் பல்வேறு செயற்பாடுகளில் இன்றைய நிகழ்வும் பல்லின மக்களின் கவனத்தை ஈற்கும் வகையில் அமைந்தது.

மேடையில் உரையாற்றிய பேச்சாளர்கள் பலரும் இலங்கையில் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளைக் குறிப்பிட்டார்கள்.

பல்வேறு உள்ளூர் தமிழர் பேரவைகளின் பங்களிப்புடன் ஒழுங்கு செய்யப்பட்ட இணையத்தள மின் மனுவிற்கான கையெழுத்துப் பெறும் பரப்புரையும் அங்கு எடுத்துச் செல்லப்பட்ட பதாதைகள், துண்டுப் பிரசுரங்கள் என்பன இம் மே தினத்தைப் பார்வையிட்டு செய்தி சேகரிக்க வந்த சர்வதேச ஊடகவியலாளர்களின் கவனத்தை ஈர்த்தது

தொடர்ச்சியாக நடைபெறும் இவ்வாறான செயற்பாடுகளில் அனைத்து மக்களையும் இணைந்து கொள்ளுமாறு பிரித்தானிய தமிழர் பேரவை கேட்டுக் கொள்கின்றது.

பேரணியின் போதும் அதன் பின் நடைபெற்ற கூட்டத்தின் போதும் எடுக்கப்பட்ட படங்களையே அருகே காண்கிறீர்கள்

# கோர்த்து விடும் செய்திகள்

## ■ இத்தாலிச் சனியனுக்கு புதிய தலையிடி

சொல்லக் கூடாத இடத்தில் புற்று நோய் பிடித்துத் தவிக்கும் இத்தாலிச் சனியனுக்கு இப்போது புதிதாக ஒரு தலையிடி. குடியரசுத் தலைவராக யாரைப் போடுவது என்பதுதான் அந்தத் தலையிடி. மாமியார் காலத்தில் இருந்தே தலையாட்டி பொம்மைகளைத் தேர்ந்து எடுப்பதுதான் வழக்கம். அணு குண்டு வெடித்தவர் சலாம் போடுபவர் அல்லர். சனியன் பிரதம மந்திரியாக வருவதை எதிர்த்தவர். வங்கத்து ஆத்தாவும் கோபாலபுரத் தாத்தாவும் ஆதரவு தருவார்கள். நிதியை வைத்திருக்கும் வங்கத்து (அ)சிங்கம்

ஒரு சிறந்த தலையாட்டி பொம்மை. அது மட்டுமல்ல அவரை தலைவராக்கினால் வாரிசு பபாவிற்கும் அரியணைப் பாதை இலகுவாகும். இதில் இன்னொருவர் மகிழ்வார். அவர் யார் என்பது சிதம்பர ரகசியம்.

## ■ மீண்டும் TESO

தமிழர்களை அழிவில் இருந்து பாதுகாக்கப் புதுப்பிக்கப்படாத தமிழீழ ஆதரவு அமைப்பை தனது கட்சியை அழிவில் இருந்து காப்பாற்ற புதுப்பித்திருக்கிறார் கருணாநிதி. கருணாநிதி என்றும் எதிர்க்கட்சியில் இருந்தால் ஈழத் தமிழர்களுக்கு மிகவும் நல்லது.

## ■ பக்சராஜவிற்கு பட்சி தேடிக் கொடுத்தவர்.

வெள்ளை வான் காரர்களால் கடத்தப்பட்ட ஒருவர் தான் பக்சராஜவிற்கு பட்சி ஒழுங்கு செய்து கொடுத்தவன் என்னையே கடத்திவிட்டீங்களா படுபாவிகளா என்று கூச்சலிடும் காணொளியை பாயகோத்த தம்பி அண்ணனுக்குப் போட்டுக் காட்ட அதில் கடும் கடுப்படைந்தாராம் அண்ணன்.


## ■ இந்தியாவின் நாய் நகர்த்தல்கள்

எப்படியும் தமிழர்களை தனது ஆதரவாளர்களின் தலைமையின் கீழ் கொண்டுவரவேண்டும் என்ற முயற்ச்சியில் சற்றும் மனம் தளராமல் இந்தியா மீண்டும் மீண்டும் துரோகிகள் என்னும் முருங்க மரத்தில் ஏறி விழுகிறது. கடைசியாக வரதராஜப்பெருமாளைக் களமிறக்கியது. எடுபடவில்லை. இப்போது சந்திரகாசனைக் களமிறக்கியுள்ளது. போதாக் குறைக்கு மீன் பாடும் தேன் நாட்டின் முன்னாள் செந்தமிழ்ச்செல்வன்ராஜதுரையையும் இணைத்து விட்டுள்ளது. இவை அரசியல் காய் நகர்த்தல்களா இல்லை நாய் நகர்த்தல்களா?

## ■ இந்த முறை வித்தியாசம்

ஜேவிபிதலைவர் ரோகண விஜயவீர யாழ் போனபோது அவரின் மண்டையை உடைத்தார்கள். எதிர்க் கட்சித் தலைவராக ஜே ஆர் ஜயவர்தன யாழ் போன போது மேடையைச் சிதைத்தார்கள். ரனில் போகும் போது என்ன செய்யப் போகிறார்கள் என்று எதிர்பார்த்திருந்தவர்களுக்கு ஆச்சரியம் கொடுக்கக் கூடிய வகையில் வித்தியாசமாகச் செய்தார்கள். புலிக் கொடியுடன் ஓடினார் ஒருத்தர். தமிழீழ்ச் சட்டையை திறந்து காட்டினார் ஒருத்தர். அவர்கள் முகத்தைப் பார்க்கும் போது சிங்களவர்கள் என்று உறுதியாகத் தெரிகிறதாம். அவர்கள் உண்மையில் புலி ஆதரவாளர்களாய் இருந்தால் இப்போது அவர்கள் சடலம் கிடைத்திருக்கும்.

ஊருளவாரி




வயது போன அம்மாவைப் பார்க்க ஆட்கள் தேவை...

- Only for female
- Night sleepover for student £20

Others : Time 7:00PM - 9:30AM (£30) atleast 5 Days from Monday to Sunday

- Visa, NI Number இல்லாத ஆட்களுக்கு வேலை இல்லை

தொடர்புகளுக்கு : 07932 790 650

English Tutions
Individual and group classes

- English GCSE (Covering all examining boards)
- KS2, KS3 English
- 11+ Exams
Verbal/Non verbal/English & Maths



Contact : Marcia
Tel: 020 8405 3607
Email:marcia.pacheco@tiscali.co.uk

Location : Purley, South Croydon

Excellent results in GCSE and 11+Exams
- Examiner for GCSE
- 30 years teaching experience in secondary schools in England
- Qualifications:MA(Eng), PGCE, EFL, SEN

# ஒருத்தன் அல்ல என் மாவீரன்

*"உங்கள் சேட்டில்*
*ஒட்டியிருந்த தூசியைப்போல*
*என்னைத் தட்டிவிடுங்கள்*
*போய்விடுகிறேன்.."*

என்ற கவிஞன் எங்களை விட்டுத் தூரே போய்விட்டான். இனித் திரும்பி வரமுடியாத் தொலைவில் போய்விட்டான். அவன் பெயர் **சண்முகம் சிவலிங்கம்**. என்னிலிருந்து இருபது வயது மூத்தவரான அவரை 'அவன்' என்று எழுதக்கை கூசுகிறது. இது அந்த மகா கவிஞரின் ஆளுமை கருதி வந்த ஆளுமை மரியாதை ஒருமை.

ஓர் இரவு வந்து படுத்தவர் காலையில் எழும்பவில்லை. ஒரு மகத்தான கவிஞர் ஒரு மகத்தான சாவையும் தழுவிக் கொண்டார். தமிழன்னை தந்த மிகச்சிறந்த கவிக் கொடை அவர். ஈழம் தமிழுக்குத் தந்த ஒப்பற்ற கவிஞர்கள் ஒருசிலர் **நவாலியூர் சோமசுந்தரப்புலவர், மஹாகவி, நீலாவணன், சண்முகம் சிவலிங்கம், வ.ஐ.சா.ஜெயபாலன், சு.வில்வரத்தினம், சேரன்** போன்றோர் அவர்கள் விடுபட்டோர் கவிஞர் அல்ல என்பது அர்த்தம் அல்ல. தமிழ்க் கவிதையை முடக்கு முடக்காக மடக்கி திருப்பிக் கொண்டு வந்தோர் இவர்கள். கவனியுங்கள்- இவர்களின் மையப்புள்ளியாக நிற்பவர் சண்முகம் சிவலிங்கம் அவர்கள். மையப்புள்ளி மாத்திரமல்ல மகத்தான புள்ளியும் அவரே.

ஆத்மார்த்தமான கவிதைகள் அவரிடம் இருந்து எழுந்தன. மனதின் ஆழத்திலிருந்து பொங்கிப் பொங்கி குமிழியாக வெளிவந்து கவிதைகளாகத் தெறித்தன. அவைநெஞ்சைத் தொட்டன என்று அல்ல. உள்ளே நுழைந்து உயிர்க் கணத்தை உறிஞ்சி இழுத்தது.

*"நான் போய்வருகிறேன்*
*என்சுவடும் தெரியாது*
*மாணிக்கங்களை இழந்து போகிறேன்*
*வள நதிகளை விட்டுச் செல்கிறேன்*
*அது என் வரையில் தான்*
*உங்களுக்கு நான்*
*உங்களைக் கடந்து போய்விட்ட*
*ஒரு கால் அல்லது ஒரு கை*
*ஒரு பிடரி அல்லது முதுகு*
*முகமற்ற ஒரு நிழல்"*

என்று தன் சாவு எப்படி என்று சொல்கிறார் சசி

தன் சாவினூடாக தான் இழக்கப்போவது இந்தப் பெரிய உலகு, அதன் மீது உலவும் அன்பு மிக்க மாந்தர், காதல் மீதூரப் பெற்ற பெண்கள், பாசம் செறிந்த குழந்தைகள், ஆறு,கடல்,மலை,மண் என்ற இயற்கைச் செல்வங்கள், தென்றல்,நிலா என்ற இன்பம் துய்ப்பன, கலைகள், இலக்கியங்கள், காவியங்கள் என்று மனதுக்கு மகிழ்வூட்டுவன, இன்னும் எவற்றை எவற்றை எல்லாம் அவர் இழந்து போகிறார். அது எத்துணை வேதனைக்குரியது.

ஆனால் ஒருவரின் சாவு நமக்கு எப்படியாகிறது எங்களைக் கடந்து ஒரு கால் போய்விட்டது அல்லது ஒரு கை போய்விட்டது. முதுகு அல்லது பிடரி போய்விட்டது. முகமற்ற ஒரு நிழல் போயிற்று அவ்வளவு தான் ஒருவர் எமை விட்டுஉயிர்பிரிந்தபின்ஒரு சில நாள், துக்கம் மேவும்உயிர் பிரிந்தவரின் எம்முடனான உறவைப் பொறுத்து துக்க நாள் கூடிக் குறையலாம். அவ்வளவே.

இதனைத்தான் ஆத்மார்த்தமான கவிதை என்கிறேன், உள்ளிருந்து அனுபவித்து ஓரிரு வரிகளில் அதனைக் கவிதையாக்கிக் கொள்வது. இன்னும் சொல்கிறார்

*"ஒரு பெருவெளியில் சிறு மணல் கூட இல்லை*
*நான் அற்ற அந்த 2x5-1/2வெளியில்*
*அங்கு இனியொரு வெய்யில் சுடரும்*
*ஒரு மெல்லிய காற்று வீசும்*
*நான் போய்விட்டேன்*
*ஓம் ஓம் உங்களுக்கு நினைவிருக்காது"*

ஒரு பெரு வெளியில் சிறு மணல் கூட இல்லாத இடமது. வெற்றிடங்களை இயற்கை விடுவதில்லை என்பது விஞ்ஞான விளக்கம். அவ்வெளியை காற்றோ தூசியோ மணலோ நிரப்பும். கவிஞருக்கு வெய்யில் கூட அவ்வெளியை நிரப்பி விடுகிறது. தன் உடம்பின் பருமனான 2x5-1/2அடி வெளி என்கிறார் அவ்வெளியில் வெய்யில் சுடரும் ஒரு மெல்லிய காற்று வீசும் என்று துக்கிக்கிறார்.

உண்மையில் சசியின் ஏனைய கவிதைகளுடன் ஒப்பிடுகின்றபோது இது மிக எளிமைப்படுத்தப்பட்ட கவிதை ஆனால் எளிமையான உதாரணங்களே நம்மை ஆழமான விடயத்துக்கு அழைத்துச் செல்லும்.

இரவி அருணாசலம்
எழுதுவது என்னவெனில்

இதனாலேயே அவரை மகா கவிஞன் என்கிறேன். அவரை மாமனிதர் என்று சொல்லவும் அவரிடம் சில ஏதுக்கள் உள்ளன. மாவீரர் என விதைக்கப்பட்டோரில் சசியின் மைந்தனும் ஒருவர். 'கொம்மியுனிஸ்ட்' ஆக தன்னைப் பிரகடனப் படுத்திய ஒருவரான சசியினுடைய மைந்தன் மாவீரன் ஆவதில் ஏதும் வியப்பு இல்லை வர்க்கத்தின் பெயராலும் இனத்தின் பெயராலும் ஒடுக்கப்படுகையில் கிளர்ந்து எழுந்து போராடுவோர் அனைவரும் போராளிகளே. போராளி மைந்தனைப் பெற்ற தகப்பன் போராளி சண்முகம் சிவலிங்கம் அவர்கள்." என் மகனைக் கொன்றது ஓர் இந்தியத் துப்பாக்கி என்று புலம்பி அழுகிறார் சசி. புதைத்தார்களா வாய்க்கரிசிபோட்டார்களா எதைத் தான் பார்த்தேன் என்ற ஒப்பாரியும் சசியுடம் உண்டு" இவ்வாறு துன்பம் கண்ட தந்தை மகனுக்கான அஞ்சலியை இவ்வாறு எழுதுகிறார். அதனையே நிறைவுற்ற அவரது பயணத்துக்கான இறுதி வணக்கமாக வைக்கிறேன்.

*"ஒருத்தன் அல்ல என் மகன்*
*ஒருத்தன் அல்ல என் மாவீரன்*
*ஒடுக்குமுறைக்கு எதிராக உயிர் கொடுக்கும்*
*அனைத்து மாவீரர்களும்*
*எனது அன்புப் புதல்வர்களே*
*அவர்களின் புதையலில்*
*நிழல்க் கோடுகளாய் துப்பாக்கி நிறுத்தி*
*அதன் மீது தொப்பி கவிழ்த்து*
*அஞ்சலிக்கிறேன்.*
*இரவின் நிழல் இடையே*
*இதை எழுதிய பேனாவை*
*சற்றே நிறுத்தி*
*அவன் நினைவில் தரித்து"*

# அறிவியல் தகவல்கள்

சி.மாசிலாமணி
(ஒரு பேப்பருக்காக)

## மரங்கள், சுத்தமான, மலிவான, போதுமான ஆற்றல் தரப்போகின்றன!



அளப்பரிய ஆற்றல் (energy) பூமியை நோக்கி கதிரவனால் இடைவிடாது அனுப்பப் படுகின்றது. அதை நேரடியாகப் பயன் படுத்தத்தான் எமக்கு வழி தெரியவில்லை. தாவரங்கள் கோடிக் கணக்கான ஆண்டுகளாய் அந்த ஆற்றலைப் பயன்படுத்தி ஒளிச் சேர்க்கை மூலம், உயிர்கள் எல்லாம் வாழ வைக்கத் தேவையான உணவை அளித்துக் கொண்டே இருக்கின்றன. உணவைமட்டுமா தந்தன. நிலத்துக்கடியில் அவைசேமித்துவைத்த எண்ணை வளத்தைப் நம்பிதானே எம் சொகுசு வாழ்வுக்குத் தேவையான எத்தனையோ சாதனங்களை இயங்க வைத்துக் கொண்டிருக் கின்றோம். இந்த எண்ணை வளம் இன்னும் ஒரு நூறாண்டிற்கு தாக்குப் பிடிப்பதே கடினம் என்று சொல்லுமளவிற்கு வற்ற வைத்ததுடன் தேவைகளையும் கூட்டுகிறோம்.

இப்படியான சூழலில் புதிய வழிமுறைகளில் ஆற்றலைப் பெருக்க ஆய்வுகள் மேற்கொள்ளப் படுகின்றன. சூரிய மின்கல அடுக்குகளும் கைகொடுக்கின்றன. ஆனால் ஓரளவுக்குத்தான் அவற்றால்முடியும். அணு உலைகள் அமைத்து அணுக் கருச் சிதைவுமூலம் அளப்பரிய ஆற்றல் பெறும் சாத்தியம் உண்டு. ஆனால் அதைப் பாதுகாப்பாகச் செயற்படுத்தும் அளவுக்கு எமது தொழில்நுட்பம் போதாது என்ற பயம் பலர் மத்தியில் உள்ளது.

UCSD என்னும் கலிபோனிய பல்கலைக் கழக ஆய்வுகள் நம்பிக்கை தருகின்றன. ஆற்றலுக்கு அடித்தளமான நீர்வளியை (hydrogen)நீரிலிருந்து நேரடியாக பிரிக்கும் நனோ மரங்கள் தயாரிக்க முடியும் என்று நிரூபித்துள்ளார்கள்.

அதென்ன நனோ என்று கேட்காதீர்கள். நனோ என்பது நீளத்தை அளக்கும் ஒரு அலகு. மைக்ரோ என்றாலே ஒரு மீற்றரின் மில்லியனில் ஒன்று. நனோ என்பது மைக்ரோவின் ஆயிரத்தில் ஒன்று. அதாவது ஒரு மீற்றரின் பில்லியனில் (100 கோடியில்) ஒன்று. இதன் அடிப்படையில் உருவாகும் தொழில்நுட்பம்தான் நனோ தொழில்நுட்பம். கண்ணுக்குப் புலப்படாத உலோக இழைகளால் ஆன மரம்தான் நனோ மரம். எமக்குப் புரியும் மொழியில் சொல்வதானால், ஒரு தலை மயிரின் குறுக்கு வெட்டுள் 10,000 நனோ துகள்களை அடக்கலாம்.

அடுத்தது எம் உலகின் பெரும்பகுதியை மூடியுள்ள நீர், இது $H_2O$ என்னும் இரு மூலகங்களால் ஆன திடமான மூலக்கூறைக் கொண்ட ஒரு திரவம். ஒன்று நாம் வாழ இன்றியமையாத உயிர்வளி (oxygen) மற்றையது ஆகக்குறைந்த எடைகொண்ட முதலாவது மூலகமான நீர்வளி (hydrogen). நீர்வளியை நீரிலிருந்து பிரிப்பதற்கு அதிக ஆற்றல் தேவை. மின்னாற்றல் பகுப்பு மூலம் நீர் வளியைப் பிரிப்பதற்கு எவ்வளவோ மின் ஆற்றல் இப்போ செலவிடப் படுவதை நம்மில் பலர் அறிவர். இவ்வளவு சிரமமான பணியை கதிரவன் அள்ளிவீசும் அளப்பரிய வெப்ப, ஒளி அலைகளிலிருந்து பெற முடியுமென்றால் அதை என்னவென்று சொல்வது. ஆற்றல் பெறும் ஊற்று திறக்கப் பட்டு விட்டது என்றுதானே கூறவேண்டும்.

எண்ணை வளத்தைப் தேவைக்கு அதிகமாகப் பயன்படுத்தும்போது. அதனால் சூழல் மாசடைகிறது, வளிமண்டலம் வெப்பமடைவதால் பனிக் கட்டிகள் உருகி பல இடங்கள் நீரில் மூழ்கப் போகின்றன என்று மொத்தத்தில் பீதிடன் வாழ்கிறோம். ஆணு உலைகள் பாதுகாப்பாகக் கையாளப் படும் சூழல் வந்தாலும் அவை வேறு வழியில் அசௌகரியங்களை ஏற்படுத்தும்.

எப்படி கோடிக்கணக்கான ஆண்டுகளாக உயிரினம் மரங்களின் செயற்பாட்டில் தங்கி வாழ்ந்ததோ அதே மரங்கள் (செயற்கை) எமக்கு தேவையான அளவு, மலிவான, சூழல் மாசடையாத சுத்தமான ஆற்றலைத் தரப் போகின்றன. நீர் வளியைப் பயன்படுத்தி ஓடும் கார் கரியமல வாயுவுக்குப் பதில் சுத்தமான நீரை அல்லவோ வெளியிடப் போகின்றது.





# வாழ்க்கைத் துணை

## இலவச திருமண விளம்பர சேவை

இது புலம்பெயர் தமிழர்களுக்காக ஒரு பேப்பர் நடாத்தும் இலவச சேவை. இப்பகுதியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் உங்கள் விபரங்களை தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பி வையுங்கள். வெளியிட்டுள்ள விளம்பரங்களின் விபரங்களை அறிய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பிரித்தானியா:
Tel: 020 7043 4315
Fax: 020 7043 4312

கனடா:
Tel: 647-724-4188
Fax: 416-438-7855

email: info@orumanam.com



## மணமகள் தேவை

1. 29 வயது, 5'5", இலங்கை, பட்டதாரி, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3982

2. 29 வயது, 5'8", HSMP Visa in UK, MSc பட்டதாரி, working in IT sector தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3875

3. 27 வயது, 6'0", பிரித்தானிய நிரந்தர வதிவுரிமை, பட்டதாரி, working in private sector தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3985

4. 35 வயது, 5'7", பிரித்தானிய பிரஜா வுரிமை, working in retail sector தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3991

5. 34 வயது, 5'8", பிரித்தானிய நிரந்தர வதிவுரிமை, Financial analyst, working தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3993

6. 30 வயது, 5'8", PSW visa in UK, MSc பட்டதாரி, working in IT sector தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3994

7. 29 வயது, 5'6", Norway, Engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3995

8. 30 வயது, 5'5", Tier-2 work permit in UK பட்டதாரி, Working as financial controller தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3998

9. 29 வயது, 5'11", பிரித்தானிய பிரஜா வுரிமை, பட்டதாரி, IT professional தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4000

10. 42 வயது, 5'7", பிரித்தானிய பிரஜா வுரிமை, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4002

11. 29 வயது, 5'11", Separated, work pemit cancelled, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4005

12. 26 வயது, 5'10", Student visa in UK, Engineer, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4006

13. 25 வயது, 5'5",PSW visa in UK, Masters degree holder, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4010

14. 24 வயது, 5'8", Student visa in UK, studying in medical field தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref:4011

15. 31 வயது, 5'6", இத்தாலி, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref:4013

16. 22 வயது, 5'6", Asylum seeker in UK, Student தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4014

17. 33 வயது, 5'7", Holding Asylum visa in UK, Engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4015

18. 40 வயது, 5'6", UK born, Post graduate Doctor, working in UK தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3831

19. 40 வயது, 5'8", பிரித்தானிய பிரஜாவுரிமை, பட்டதாரி, working in Investment Banking தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 205

20. 42 வயது, 5'8", Divorced, பிரித்தானிய பிரஜாவுரிமை,PhD பட்டதாரி, தகுந்த மணமகளை தேடுகின்றனர் சுநக: 3487

21. 28 வயது, 5'6", 10 years visa in France தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3923

22. 33 வயது, 5'8", Swiss citizen, self employed தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3927

23. 39 வயது, 5'6", பிரித்தானிய பிரஜா வுரிமை, Divorced பட்டதாரி, working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 1684

24. 61 வயது, 6'1", German citizen, living in UK, Retired தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3958

25. 37 வயது, 5'6", Student visa in UK பட்டதாரி, CIMA & ACCA working as an Accountant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3961

26. 42 வயது, 5'4", பிரித்தானிய நிரந்தர வதிவுரிமை, Divorced, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3964

27. 42 வயது, 5'10", பிரித்தானிய பிரஜாவுரிமை, Engineer, Self employed, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3965

28. 37 வயது, 5'5", Asylum seeker living in uk for the past 10 years, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3968

29. 26 வயது, 5'7", பிரித்தானிய நிரந்தர வதிவுரிமை, working in a IT sector தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3970

30. 31 வயது, 5'11", Asylum seeker living in UK தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3973

31. 32 வயது, 5'10", பிரித்தானிய நிரந்தர வதிவுரிமைஇ பட்டதாரி, working as an IT consultant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3974

32. 31 வயது, 5'7", Work permit visa in UK, பட்டதாரி, Working as head chef in a restaurant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3975

33. 33 வயது, 5'7", Asylum seeker in France, working as Domestic Electrician தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3977

34. 30 வயது, 5'6", Student visa, பட்டதாரி, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3980

35. 33 வயது, 5'9", பிரித்தானிய பிரஜா வுரிமை, Working as a Manager in a shop தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3885

36. 46 வயது, 5'8", பிரித்தானிய பிரஜா வுரிமை, Divorced, Accountant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3422

37. 32 வயது, 5'9", பிரித்தானிய நிரந்தர வதிவுரிமை, Working in a shop தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3893

38. 23 வயது, 5'7", Student visa in UK, completed diploma in civil engineering and doing charted accountant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3899

39. 37 வயது, 5'7", பிரித்தானிய பிரஜா வுரிமை, Assistant manager in a shop, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3890

40. 28 வயது, 5'11", Student visa in UK, working in IT , தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3892

41. 29 வயது, 5'10",PSW visa, BSc and MBA holder, working in accounts field தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3901

42. 24 வயது, 5'6", Student visa in UK தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3907

43. 28 வயது, 5'2", Student visa in UK தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3910

44. 37 வயது, 5'4", பிரித்தானிய பிரஜாவுரிமை, Working as a team manager தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 1793

45. 43 வயது, 5'8", Asylum seeker, பட்டதாரி, MBA holder தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3856

46. 31 வயது, 5'6",PSW visa in UK, BA பட்டதாரி, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3857

47. 31 வயது, 5'7", பிரித்தானிய நிரந்தர வதிவுரிமை, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3866

## மணமகன் தேவை

1. 29 வயது, 5'2", பிரித்தானிய பிரஜாவுரிமை, பட்டதாரி, working in finance sector, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref:3382

2. 49வயது, 5'4" , Living in UK for 2 years, பட்டதாரி, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 656

3. 39 வயது, 5'3" , Born and brought up in UK, Scientist, working in Medical sector, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3986

4. 28 வயது, 5'2", இலங்கை, பட்டதாரி, Lecturer தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref:3996

5. 38 வயது, 5'8",USA citizen, Practicing Lawyer தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3997

6. 39 வயது, 5'4", பிரித்தானிய பிரஜாவுரிமை, பட்டதாரி, Working in pharmaceutical sector, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3999

7. 24 வயது, 5'2", இலங்கை, பட்டதாரி, Lecturer தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref:3942

8. 22 வயது, 4'10", இலங்கை, Student தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3513

9. 30 வயது, 5'2", பிரித்தானிய பிரஜா வுரிமை, பட்டதாரி, working in administrative service தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 1160

10. 35 வயது, 5'6", இலங்கை, பட்டதாரி, Working in Accountant sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 826

11. 38 வயது, 5'3", UK born, MSc பட்டதாரி, ஊடக நிறுவனமொன்றில் பணிபுரிபவர் தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 895

12. 40 வயது, 5'4", Work permit in UK, Doctor, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref:1232

13. 29 வயது, 5'2", Student visa in UK பட்டதாரி, studying MSc Bio Med தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3934

14. 23வயது, 5'3", Swiss citizen, Studying Batchelor degree தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3743

15. 30 வயது, 5'7", பிரித்தானிய பிரஜாவுரிமை, Completed Masters degree in Medicine, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 722

16. 25 வயது, 5'2", Born and brought up in UK, Accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3966

17. 35 வயது, 5'4", Born and brought up in UK, Doctor தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3967

18. 30 வயது, 5'7", French citizen living in UK பட்டதாரி, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3976

19. 29 வயது, 5'3", European citizen, MSc graduate, Chemist, working in UK, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3981

20. 33 வயது, 5'8", பிரித்தானிய பிரஜாவுரிமை, divorced, பட்டதாரி working as a Teacher தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3508

21. 34வயது, 5'8", Workpermit visa, Doctor தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3889

22. 38 வயது, 5'5", பிரித்தானிய பிரஜா வுரிமை,Part qualified ACCA, working as an assistant accountant, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 2660

23. 41 வயது, 5'2", Student visa in UK, பட்டதாரி, doing MSc in formulation science தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 899

24. 29 வயது, 5'1", பிரித்தானிய பிரஜாவுரிமை, பட்டதாரி, working in administrative service தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 1378

25. 25 வயது, 5'3", BSc degree in Mathematics and Statistic, living in uk for the past 10 waiting for a permanent visa தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 1243

26. 22 வயது, 5'0", இலங்கை, A/L Bio Science தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3732

27. 31 வயது, 5'2", அமெரிக்க பிரித்தானிய பிரஜாவுரிமை, Doctor, PhD qualified, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3855

28. 35 வயது, 5'6", அமெரிக்க பிரஜாவுரிமை, பட்டதாரி, Working in pharmaceutical company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3865

29. 27 வயது, 5'4", கனடிய பிரஜாவுரிமை,Computer degree holder தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3881

30. 34வயது, 5'4", பிரித்தானிய பிரஜாவுரிமை, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3841

31. 31 வயது, 5'4", பிரித்தானிய பிரஜா வுரிமை, Bio Chemist, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3793

32. 35 வயது, 5'5", பிரித்தானிய பிரஜா வுரிமை, Accountant, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3853

33. 28 வயது, 5'6", இலங்கை, பட்டதாரி, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3803

34. 26 வயது, 5'4", பிரித்தானிய பிரஜா வுரிமை, Accountant working in a company, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3260

35. 28 வயது, 5'2", இலங்கை, பட்டதாரி, Working in IT field, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3502

36. 22 வயது, 5'5", பிரித்தானிய பிரஜா வுரிமை, Working in medical sector, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3575

37. 29 வயது, 5'1", இலங்கை, Working for export firm in Sri Lanka, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3791

38. 27 வயது, 5'4", கனடிய பிரஜாவுரிமை, Doctor தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3800

39. 31 வயது, 5'3", PSW visa in UK, Masters degree holder, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3806

40. 29 வயது, 5'5", Work permit visa in UK, BSc, MBA degree holder, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3810

41. 26 வயது, 5'3", தென்னாபிரிக்க பிரஜாவுரிமை, Engineer தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3569

42. 24 வயது, 5'5", Denmark பிரஜாவுரிமை, பட்டதாரி, Working in Medical sector in UK தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3606

43. 36 வயது, 5'7", பிரித்தானிய பிரஜாவுரிமை, Finance sector இல் தொழில் புரிபவர் தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3573

44. 32 வயது, 5'5", Malaysian citizen, Masters in UK, Accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3763

45. 27 வயது, 5'8", பிரித்தானிய பிரஜா வுரிமை, பட்டதாரி, Medical sector இல் தொழில் புரிபவர் தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3359

46. 32 வயது, 5'2", பிரித்தானிய பிரஜா வுரிமை, பட்டதாரி, Medical sector இல் தொழில் புரிபவர் தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3772

47. Age 37, 5'2", British citizen working in a IT company looking for a suitable groom Ref: 3701

48. Age 28, 5'2", British citizen accountant looking for a suitable groom Ref: 1348

49. Age 32, 5'4", British citizen doctor looking for a suitable groom Ref: 3711

50. Age 25, 5'3", graduate working in a bank in srilanka looking for a suitable groom Ref: 3717

51. Age 31, 5'6", British citizen graduate working in a bank looking for a suitable groom Ref: 3365

52. Age 32, 5'1", graduate working as a accountant in a company in srilanka looking for a suitable groom Ref: 3739

53. Age 33, 5'2", graduate divorced student visa in uk looking for a suitable groom Ref: 3745

54. Age 24, 5'4",Student visa in UK, looking for a suitable groom, Ref no: 3687

55. Age 34, 5'4", British Citizen, Doctor, looking for a suitable groom, Ref no:3694

56. Age 37, height 5'5" Student visa looking for a suitable groom Ref: 3667

57. Age 27, height 5'6", Canadian citizen student looking for a suitable groom Ref no 3674

58. Age 30, height 5'5", Graduate Teacher in srilanka looking for a suitable groomRef no 3660

59. Age 23, height 5'8" British citizen, graduate working in a company looking for a suitable groom Ref: 3635

இணையத்தில் மேலதிக விபரங்கள்
www.orumanam.com

# தமிழ்த் திரைப்படங்களில்

## ஈழத்தமிழர் போராட்டச் சூழலின் வெளிப்பாடு

இவ்வாறான ஆய்வுகளின் போது, பெரும் பாலும் முதலில் பலியாவது கலைத்துவம். ஏனெனில், குறிப்பிட்ட தலைப்புடன் பொருந்திய விடயங்கள் எங்கு எப்படிக் காணப்படுகின்றன என்பதைத் தொகுப்பதே பொதுவாக நிகழ்கிறது. இத்தகைய செயற்பாடு எந்தளவிற்குச் சரி என்ற ஐயப்பாடு எனக்குண்டு. குறிப் பிட்ட விடயம் குறிப்பிட்ட கலை வடிவத் தில் வெளிப்படுவ திலுள்ள பிசிரற்ற தன் மைகள் - கலைத்துவம் - முக்கியமான தெனக் கருதுகிறேன். இது யாருடைய கலைத்துவம் என ஒருவர் கேட்டால், சமூக - அரசியல் தன்னுணர்வுடன் வடிவத்தின் அடிப்படை அம்சங்களைக் கணக்கிலெடுக்கும் அக்கறை கொண்டவர்களின் கலைத்துவம் எனப் பதில் சொல்லலாம்.

திரைப்பட வடிவத்தில் 'காட்சிரூப மொழியே' அடிப்படையானது. பேச்சிற்கு முதன்மை கொடுக்காது, காட்சி களால் கதை நிகழ்வுகள் சித்தரிக்கப்படுவதே முக்கியமானது. அதனைப் போல கதைச் சித்தரிப்பில் பாத்திரங் களின் இயக்கத்தில் யதார்த்தப் பண்பு அதாவது உண்மைத்தன்மை பேணப்படுவது இன்றியமையாததாகிறது. விடயமும் வெளிப்பாட்டு முறைகளும் இணைந்து, மனதில் பதிவை ஏற்படுத்தியவற்றுக்கு முக்கியம் அளித்துள்ளேன் இங்கு பேசப்படும் எல்லாப் படங்களும் வீடியோப் பிரதியாகவே பார்க்கக் கிடைத்தவையாகும். தமிழ் நாட்டுப் படங்கள் பெரிதும் வர்த்தக நோக்கிலேயே தயாரிக்கப்படுகின்றன. லாபம் பெறுவதே அவற்றைத் தயாரிப்பவர்களின் முதலும் முடிவுமான அக்கறை.

தற்போது, சுமார் ஏழு லட்சம் இலங்கைத் தமிழர் புலம்பெயர்ந்து பல்வேறு நாடுகளிலும் வாழ்வதாகச் சொல்லப் படுகிறது. இந்தப் 'பரந்த சந்தை'யை இலக்காகக் கொண்டே ஈழத் தமிழர் தொடர்பான விடயங்களைக் கொண்ட படங்களைத் தமிழ்நாட்டில் தயாரிக் கிறார்கள். ஈழத் தமிழர் மீது கொண்ட உண்மையான அக்கறையால் இவற்றைத் தயாரிக்கவில்லை. இதனாலேயே பிறழ்வான வெளிப்பாடுகள் பல காணப்படுகின்றன. எமது அடிப்படைப் பிரச்சனைகள் கோடி காட்டப்படுவது கூட நிகழ்வதில்லை. எவ்வாறாயி னும், 'காற்றுக்கென்ன வேலி' திரைப் படத்தை உருவாக்கிய புகழேந்தி தங்க ராஜ் போன்றோரின் நல் நோக்கத்தை - ஈழத்தமிழர் போராட்டத்தில் கொண்டுள்ள அனுதாப நிலைப்பாட்டைப் புரிந்து கொள்கிறேன் தமிழ்நாட்டுத் 'திரை வியாபாரிகளி'லிருந்து அவரை வேறுபடுத்திப் பார்ப்பதால், அவரது முயற்சியை நான் கொச்சைப்படுத்த வில்லை. ஈழத்தமிழர் போராட்டச் சூழலோடு தொடர்பான அம்சங்களைக் கொண்டவையாக சில படங்கள் கவனத்தில் வருகின்றன.



### கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன்

மிகச் சிறிய தொரு அம்சமே ஈழம் பற்றியதாகச் சித்தரிக்கப்படுகிறது. முன்பு இலங்கையில் - வன்னியில் நடை பெற்ற போராளிகளின் தாக்குதலில் ஒரு கால் ஊனமுற்ற இந்திய அமைதிப் படை மேஜராக, மம்முட்டியின் பாத்திரம் உருவாக்கப்பட்டுள்ள போராளிகளின் திடீர்த் தாக்குதல் காட்டப்படுகிறது.

பின்னர் ஒரு கட்டத்தில் அந்த மேஜர் கசப்புடன் சொல்கிறார். 'ஆயிரத்து ஐநூறு பேர் கொல்லப்பட்டார்கள். இங்கு ஒரு நினைவுச் சின்னம் இருக்கா' சென்னைத் துறைமுகத்தில் நாங்க கால்வச்சப்போ யாருமே கண்டுக் கல்ல. அப்பதான் தோணிச்சு - யாருக்காக, எதுக்காக இந்தச் சண்டை? எல்லாமே வேஸ்ட்.....?

அமைதிப்படையின் இழப்பு, தமிழகத்தில் அவர்கள் மீது காட்டப்பட்ட வெறுப்புடன்கூடிய அலட்சியம், இலங்கையில் இந்தியத்தரப்புச் சண்டையின் அர்த்தமின்மை என்பன இதனூடாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன. சிறுபகுதியேயாயினும் மம்முட்டியின் நடிப்பினால் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

### நந்தா

இப்படத்திலும், யுத்தச்சூழலில் தப்பி வந்த தனுஷ்கோடிப் பகுதி மணற்றிடரில் மணல்திடலில் இறக்கிவிடப்படும் இலங்கைத்தமிழ் அகதிகள்- அவர்கள்மீது இராமநாதபுரம் அரச பரம்பரையைச் சேர்ந்த ஒருவர் காட் டும் அக்கறை என்பன, சிறுபகுதியாகவே இடம் பெறுகின்றன. கதாநாயகி இலங்கை அகதிப் பெண்ணாக உருவாக்கப்பட்டுள்ள போதிலும் அகதிமுகாம் வாழ்க்கை - இலங்கை அகதிகள் அவலம் என்பன விபரமாகவோ, சரியாகவோ சித்தரிக்கப் படா மல், வழமையான 'தமிழ்ப்பட மசாலாத் தனங்களினுள்' கரைந்து போயுள்ளன. ஈழத் தமிழர் பிரச்சினையைத் தொடு வது போன்ற 'பாவனையே' இதில் மிஞ்சுகிறது.

### கன்னத்தில் முத்தமிட்டால்

முந்தைய இரு படங்களைப் போலல் லாது இப்படம் கூடுதலாக ஈழத்துடன் தொடர்புபடுகிறது. 1991ல் படகு மூலம் இராமேஸ்வரத்தில் அகதியாக வந்திறங்கி, (இதற்காகவே வந்தவள் போல்!) பெண் குழந்தையைப் பிரசவித்துவிட்டு இலங்கை திரும்பிவிட்ட ஒரு பெண் ஷியாமா. அந்தக் குழந்தையின் வளர்ப்புத் தந்தையும் தாயும் குழந்தையின் வற்புறுத்தலால் - எட்டு ஆண்டுகளின் பின் கொழும்பு வழியாக இலங்கை வருவதும், மாங்குளத்தில் தற்போது போராளியாகவுள்ள தாயைச் சிறுமி சந்திப்பதுமாக, வேறு இடைநிகழ்வுகளுடன் கதை பின்னப்பட்டுள்ளது. இந்த உயர் பிராமணிய ஆளும் வர்க்கத்தின் ஆதிக்க அரசிய லுக்குச் சார்பாக காஷ்மீர், அஸ்ஸாம் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டங்களை முறையே 'ரோஜா', 'உயிரே' ஆகிய படங்களில் 'பயங்கரவாதமாக' கொச்சைப்படுத்திய அதே மணிரத்தினம் தான் இந்தப் படத்தில் 'ஈழத்தின் யதார்த்தத்தையும், போராட்டத்தையும் கொச்சைப்படுத்தியுள்ளார். குறைந்த பட்சம் ஈழத்தமிழரின் அரசியல் அபிலாசைகள் என்னவென்பதைக் கோடி காட்டக்கூட அவர் முயலவில்லை! சிறுமி தாயைக் காணவேண்டுமென் பதுதான் முக்கிய பிரச்சனை போல் போர்ச் சூழலில் காட்ட முனைந்தமை வலுவற்றது. ஈழத்தமிழர் போராட்டத் திற்கு எதிரான சித்தரிப்புகள் 'நுட்ப மாக' புகுத்தப்பட்டுள்ளன. கதையில் வரும் தமிழ் நாட்டுத் தம்பதி, அவர்களின் சிங்கள நண்பன் எல்லாம் நல்லவர்கள்? ஆனால் போராளிகள் கெட்டவர்கள் - கொடுமைக்காரர்கள். தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் சிறுமி அமுதா காயப்படுகிறாள். போராளிகளின் திடீர்த் தாக்குதலின் இடையில் அகப்பட்டு வளர்ப்புத்தாய் காயப்படுகிறாள். கறுப்பு நிறப்பெண் போராளிகளைக்கண்டுதான் அமுதா பயப்படுகிறாள். மாங்குளத்தில் மக்கள் இடம் பெயரும் போது இராணுவம் துன்புறுத்துதலில் ஈடுபடாது நல்லதனத்துடன் நடந்துகொள்கிறது ஆனால், போராளிகள் தான் ஷெல் அடித்து மக்களை 'அல்லோலகல்லோலத்திற்கு' உள்ளாக்குகின்றனர்! தமிழ்நாட்டு எழுத்தாளக் கதாநாயகனையும் சிங்கள நண்பனையும் பிடிக்கும் போது போராளிகள் முரட்டுத்தமாய் நடந்துகொள்வதாய்க் காட்டப்படுகின்றனர். அப்போது அதற்கு எதிராகக் கதாநாயகன்,

*'எங்களை நீங்கள் ஆண்டு நடத்துக*
*எங்களை நீங்கள் வண்டியிற் பூட்டுக*
*எங்கள் முதுகில் கசையால் அடிக்க...'*

என்று சில கவிதைவரிகளை உரத்தகுரலில் சொல்கிறான். உண்மையில், ஈழத்தின் முக்கிய கவிஞர் சண்முக சிவலிங்கம், இலங்கை அரசின் அடக்குமுறைச் சக்திகளிற்கு எதிராக எழுதிய கவிதை வரிகளைப் போராளிகளிற்கு எதிராகப் பாவிக்குமளவிற்கு, வக்கிரப்புத்தியுடனும் குயுக்தியுடனும் மணிரத்தினம் செயற்பட்டுள்ளார்.


மாங்குளத்தில் மலைகள் இருப்பது, 1999ல் மாங்குளத்தில் சிங்களக் குடும்பம் இருப்பது, மின்சாரம் - வெளி நாட்டுடன் தொடர்பு கொள்ளும் வகையிலான தொலைபேசித் தொடர்பு வசதி இருப்பது போன்ற (இன்னும் பல) சித்திரிப்புகள், ஈழப் போராட்டக் களம் பற்றிய மணிரத்தினத்தின் 'அறியாமை'யையே வெளிப்படுத்துகின்றன. இந்திய-இராமேஸ்வர சூழலில் காட்சி ரூப வெளிப்பாடுகள் அழகிய சட்டங்களில் நன்றாக அமைந்துள்ளபோதிலும், பிற்போக்கான எதிர்ப்புரட்சிகர அம்சங்களை அடிப்படையாகக் கொண்டிருப் பதில் எரிச்சலும் கோபமும் மேலோங்குவதில், அந்த காட்சிரூபப் படுத்தல் களின் சிறப்பும் சந்தோஷமும் நசுங்கிப் போய்விடுகின்றன.

அ.யேசுராசா




Meera Arnold & Co
for all your accounting needs...
Accountancy
Auditing
pay roll
book keeping
company formation
45 Chandos Ave, N14 7ES, Tel: 020 8882 2333



Affordable IT Support services for Businesses and medium size Companies

உங்கள் கொம்பியூட்டர் பிரச்சனைகளை நாங்கள் கவனித்துக் கொள்ள... கவலைகளை மறந்து உங்கள் வியாபாரத்தில் வெற்றியடையுங்கள்.
FREE Consultation
Hassle free option
Call us on
020 7043 4318
Do what you're best at = Business
We are best at = IT support
IT SUPPORT
let us look after it.

# தாயம் விழுந்த கதை....

*ஒரு இயக்குநர் அடையாளம் காணப்படுவது அவரது முதல் படத்தை வைத்து தான். இங்கு சில பிரபல இயக்குநர்கள் தங்களுக்கு முதல் படவாய்ப்பு கிடைத்தது எப்படி என்பதை பகிர்ந்து கொள்கின்றனர்...*



உலகத்தை, மனிதர்களை வேடிக்கை பார்ப்பது என்பது எனக்கு பிடிக்கும். ஷூட்டிங் இல்லாத நாள்களில் பாக்கெட்டில் இருக்கும் காசை பொறுத்து என் பயணங்கள் அமையும் கடற்கரை, கோவில் வாசல்கள், ரயில்வே ஸ்டேஷன், அரசு மருத்துவமனையின் பிணவறை என எங்கும் சுற்றித் திரிவேன். அப்படி நான் பார்த்து மனதில் இப்போதும் அப்பிக் கிடக்கும் காட்சிகள் நிறைய... அப்படித் தான் ஒருநாள் என் பயணம் ஏர்வாடிக்குச்சென்றது.உடம்பெல்லாம் அழுக்கேறி, சங்கிலியால் பிணைக்கப்பட்டு, கண்களில் ஒளியிழந்து கிடந்த சக மனிதனை பார்த்த நிமிடம்ரொம்பதுயரமானது.பல இரவுகள் தூக்கத்தை கலைத்த காட்சி அது. முதல் படத்துக்கானகதையும் எனக்கு அப்போது உருவானது. தீராத காதல் கொண்டஒருவனின் வாழ்க்கை, ஏர்வாடியில் பார்த்த சக மனிதனிடம் இருந்தால்!? அதே தான் கதை அதோடு என் வாழ்க்கையில் நடந்த சிலவிஷயங்களை இணைத்து திரைக்கதையாக்கி விட்டேன். அது தான் 'சேது'. கிட்டத் தட்ட மூன்று நிறுவனங்களுக்குகதை சொல்லி, நான்காவதாக வந்தவர் தான் தயாரிப்பாளர் கந்தசாமி.. விக்ரம் மூன்றாவது ஹிரோ. இப்படித் தான் என் முதல் படமான 'சேது' உருவானது.




ஒரு சம்பவம் அதைத் தொடர்ந்த பின்னணி சம்பவங்கள் தான் என் முதல் சினிமாவின் கதை என முடிவெடுத்து விட்டேன். ஒரு சின்ன சம்பவத்தின் பின்னணியில் கொஞ்சம் காதல், நிறைய ஆக்ஷன் வைத்து திரைக் கதையை அமர்க்களமாக முடிக்க வேண்டும் என்பது தான் திட்டம். யாரிடமும் சொல்லவில்லை. இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக கதை சொல்லப்படாமலேயே இருந்தது. பாலுமகேந்திரா சாரிடம் 'அது ஒரு கனாகாலம்' படத்தில் வேலை பார்த்து கொண்டிருந்தேன். அப்போது அதில் நடித்துக் கொண்டிருந்த தனுசின் நட்பு கிடைத்து. 'ஒரு கதை இருக்கு கேட்குறீங்களான்னு கேட்டேன்.ரெண்டு நாள் கழிச்சுக் கேட்கலாம்' என்றார். ரொம்பவே சந்தோஷம். சொன்ன படியே நேரம் ஒதுக்கிக் கதை கேட்டார்.' சில தயாரிப்பு நிறுவனங்களுக்கும் சிபாரிசு செய்தார். ஆறு நிறுவனங்களைக் கடந்து கடைசியாக வந்தவர் தான் தயாரிப்பாளர் கதிரேசன். திவ்யாஸ்பந்தனா, யுவன்ஷங்கர்ராஜா, வேல்ராஜ், கிஷோர், டேனியல் பாலாஜி என நல்ல டீம் அமைய,என்முதல் படம் 'பொல்லாதவன்' தொடங்கியது.



சினிமாவுக்கென சென்னை வந்தேன். ஆனால் சினிமாவுக்குள் இல்லாமலேயே பத்து வருடங்களை கழித்து விட்டேன். பின்னர் இயக்குநர் எஸ்.டி. சபா, அதனைதொடர்ந்து இயக்குநர் எழில் ஆகியோரிடம் உதவியாளராக சேர்ந்து சினிமா கற்றேன். தனியாக நின்று சாதிக்க வேண்டிய கட்டாயம். முதலில் கதை வேண்டும். தேடிப்பார்த்தால் கிடைக்காத கதையா? தேடுதல் இருந்தால் போதுமே?' ஊரின் ஞாபகங்களை கிளறி விட்டு நண்பனுடன் பேசிக் கொண்டிருந்த நேரம் அது, கிடைத்தது கதை.என் அப்பா கபடி வீரர். 'வெண்ணிலா கபடிகுழு' என்ற பெயரில் செயல்பட்ட அணியில் எங்கள் அப்பாவுக்கு முக்கிய பங்கு இருந்தது. கபடி பற்றிய அனுபவங்களை என்னிடம் அவர் கிராமத்து நாள்களில் அவ்வப்போது பகிர்ந்து கொள்வார்.அதையே கதைக் களமாக்கினால் என்னவென்று தோன்றியது. விஷ்ணு, அப்புக்குட்டி, இன்னும் சில சினிமாவில் சாதிக்க காத்திருந்தவர்களை அழைத்துகதை சொன்னேன். பல நிறுவனங்களுக்கு கதை சொன்னேன். இறுதியாக தயாரிக்க வந்தவர் ஆனந்த் சக்ரவர்த்தி. நல்ல சினிமாவை நேசிப்பவர். கை கொடுத்து அவர் தான் தூக்கி விட்டார். ஆரம்பித்தது என் முதல் படமான 'வெண்ணிலா கபடிக் குழு'வின் ஆட்டம்!



பிரியதர்ஷன் சாரிடம் உதவியாளராக இருந்தேன். அதன் பின் நிறைய விளம்பரப் படங்களை இயக்கக் கூடிய வாய்ப்பு வந்தது. அது நல்ல அனுபவமா க இருந்துது. அந்த அனுபவத்தில் இருந்து தான் முதல் படக்கதையை எடுத்தேன். எப்போதும் கலகலப்பாக இருக்கும் மனிதர்களின் பக்கங்களை எடுத்து வைத்தால் நன்றாக இருக்கும் என தோன்றியது. அவ்வாறே ஒரு திரைக் கதைதயார் செய்தேன். ஆனால் எந்த நிறுவனத்திடம் அதைச் சொல்லி ஓ.கே. வாங்குவது எனத் தெரியவில்லை. ஏனென்றால் என் அப்பாவே பெரிய தயாரிப்பாளர். அந்தசமயத்தில் அவர் படத் தயாரிப்பில் இருந்து கொஞ்சம் விலகி இருந்தார்.அப்பாவுக்குசிபாரிசு செய்ய பிடிக்காது. முதல் கதை துதான் என்று முடிவில் இருந்துக் கொண்டே, விளம்பரபடங்களை இயக்கி கொண்டிருந்தேன். அப்போது தான் பிரியதர்ஷன் சாரிடமிருந்து அழைப்பு. 'என்னசெய்கிறாய்..' என்று விசாரித்து விட்டு, 'சினிமாவுக்கு சீக்கிரம் வந்து விடு, இல்லையென்றால் விளம்பர உலகமே உனக்குப் பிடித்துப் போய் விடும்' என அதிர்ச்சியூட்டினார். அப்போது தான் 'கதை ரெடி' என்றேன். 'விரைவில் சென்னைக்கு வருகிறேன். நானே கதை கேட்கிறேன்' என்றார். கேட்டவுடன் அவருக்கு மிக்க மகிழ்ச்சி.' தானே தயாரிக்கிறேன் என்றார். ஆரம்பித்தது என் முதல் படமான 'பொய்சொல்லப்போறோம்'.



நீண்ட பயணம் அது. பாலுமகேந்திரா, சீமான் ஆகியோரிடம் நான் உதவியாளராக இருந்து சினிமா பயின்று, விளம்பரப் படங்களை இயக்கிவந்தேன். எந்தப் படைப்பாளிக்கும் முதல் வாய்ப்பு என்பது நீண்ட போராட்டத்துக்குப் பின்பு தான் கிடைக்கும். நானும் அதற்கு விதி விலக்கு அல்ல. முதல் படம் எனும் போதே எந்த மாதிரியான கதையை உருவாக்கி கவனத்தை ஈர்க்கலாம் என்ற யோசனை. நீண்ட யோசனைக்குப்பின் உருவான கதைதான் 'கூடல்நகர்'.

ஒரு தயாரிப்பு நிறுவனத்துக்கு கதை சொல்லி, அந்த நிறுவனம் ஓ.கே.சொல்லி, படத்துக்கு இளையராஜா இசையமைப்பை விரும்பியது. எனக்கும் அதுதான் ஆசை. முதல் படத்துக்கு இளையராஜா இசை என்றால் எப்படியிருக்கும் படத்துக்கு பாதிபலம் கிடைத்து விட்ட மகிழ்ச்சி. இளையராஜாவிடமிருந்து சூழலுக்குத்தகுந்த ஐந்து டியூன்களும் தயாராகிவிட்டன. ஆனால் அந்தத் தயாரிப்பு நிறுவனம் படத் தயாரிப்பைக் கைவிடவே, அடுத்து ஜி.ஏ.என்ற கம்பெனி. அதுவும் அப்படியே ஆகிவிட்டது. சபிக்கப்பட்ட மனிதனாக உலாவந்த கொடுரமானநேரம்அது. அதன் பின் தான் 'அண்ணாமலை பிலிம்ஸ்' நிறுவனம். 'காதல்' படத்துக்கு முன்பே பரத்-சந்தியா தான் இந்தப்படத்துக்கு தேர்வாகி இருந்தார்கள். இளையராஜா போய் சபேஷ் முரளி வந்தார்கள். இது தான் என் முதல் படமான 'கூடல்நகர்' உருவான கதை.

*-சினிமா நண்பன்*

## திரை விமர்சனம்

# Avengers Assemble



உலகின் மிக விரும்பப்பட்டுப் படிக்கப்படும் நான்கு சூப்பர் ஹிரோக்கள். அவர்களின் ஆற்றலுக்கு ஈடுகொடுக்கக்கூடிய ஒரு வில்லன், இந்த சூப்பர் ஹிரோக்களைக் கட்டி மேய்க்கும் ஆற்றல்வாய்ந்த அதிகாரி ஒருவர். ஒவ்வொரு சூப்பர்ஹிரோவுக்கும் உள்ள பிரச்னைகள். இந்த விஷயங்களை வைத்துக்கொண்டு, ஹாலிவுட்டின் அரதப்பழைய ஃபார்முலாவான அமெரிக்க அழிவு - அதை ஹிரோக்கள் காப்பாற்றுதல் என்ற வீக்கான கதையை ஒப்பேற்ற முடியுமா? அதுவும், இதுவரை காமிக்ஸ் ஹிரோக்களை வெற்றிகரமாகத் திரையில் காட்டியிருக்கும் ஸாம் ரெய்மி, க்ரிஸ்டோபர் நோலன்போன்ற பெரிய கை எதுவும் இல்லாமல், சாதாரண இயக்குநர் ஒருவரால்? முடியுமென்று நிரூபித்திருக்கிறார் இயக்குனர் Joss Wheadon.

படத்தின் கதையைப் பார்ப்போம். 'Thor' படத்திலேயே, பட இறுதியில், ஒரு பெட்டியை நிக் பியூரி, விஞ்ஞானி ஸெல்விக்கிடம் அளித்து, அதனை ஆராயச் சொல்லும் காட்சி நினைவிருக்கிறதா? இந்தக் காட்சிதான் அவெஞ்சர்ஸ் படத்தின் கதைக்கு ஒரு கரு. அவெஞ்சர்ஸ் படத்தின் கதை நடைபெறும் காலத்தில், அந்தப் பெட்டியில் உள்ளதை எடுத்து ஆராய்ந்து, அது என்ன என்றும் கண்டுபிடித்தாகிவிட்டது.

ஆங்கிலத்தில் Tesseract என்ற வார்த்தைக்கு, நாற்பரிமாண கனசதுரம் என்று அர்த்தம். வழக்கமான முப்பரிமாண கனசதுரத்தை, Cube என்று அழைப்போமல்லவா? இருபரிமாண சதுரத்தை Square என்று அழைப்போம். இப்படி சதுரத்துக்கு ஒருபரிமாணம் அதிகரித்தால் அது க்யூப். க்யூபுக்கு ஒருபரிமாணம் அதிகரித்து, அது நாற்பரிமாணமுள்ள வஸ்துவாக மாறினால் அது Tesseract . இப்படிப்பட்ட டெஸ்ராக்ட் ஒன்று, விஞ்ஞானி ஸெல்விக்கால் கண்டு பிடிக்கப்படுகிறது. ஆனால், தற்போது, இந்த டெஸராக்டை கட்டுப்படுத்த முடிவதில்லை. அது ரியாக்ட் செய்கிறது. அப்படியொரு நாள், அதிலிருந்து பீறிப்பாயும் எனர்ஜியால், அஸ்கார்ட் கிரகத்தைச் சேர்ந்த தோரின் அண்ணன் லோகி வெளிப்படுகிறான். S.H.I.E.L.D அலுவலகத்தில் உள்ள அத்தனை பேரையும் செயலிழக்கச் செய்து, அந்த டெஸராக்டையும் எடுத்துக்கொண்டு, கூடவே ஏஜெண்ட் மற்றும் விஞ்ஞானி ஸெல்விக் ஆகியவர்களை மனம் மாற்றி, தன்னுடனே அழைத்துச்சென்றுவிடுகிறான். ஏனெனில் தோர் படத்தின் இறுதிக்காட்சியில், அஸகார்டிலிருந்து தூக்கியெறியப்பட்டுவிடும் லோகி, மற்றொரு கிரகத்தைச் சேர்ந்த வில்லன் குழு ஒன்றைப் பார்க்க நேர்கிறான். அவர்களின் லட்சியமே, விண்வெளியில் இருக்கும் அத்தனை கிரகங்களையும் கைப்பற்றுவதே.. இவர்களுடன் இணைகிறான் லோகி. இந்த Tesseract அவர்களுக்குத் தேவை. ஏனெனில், அதனை உபயோகித்தால், எந்த கிரகத்துக்கும் ஒரு பாதை ஏற்படுத்தலாம். இந்தப் பாதையின் வழியே தங்கள் படைகளை அனுப்பி, அந்த கிரகத்தை கைப்பற்றலாம். அந்த வகையில் பூமிக்கு வரும் மர்மக் கிரகத்தில் இருந்தும் வேற்றுக் கிரக வாசிகளிடம் இருந்து பூமியைக் காப்பாற்ற நிக் பியூரியிடம் இருக்கும் ஒரே நம்பிக்கை பூமியின் சூப்பர் ஹிரோக்களை ஒன்று திரட்டுவதே. இந்த அத்தனை ஹிரோக்களுக்கும், இந்த டெஸரக்டுடன் அனுபவம் இருக்கிறது. பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியில் அவர்களை ஒன்று திரட்டும் நிக் கடைசியில் வேற்றுக் கிரக வாசிகளை எவ்வாறு இராணுவத்தின் சிறு அளவிலான துணையுடன் எதிர்கொண்டார் என்பது தான் கதை.

வழக்கம்போல C.G உதவியுடன் மிகப்பிரமாண்டமாகவந்திருக்கும் இப்படத்திற்கு காமிக்ஸ் புத்தக இரசிகர்களிடமிருந்த வந்த ஏராளமான எதிர்பார்ப்பை இயக்குனர் பூர்த்தி செய்திருக்கிறார் என்றே சொல்லலாம்.

*- கிறுக்கல்கள் இணையம்*

LWA Training Centre *Skills for Life Skills for Work....*

ESOL with British Citizenship
Book keeping Courses
Award for Personal License Holder (APLH)
SIA Door Supervisor Course
Pass Driving Theory with ESOL
sage Payroll Training Courses, Seminars & Workshops
Premises Licence Court Appeal
Food & Hygiene Certificate
Education Training Skills
Premises Licence Applications
Health and Safety Course

LONDON WIMBLEDON ACADEMY

NATIONWIDE TRAINING
Call us for your nearest locations
Call 020 3405 1887
www.wimbledononacademy.co.uk

EASTHAM
Tamil Sangam, 369 High Street, London E12 6PG

TOOTING BROADWAY
Trident Business Centre, 89 Bickersteth Road, London SW17 9SH

திரைவிமர்சனம்



# லீலை

*நடிகர்கள்: சிவ், சந்தானம், மானசி*

*ஒளிப்பதிவு: வேல்ராஜ்*

*இசை: சதீஷ்*

*இயக்கம் : ஆண்ட்ரு*

கார்த்திக் காலேஜ் நாட்களில் ஏராளமான பெண்களுடன் கடலை போடுவதில் மன்னன். கருணை மலர் என்கிற கல்லூரிப் பெண்ணிடம் போன் பேசும் போதே கடலைப் போடும் நேரத்தில் சண்டையாகி பிரிந்தவர்கள். இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்ததில்லை. சில வருடங்கள் கழித்து இருவரும் ஒரே கம்பெனியில் வேறு வேறு பிரிவில் வேலை செய்ய மீண்டும் ஒரு குழப்ப தருணத்தில் மலருக்கு தவறுதலாய் போன் போட்டுவிட, மீண்டும் சண்டை. பின்பு ஒரு நாள் மலர் யாரென கார்த்திக் பார்த்துவிட, அவளின் அழகில் மயங்கி காதலிக்க ஆரம்பித்துவிடுகிறான். எங்கே கார்த்திக் என்று சொன்னால் தன்னை வெறுத்துவிடுவாளோ என்று தன்னை சுந்தர் என்று அறிமுகப்படுத்திக் கொள்கிறான். காதலும் செய்கிறான். ஒரு கட்டத்தில் அவள் மீதான காதலின் காரணமாய் என்ன காரணம் என்று சொல்லாமல் ஆனால் உன்னை நான் ஏமாற்றுகிறேன். அது எனக்கு பிடிக்கவில்லை என்று பிரிகிறான். கார்த்திக்கும், சுந்தரும் ஒருவர் தான் என்ற உண்மை மலருக்கு தெரிந்ததா? அவர்கள் இருவரும் ஒன்று சேர்ந்தார்களா? என்பதுதான் கதை. அதை மிக சிம்பிளாய் சுவாரஸ்யமாய் தர முயற்சித்திருக்கிறார்கள்.

கார்த்திக்காக புது முகம் ஷிவ் பண்டிட். நல்ல மென்பொருள் துறை இளைஞனுக்கு சரியான பொருத்தம். முடிந்தவரை இயல்பாய் நடக்க முயற்சி செய்திருக்கிறார். கருணைமலராய் மானசி பரேக். சட்டென மனதில் ஒட்டிக் கொள்ளும் முகம். மிக க்ளோசப்பில் மட்டும் கொஞ்சம் உதட்டோரத்தில் ஒரு மாதிரியாய் இருக்கிறார். சாப்ட்வேர் பெண்ணுக்கான சரியான தெரிவு. காதல் வயப்படும் போதான சில சின்னச் சின்ன தயக்கங்கள் என்பவற்றை அருமையாக வெளிப்படுத்தியிருக்கிறார். இவர்களைத் தவிர சுஜா கேரக்டரில் இருவருக்குமான பொதுவான நண்பியாய் வரும் சுஹாசினி ராஜ். மிக இயல்பாக நடித்திருக்கிறார். இவர்களுடன் நம்ம சந்தானம். தனி ட்ராக் என்று போட்டிருந்தாலும் ஆங்காங்கே கலகலக்க வைக்கிறார். வேல்ராஜின் ஒளிப்பதிவு நச். ஒரு சிட்டி சென்ட்ரிக் காதல் படத்துக்கு என்ன விதமான ஒளிப்பதிவு தேவையோ அதை சரியாக கொடுத்திருக்கிறார். மனதை வருடும் மென்மையான பின்னணிகள். அழகாய் பெயிண்ட் அடிக்கப் பட்ட பாண்டிச்சேர் தெருக்கள் என்று கதைக்கு கொடுக்க வேண்டியவற்றை சரியாய் கொடுத்திருக்கிறார். இசை சதீஷ் சக்ரவர்த்தி. மூன்றோ அல்லது நான்கு பாடல்கள் தான். ஒரே ஒரு பாட்டைத் தவிர பெரிதாய் தெரியவில்லை. அதுவும் இரண்டாவது பாதியில் பாடல் தான் பெரிய வேகத்தடையே. பின்னணியிசையில் நன்றாக செய்ய முயற்சித்திருக்கிறார்.

எழுதி இயக்கியவர் ஆண்ட்ரு லூயிஸ். ஒரு அழகான ஆங்கில பட பாணி ரொமாண்டிக் படத்தை கொடுக்க செய்து முயற்சியில் வென்றிருக்கிறார் என்றே சொல்ல வேண்டும். சுஜா கேரக்டரை வைத்து ஆடும் ஆட்டம் சுவாரஸ்யம். ஆனால் சட்டென அவர்களின் காதலில் ஒன்ற முடியாத வகையில் திரைக்கதை ஆங்காங்கே நொண்டியடிப்பதை தவிர்க்க முடியவில்லை. கார்த்திக் தன்னை யார் என்று வெளிப்படுத்தாமல் மலரிடம் ஏமாற்றும் போது எங்கே மாட்டிவிடுவானோ என்ற பதைப்பதைப்பை ஏற்படுத்துவதற்காக சில சுவாரஸ்ய முடிச்சு சீன்களை வைத்திருந்தாலும் இன்னும் கொஞ்சம் கூடுதலாகச் செய்திருக்கலாம் என்று தோன்றுகிறது.

அதே போல ரெண்டாவது பாதி கொஞ்சம் பாட்டு, திரும்பத்திரும்ப வரும் ஒரே மாதிரி காட்சிகள் என்று அமைத்திருப்பதும், என்னதான் ஆளை பார்க்காவிட்டாலும் குரலை வைத்து கண்டுபிடிக்க முடியாதா? என்பது போன்ற சில பல லாஜிக் ஓட்டைகள் இருக்கத்தான் செய்கிறது. ஒரு வேளை ஓரளவுக்கு அறிமுகமான நடிகரை கதாநாயகனாய் போட்டிருந்தால், கார்த்திக் செய்யும் தில்லு முல்லுகள் இன்னும் சுவாரஸ்யமாய் இருந்திருக்குமோ?

மொத்தத்தில் இது ஒரு Feel good love movie.

*- கேபிள் சங்கர்*

# சினித்துளி

## வருத்தப்படாத வாலிபர் சங்கம்!



இந்தியில் வரவேற்பை பெற்ற 'டெல்லி பெல்லி' படத்தின் தமிழ் ரீமேக் விரைவில் தொடங்குகிறது. 'டெல்லி பெல்லி' வரவேற்பை பெற்றதில் இருந்தே தமிழ் ரீமேக்கில் தற்போது நடிக்கப் போவது யார்? இயக்கப் போவது யார்? என்பது குறித்த பல்வேறு தகவல்கள் வெளியாகி வந்தன. இந்நிலையில் 'டெல்லி பெல்லி' படத்தில் இம்ரான் கான் நடித்த பாத்திரத்தில் நடிக்க ஒப்பந்தமாகி இருக்கிறார் ஆர்யா. விர் தாஸ் பாத்திரத்தில் சந்தானம் ஒப்பந்தமாகியிருக்கிறார்.

இப்படத்திற்கு 'சேட்டை', 'வருத்தப்படாத வாலிபர் சங்கம்' மற்றும் 'வை ராஜா வை' என்கிற மூன்று தலைப்புகளை வைத்திருக்கிறார்களாம்....

## தயாராகும் 'புலிகேசி-2'!



தமிழ் சினிமாவின் மறக்கமுடியாத காமெடிப் படங்களில் ஒன்றான இம்சை அரசன் 23-ம் புலிகேசியின் அடுத்த பாகத்துக்கான வேலைகள் ஆரம்பமாகியுள்ளன. முதல் பாகத்தை இயக்கிய சிம்புதேவன்தான் இந்தப் படத்தையும் இயக்குகிறார். அரசியல் மாற்றங்களுக்குப் பிறகு எந்தப் படத்திலும் நடிக்காமலிருக்கும் வடிவேலு, தனது புதிய இன்னிங்ஸை இந்தப் படம் மூலம், அதுவும் ஹிரோவாகத் தொடங்கவிருக்கிறார். என்னதான் இருந்தாலும் அரசியல் பிரச்சினை சும்மா விடுமா அவரை.....

## 'ரீ ரிலீஸ்' காலம்!!



தமிழ் சினிமா உலகில் இது ரீ ரிலீஸ் காலம் போல. கர்ணன், குடியிருந்த கோவில் என அந்தக் காலத்து சூப்பர் ஹிட் படங்கள் புதிய தொழில் நுட்பத்துடன் அடுத்தடுத்து ரீ ரிலீஸ் செய்யப்பட்டு வருகின்றன. இதற்கு ரசிகர்களிடையே பெரும் வரவேற்பு கிடைத்துள்ளது. அந்த வகையில் கமல்- ரஜினி நடித்த நினைத்தாலே இனிக்கும் படமும் விரைவில் ரீ ரிலீஸ் செய்யப்பட உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. ஏற்கனவே சிவாஜியின் கட்டபொம்மனும் 3யில் தயாராகிறது.

புதுப்படம் எடுத்து அதை வெளியிட்டு லாபம் பார்ப்பதை விட பழைய வெற்றிப் படங்களை தூசு தட்டி லாபம் பார்ப்பது சுலபம் தானே......

## மகனே வில்லன்!!



இன்றைய இளம் இயக்குனர்களுக்கு போட்டியாக ஒரு எதிர்பார்ப்பை மக்களிடம் உருவாக்குவதில் யாருக்கும் சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபித்துக் கொண்டிருக்கிறார்கள் பாரதிராஜாவும், மணிரத்னமும். ஒரு புறம் கடல் படப்பிடிப்பில் பிசியாக இருக்கிறார் மணிரத்னம். தேனி பகுதியில் அன்னக்கொடியும் கொடிவீரனும் படப்பிடிப்பில் இருக்கிறார் பாரதிராஜா. பாரதிராஜா படத்தை பொறுத்தவரை சிற்சில மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாம்.

படத்திலிருந்த அமீரை நீக்கி இனிமேல், தனது மகன் மனோஜ் பாரதியை படத்தில் நுழைத்திருக்கிறாராம் இயக்குனர். ஆச்சர்யம் என்னவென்றால் மகனை ஹிரோவாக அறிமுகப்படுத்திய அதே பாரதிராஜாதான் இந்த படத்தில் மனோஜை வில்லனாக்கியிருக்கிறார்.

எல்லாளன் இப்பொழுது உங்கள் அருகாமையில்..

ELLALAN SUPER MARKET



- Off Licence
- மீன் வகைகள்
- பலசரக்கு வகைகள்
- இறைச்சி வகைகள்
- இலங்கை, இந்திய மளிகைப் பொருட்கள்
- மரக்கறி வகைகள்

020 8681 7485
Group of Spice Land
234-236, London Road, Croydon CRO 2TF



Discover the world with....
Serendib Lanka Travels Ltd

COLOMBO SPECIAL
Emirates £485 Jet Airways £490
Gulf £500 Qatar £570
Kuwait £450 Etihad £587

SRILANKAN SPECIAL
Colombo £545 Chennai £500
Tirchi £500 Kualalumpur £590
Singapore £590

INDIA SPECIAL
Chennai £460 Chennai £580
(Direct on British Airways)
Tirchi £500

CANADA SPECIAL
Toronto £510 Montreal £545
Ottawa £590

WORLD WIDE SPECIAL
Sydney £795
Melbourne £800
Oslo £155
Zurich £135
Geneva £125
New York £410
Washington DC £420

All fares mentioned are low seasons including taxes

பாடசாலை விடுமுறையின் போது இலங்கை செல்வோருக்கு விசேட சலுகைகள்



LEWISHAM : 020 8318 7775 Mob : 07983437835
15 Marischal Road, Lewisham, London SE13 5LE
(லூசியம் சிவன் கோயிலுக்கு அண்மையில்)
E.Mail : info@serendib-lanka.co.uk
IATA

# Lycamobile

**Call the world for less**



## 500 MINUTES

### Sri Lanka

**Landlines or Mobiles**

**with Lycamobile**

**Monthly Value Pack for £20**

**(VALID FOR 30 DAYS)**

**PICK UP MONTHLY VALUE PACK TODAY. JUST ENTER *139*200500#**
**from your Lycamobile & SEND**

## 100 MINUTES

### Sri Lanka

**Landlines or Mobiles**

**with Lycamobile**

**Weekly Value Pack for £5**

**(VALID FOR 7 DAYS)**

**PICK UP WEEKLY VALUE PACK TODAY. JUST ENTER *139*050100#**
**from your Lycamobile & SEND**

**For your FREE Lycamobile SIM visit www.lycamobile.co.uk or call 020 7132 0322**

Buy and Top-up online or in over 115,000 stores.

Customers may not be able to use Electronic Top-Up at all locations where the top-up logo appears

Weekly Value Pack costs £5 and gives 100 minutes or 200 minutes to calls selected International Landline or mobiles destinations and it is valid for 7days from the day activated. The Monthly Value Pack costs £20 and gives 250 or 500 or 1000 minutes to calls selected International Landline or mobile destinations and it is valid for 30days from the day activated. You may only have one type of value pack active during the appropriate subscription period. Once the value pack been activated a one-off payment, taken from the customers' top-up credit balance. The Promotion is valid from 02/05/2012 to 31/05/2012, visit www.lycamobile.co.uk or call customer service on 0207 132 0322 for more information and participating counties. This offer can't be used in conjunction with existing Lyca bundle offer.

Lyca mobile
Call the world for less

LM_UK_india_srilanka_265x320.indd 1    03/05/2012 13:24:56

# Southall Travel

## *Redefining Travel*

*Why travel with*
**Southall Travel?**

- ✓ Great value flights to Sri Lanka
- ✓ Number One Travel Agent to India, *with over 20 years experience*
- ✓ Open 24 hours a day, seven days a week. *Call us anytime*
- ✓ Price guarantee *will not be beaten on price*
- ✓ Specialists for worldwide flights and holidays with any airline, anywhere, anytime
- ✓ Fast and reliable service
- ✓ Multilingual staff *offering impartial advice*
- ✓ Trusted household brand *for total peace of mind*

ஏன்
**சவுத்ஹோல் டிராவல்**
மூலம் பிரயாணம் செய்ய வேண்டும்?

- ✓ சிறிலங்கா செல்லவிருக்கும் பயணிகளே நீங்கள் கொடுக்கும் பணத்திற்குப் பெறுமதியாக சொகுசாகவும், மனநிம்மதியாகவும் பிரயாணம் செய்லாம்.
- ✓ 20 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமுள்ள இந்தியாவிற்கான முதன்மைவாய்ந்த பிரயானமுகவர்.
- ✓ வாரத்தில் 7 நாட்களும் 24மணிநேரம் சேவை. எந்நேரமும் தொடர்பு கொள்ளலாம்.
- ✓ விலைகளுக்கு உத்தரவாதம். விலையில் எங்களை ஒருவரும் வெல்ல முடியாது.
- ✓ உலக விமான விடுமுறைப் பயணங்களையும் எங்கேயும் எப்போதும் எந்நேரத்திலும் எந்த விமானத்திலும் மேற்கொள்ள பிரசித்திபெற்ற நிறுவனம்.
- ✓ நம்பிக்கையான துரித சேவை
- ✓ பலமொழிகளிலும் தேர்ச்சிபெற் ஊழியர்கள். பாரபட்சமற்ற சேவை செய்யக் காத்திருக்கிறர்கள்.
- ✓ நிறைந்த நிம்மதியுடன் பயணம் செய்ய நம்பிக்கையான எல்லோருக்கும் தெரிந்த ஓர் நிறுவனம்

*Call Centre open 24 hours* **0844 855 8017**

*Think Travel, Think Southall Travel*

www.southalltravel.co.uk

ABTA 80626